RESERVE
894.8N
09B
KUM

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

UNIVERSITY OF CEYLON
31 JUL 1952
LIBRARY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Kumara Cuvamip Pulavar

Carittiram

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Kumāracuvāmippulavar Carittiram

உ

சிவமயம்.

by

# குமாரசுவாமிப்புலவர் சரித்திரம்.

Ci. Kaṇēcaiyar.

UNIVERSITY OF CEYLON
-7 FEB 1944
LIBRARY.

புன்னாலைக்கட்டுவன்

பிரமஸ்ரீ சி. கணேசையரவர்கள்

எழுதியது.

033613

33613

யாழ்ப்பாணம், கோக்குவில்

சோதிடப்பிரகாசயந்திரசாலையில்

பதிப்பிக்கப்பட்டது.

1925

விலை ரூபா ஒன்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



1855—1922

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்.

# முகவுரை.

---

ஸ்ரீலஸ்ரீ. ஆறுமுக நாவலரவர்கள்

தமையனார் புத்திரரும் மாணாக்கருமாகிய

## ஸ்ரீமாந். த. கைலாசபிள்ளை அவர்கள்

## எழுதியது.

---

யாழ்ப்பாணத்திலும் பிறவிடங்களிலும் இருந்துபோன எத்தனையோ தமிழ்ப்புலவர்களுடைய சரித்திரங்கள், அவைகளை எழுதுகிறவர்கள் இல்லாமையினால் நமக்கு எட்டாமற் போயின. சிறிது மின்னிக்கொண்டிருக்கும் அவர்களுடைய சிற்சில கதைகளையும் சிற்சில பாட்டுக்களையும் கேட்கும்போது எவ்வளவோ ஆனந்தம் உண்டாகின்றது. யாழ்ப்பாணத்திலே அரசகேசரி முதல் ந. ச. பொன்னம்பலபிள்ளை ஈறாக இருந்த புலவர்களுடைய முழுச்சரித்திரங்களை யாரறிவார். ஐரோப்பா முதலிய இடங்களிலாயின் அற்ப பாண்டித்தியம் படைத்தவர்களுடைய சரித்திரங்களும் பலராலும் விரித்தெழுதப்பட்டு வழங்கி வருகின்றன. இங்கேயோவெனின் அப்படியில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசகேசரி முதலான சிலருடைய சரித்திரங்களை மிகச் சுருக்கிச் சிறிதுகாட்டி வைத்தவர் சுன்னாகம் அ. குமாரசுவாமிப்புலவர். இவரை 1870-ம் வருஷமுதல் நான் அறிவேன். இவரை முதல் நான் கண்டது நாவலரையா' அவர்கள் மாளிகையிலாகும். இவர் வயசால் சில ஆண்டு எனக்கு மூத்தவர். இவர் 1870-ம் ஆண்டுமுதல் நாவல 'ரையா' அவர்கள் இருக்குமளவும் அங்கே அடிக்கடி பத்திராதிபர் சரவணமுத்துப்பிள்ளையோடு வருவதினாலும், வந்து இலக்கணவிலக்கியதருக்கம் முதலியவைகளிலே தமக்குள்ள சந்தேகங்களைக் கேட்டலையும் இவருடைய விவேகத்தைக் கண்டு 'ஐயா' அவர்கள் வியந்து தெரியாதனவற்றை விளங்கப்படுத்திச் சொல்லிக் கொடுத்தலையும் கண்டதினாலும் இவரிடத்தே எனக்கொரு பிரீதியும் நட்பும் உண்டாயின. அந்த நட்பு அக்கால முதல் குன்றாது வரவர வளர்ந்துகொண்டே வந்தது. அந்த நட்பினாலும் இவருடைய புலமைப் பெருமையினாலும் இவரை யாழ்ப்பாணச் சைவப்பிரகாச வித்தியாசாலையில் தலைமையுபாத்தியாயராய் இருக்கும்படி வைத்துக் கொண்டேன்.

போலிப்புலவர்களுடைய பிழைகளைக்கண்டு கண்டிப்பதில் இவருக்கு நிகரானவர் இல்லை. பிழைகளை வெகு சீக்கிரத்திற் காண்பார். கண்டிப்பதும் வெகு சித்திரமாயிருக்கும். இதுபற்றி இவரை Born critic என்று சிலர் சொல்வர். கண்டிக்குங்குணம் இருந்ததினாலேதான் தாம் எழுதும் நூல்களிற் பெரிதும் பிழைபாடுகள் வராதபடி சாவதானமாயிருந்தவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவரிடமிருந்த மற்றொரு விசேடகுணம் பெருமையில்லாமை. தம்மைப் பிறரெல்லாம் வந்து காணல் வேண்டும் உபசரித்தல் வேண்டும் வண்டிகளிமேலேறிச் செல்லல்வேண்டும் தம்வீட்டில் நடக்கும் சுபாசுபகருமங்களுக்கு எல்லாரும் வரல்வேண்டும் என்னும் ஆசை இவரிடம் சிறிதுமில்லை. மத்தியான வெய்யிலினும் குடை உபயோகிப்பதுதானும் மிகவருமை. இவரை முன்னறியாதவர்களுக்கு இவர்தான் குமாரசுவாமிப்புலவர் என்று சொன்னால் அவர்கள் ஒருபோதும் நம்பமாட்டார்கள்.

இத்தன்மை வாய்ந்த புலவரொருவருடைய சரித்திரம் வெளிவராமலிருப்பது தமிழ்நாட்டுக்குப் பெரியதொரு நஷ்டம். இப்புலவருடைய சரித்திரத்தை நான் எழுதல் வேண்டும் என்னும் ஆசை எனக்கிருந்தது. அந்தப்பேறு எனக்குக் கிடைக்கவில்லை. குமாரசுவாமிப் புலவர் விஷயங்களை விரித்தெழுதுவதில் விருப்பம் உடையவரல்லர். அவருக்கு எல்லாம் மிகச் சுருக்கமாய்ச் செறிவுடையவாய் வடமொழிச் சூத்திரம்போல இருத்தல் வேண்டும். இதனை அவருடை எழுத்துக்களால் யாவரும் அறியலாம். அவருக்குப் பிரியமான சுருக்கநடையிலேயே இந்நூல் அவருடைய நெடுங்கால மாணாக்கராகிய ஸ்ரீமத். கணேசையரவர்களால் எழுதப்பட்டு வெளிவரலாயிற்று. இந்நூல்புலவர் பாடிய கடினமானசெய்யுட்களுக்கு உரையுமுடைத்தா யிருத்தலினாலே தமிழில் வியுற்பத்தியடைய விரும்புவார்க்குப் பெரிதும் பயன்படத்தக்கது.

த. கைலாசபிள்ளை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# PREFACE

M. R. Ry. S. Anavaratavinayakam Pillai Avergal M. A., L. T., Tamil Professor, Ceylon University College:—

Pandit S. Ganesa Aiyar asks me to write a foreword to his life-sketch of Chunnakam Kumaraswami Pulavar and I do so with pleasure. I knew Kumaraswami Pulavar the well-known scholar of Jaffna by his numerous writings and had occasionally corresponded with him. He struck me as a profound Tamil scholar whose Sanskrit learning far from diminishing his love for his mother tongue deepened it and enabled him to enrich the Tamil literature in various ways. There is no doubt that Kumaraswami Pulavar's life was wholly consecrrted to the cause of Tamil. The sketch gives a fairly full account of his literary labours. This life is indeed worthy of being emulated by all sons of the Tamil land. Pandit Ganesa Aiyar has earned the gratitude of every one of them by presenting a sketch of such a life in elegant and impressive language.

*Colombo:*
24th July 1925.

S. Anavaratavinayakam Pillai.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# PREFACE.

M. R. Ry. K. G. Sesha Aiyar Avergal, B. A., B. L. High Court Judge, Trivandrum:—

This small memoir is a loving tribute paid to the cherished memory of a great Tamil scholar by one of his distinguished pupils. The name of Kumaraswami Pulavar of Chunnakam is amongst the most honoured in the Tamil land to-day. A close friend of the famous Arumuga Navalar and of other well-known workers in the cause of Tamil, Kumaraswami Pulavar undertook as the mission of his life the spread of Tamil learning and culture; and to that task he devoted his great talents with untiring zeal and energy. Possessed of sound and accurate scholarship alike in Tamil and in Sanskrit, he became a great teacher and an indefatigable writer; and his services were eagerly sought and freely rendered throughout Ceylon and South India for the promotion of Tamil. He did much solid work to keep aloft the flaming torch of Tamil learning; and in the following pages, in which Pandit Ganesa Aiyar has faithfully and in simple language, described the work done by his revered master, we are enabled to form a true estimate of the magnitude of that work. Pandit Ganesa Aiyar has given us a book, modest in appearance, but weighty in its contents; and I am sure that it will be welcomed by all Tamilians with delight.

Trivandrum:
10-VIII-1925.

K. G. Sesha Aiyar.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

கணபதிதுணை.

# வரலாறு.

---

தன்றோ ளொன்றி னென்று கைம்மிகூஉங்
களிறுவளர் பெருங்கா டாயினு
மொளிபெரிது சிறந்தன் றளியவென் னெஞ்சே.

தலைத் தாமரைத் தாதார் கோயி
லவளைப் போற்றுது மருந்தமிழ் குறித்தே.

இயற்றிரைப் பரவைஞாலத்து அமிழ்தினுஞ் சுவைக்குந் தமிழ்மொழி எத்துணை இனியதோ அத்துணை இனியரே, அத்தமிழ்மொழியில் வித்தகம் பெற்று உரையும் பாட்டும் மாதுரியம்பெறச் சாதுரியமொடாக்கும் உத்தமப்புலவர்களும். அவ்வுத்தமப்புலவர்களுள், சுன்னாகத்துக் குமாரசுவாமிப்புலவரு மொருவரென்பது யாவரு மொப்புமொழியொன்றன்றே! அஃது அவரியற்றிய சாணக்கிய நீதிவெண்பா, சிசுபாலசரிதமுதலிய பாட்டுரைகளையும், இலக்கணசந்திரிகை, வினைப்பகுபதவிளக்கமுதலிய இலக்கணநூல்களையும் படித்துணர்ந்தார்க்கு நன்குபுலனும். ஆதலின் அப்புலவரும் நந்தமிழுகத்துக்கு மிக இனியரே. அவ்வினியர், தங்காதன் மக்களும் கலைபயின்மக்களும் மற்றுறவுடைமக்களும் கிளைபுலம்ப இரங்கச், சென்ற துன்மதி௵ மாசி௴ இருபத்தைந்தாந்தேதியன்று தேகநீத்தனராதலின், தெரிந்த நிகழ்காலத்தார் சிறப்பாகவும், தெரியாத எதிர்

UNIVERSITY OF CEYLON
-7 FEB 1944
LIBRARY.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலத்தார் பொதுவுஞ்சிறப்புமாகவு மறிந்து பயனுற அவர்சரிதமாகிய இதனை யாமெழுதலாயினேம்.

உத்தமப்புலவராயினார் சரிதம், கற்றோர்க்கு அவரறிவுக்குந் தமதறிவுக்குமுள்ள ஒற்றுமைவேற்றுமைகளைக் கண்டு அறிவுபெறற்கும், கற்போர்க்கு அவரறிவுகண்டு அவ்வழிச்சென்று அறிவுபெறற்கும் காரணமாய்நின்று பயன்றருதல் கண்கூடு. ஆதலின் இச்சரிதம் பயன்றருமென யாமுணர்த்தல் வேண்டா.

இன்னும், உத்தமப் புலவராயினார் சரிதம் சுவதேசத்திற்கு மேன்மையுந் தருவதுண்டு. ஆகையால், இச்சரிதம் எழுதலானபயன் யாதோஎன்னு மாக்ஷேப மின்று.

இச்சரிதத்தலைவரிடம் யாங் கற்கப்புகுந்த நாட்டொடங்கி நிகழ்ந்த இவர்சரிதம் பெரும்பாலும் எமக்கே தெரிந்தனவாகும். தெரியாதனவற்றை இச்சரிதத்தலைவருடைய புதல்வர்களாகிய ஸ்ரீமத். அம்பலவாணபிள்ளை ஸ்ரீமத். முத்துக்குமாரசுவாமி என்னு மிருவரையுங் கேட்டறிந்தேம். கற்கப்புகுந்தநாளுக்கு முன்னிகழ்ந்த சரிதங்களை இவர் நண்பர் ஸ்ரீமத். வைத்தியநாதபிள்ளையிடங் கேட்டறிந்தேம்.

இச்சரிதத்திடை ஆங்காங்குவரும் தனிச்செய்யுள்களும் கடிதங்களும் சரிதத்தலைவருடைய புதல்வர்கள் உதவினார்கள். கடிதம்பாரவும் அவர்களுடைய விருப்பப்படியே சேர்க்கப்பட்டன.

இச்சரிதமெழுதத்தொடங்கியபின், எமக்குநேர்ந்த வயிற்றுவலியாலுண்டான மறதியால் யாமிதனைக் கருதியபடி எழுதவும் பிழைபார்க்கவும் முடியாதாயிற்று. அதனால் இதன்கண் நேர்ந்தபிழைகள்பல. அவற்றை அறிஞர்கள் திருத்திக் கொள்வார்களாக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்னும், இச்சரிதத்தோடு சம்பந்தப்பட்டவர்களுடையபெயர்களுள், இலக்கணமுறை நோக்காது வழங்கியன்முறை நோக்கி எழுதப்பட்டுள்ள பெயர்களில்வரும் பிழைகளையும் அறிஞர்கள் பொறுத்துக் கொள்வார்களாக.

இதனோடு அநுபந்தமாகச் சேர்க்கப்பட்ட இரங்கற்பாக்கள்யாவும் அவற்றை இயற்றிய புலவர்களின் தகுதிமுறைநோக்கியாதல், பாக்களின் தகுதிமுறை நோக்கியாதல் சேர்க்கப்பட்டனவல்ல. அவரவரனுப்பியகாலமுறைப்படி சேர்க்கப்பட்டுள்ளன. ஆதலின் அதன்கட்குறையின்று. அப்பாக்களைச் சரிதத்தலைவர்மீது வைத்த அன்பினிமித்தம் இயற்றியனுப்பிய புலவர்களுக்கு நன்றிகூறி, இன்னும், இச்சரிதத்தலைவரையும் எம்மையும் ஒருபொருட்படுத்தி இதற்கு முகவுரை அளித்த பெருந்தகையாவர்களுக்கும் பெருநன்றிகூறுகின்றாம்.

இச்சரிதத்தை அச்சிடுமாறு தத்தமக்கியன்ற பொருளையுபகரித்து ஊக்கப்படுத்திய புருடரத்தினங்களுக்கும் பெண்மணிகளுக்கும் யாஞ் செய்யக்கிடந்த கைம்மாறு எமது மனமார்ந்த அன்பேயன்றிப் பிறிதொன்றில்லை. அவர்கள் யாவரும் இச்சரிதத்தலைவரிடத்தும் தமிழ்ப்பாஷையிடத்தும் வைத்துள்ள அபிமானம் எவ்வளவென்பதை யாமுணர்த்தல்வேண்டா; அவர்கள்செய்த பேருபகாரமேயுணர்த்தும். மேலும், அவர்களுள், இராமநாதன் கல்லூரித் தமிழ்ப்பண்டிதர் திரு. சோமசுந்தரமவர்களும், இந்துக்கல்லூரி உபாத்தியாயர் வி. முத்துக்குமாரபிள்ளை M. A. அவர்களும், தாமுதவியதன்றிப் பிறரையுமுதவும்படிசெய்த பரோபகாரகுணமும் இச்சரிதத்தலைவரிடத்து வைத்துள்ள பேரபிமானமும் என்றும் எம்மாலன்றிப் பிறராலும் போற்றப்படத்தக்கனவாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | உபகரித்தவர்கள் பெயர்கள். | ரூ. | சத. |
|---|---|---|---|
| ஸ்ரீமத். | வே. கி. பொன்னம்பலம்பிள்ளை யவர்கள் Proctor, கந்தரோடை. ... ... | 10 | 00 |
| ,, | கா. அருளம்பலம் அவர்கள், Advocate, யாழ்ப்பாணம். ... | 10 | 00 |
| ,, | ச. விசுவநாதமுதலியார் அவர்கள், மாவிட்டபுரம். ... ... ... | 5 | 00 |
| ,, | K. S. சுப்பிரமணியபிள்ளை அவர்கள், Proctor, தெல்லிப்பழை. ... | 5 | 00 |
| ,, | சி. மாணிக்கத்தியாகராச பண்டிதர், சுன்னாகம். ... ... ... ... | 5 | 00 |
| ,, | சு. பஞ்சாட்சரஐயர் அவர்கள், உபாத்தியாயர், காரைநகர். ... | 5 | 00 |
| ,, | வ. மாணிக்கம்பிள்ளை அவர்கள், சுன்னாகம். ... ... ... ... | 3 | 00 |
| ,, | வி. மயில்வாகனம்பிள்ளை அவர்கள், உபாத்தியாயர், நீர்வேலி. ... | 3 | 00 |
| ,, | திருநா. அருணாசலதேசிகர் அவர்கள், வேதாரணியம். ... ... ... | 3 | 00 |
| ,, | K. வல்லிபுரம்பிள்ளை அவர்கள், வயித்தியர், சுன்னாகம். ... ... | 2 | 50 |
| ,, | அ. கந்தையாபிள்ளை அவர்கள், உபாத்தியாயர், கந்தரோடை... | 2 | 50 |
| ,, | பொ. பரமானந்தபிள்ளை அவர்கள், உபாத்தியாயர், மயிலிட்டி. ... | 2 | 50 |
| ,, | க. குமாரசுவாமிப்பிள்ளை அவர்கள், தெல்லிப்பழை. ... ... ... | 2 | 50 |
| ,, | க. சங்கரப்பிள்ளை அவர்கள், தெல்லிப்பழை. ... ... ... | 2 | 50 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| ஸ்ரீமத். T. துரையப்பாபிள்ளை அவர்கள், உபாத்தியாயர், தெல்லிப்பழை. | | 2 | 50 |
| ,, S. செல்வத்துரை அவர்கள், உபாத்தியாயர். தெல்லிப்பழை. | | 2 | 50 |
| ,, M. வைத்தியலிங்கபிள்ளை அவர்கள், Mission School, தெல்லிப்பழை. | | 2 | 50 |
| ,, வ. குமாரசுவாமிப்பிள்ளை அவர்கள், Proctor, தெல்லிப்பழை... ... | | 2 | 00 |
| ,, கனகசபைப்பிள்ளை அவர்கள், உபாத்தியாயர், கிறப்பிட்டி. ... | | 2 | 00 |
| ,, மா. பொன்னையர் அவர்கள், உபாத்தியாயர். தையிட்டி. ... | | 2 | 00 |
| ,, ச. பொன்னம்பலபிள்ளையவர்கள், தமிழ்ப் பண்டிதர், இராமநாதன்கல்லூரி. | | 2 | 00 |
| ,, திரு. சோமசுந்தரம் அவர்கள், தமிழ்ப் பண்டிதர், இராமநாதன்கல்லூரி. | | 2 | 00 |
| ,, செ. மயில்வாகனப்பிள்ளை அவர்கள், உபாத்தியாயர் ராமநாதன்கல்லூரி. | | 2 | 00 |
| ,, K. சுவாமிநாதபிள்ளையவர்கள், உபாத்தியாயர், இராமநாதன்கல்லூரி. .. | | 2 | 00 |
| ,, S. இராமச்சந்திரஐயர் அவர்கள், உபாத்தியாயர், இராமநாதன்கல்லூரி. | | 2 | 00 |
| ,, C. S. கணபதிஐயர் அவர்கள், உபாத்தியாயர், இராமநாதன்கல்லூரி ... | | 2 | 00 |
| ,, N. செல்வத்துரைப்பிள்ளையவர்கள் Principal, இந்துக்கல்லூரி. ... | | 2 | 00 |
| ,, மு. சபாரத்தினசிங்கம் அவர்கள், உபாத்தியாயர், இந்துக்கல்லூரி. | | 2 | 00 |
| ,, V. முத்துக்குமாரபிள்ளையவர்கள் M. A., உபாத்தியாயர், இந்துக்கல்லூரி. | | 2 | 00 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| ஸ்ரீமத். | A. K. இளையதம்பிப்பிள்ளையவர்கள், உபாத்தியாயர், இந்துக்கல்லூரி. | 2 | 00 |
| ,, | S சிவப்பிரகாசம் அவர்கள், உபாத்தியாயர், இந்துக்கல்லூரி. | 2 | 00 |
| ,, | N. சங்கரப்பிள்ளை அவர்கள், B. A. உபாத்தியாயர், இந்துக்கல்லூரி. | 2 | 00 |
| ,, | மு. மயில்வாகனம்பிள்ளை அவர்கள், உபாத்தியாயர், இந்துக்கல்லூரி. | 1 | 00 |
| ,, | T. குமாரசுவாமிப்பிள்ளை அவர்கள், உபாத்தியாயர், இந்துக்கல்லூரி. | 1 | 00 |
| ,, | மு. விசயரத்தினப்பிள்ளை அவர்கள், உபாத்தியாயர், இந்துக்கல்லூரி. | 1 | 00 |
| ,, | P. R குழந்தைவேலுப்பிள்ளை அவர்கள் உபாத்தியாயர், இந்துக்கல்லூரி. | 1 | 00 |
| ,, | S. நாகலிங்கப்பிள்ளை அவர்கள், உபாத்தியாயர், இந்துக்கல்லூரி. | 1 | 00 |
| ,, | T. பொன்னையாபிள்ளை அவர்கள், உபாத்தியாயர், இந்துக்கல்லூரி. | 1 | 00 |
| ,, | சி. கந்தப்பபிள்ளை அவர்கள், உபாத்தியாயர், தையிட்டி. ... | 1 | 00 |
| ,, | V. இளையதம்பிப்பிள்ளை அவர்கள், உபாத்தியாயர், தையிட்டி. ... | 1 | 00 |
| ,, | P. கந்தையபிள்ளையவர்கள், உபாத்தியாயர், மயிலிட்டிதெற்கு. | 1 | 00 |
| ,, | த. கந்தையபிள்ளையவர்கள், உபாத்தியாயர், மயிலிட்டிதெற்கு. | 1 | 00 |
| ,, | V. வயித்தியலிங்கபிள்ளை அவர்கள், உபாத்தியாயர், கட்டுவன். ... | 1 | 00 |
| ,, | K. முருகேசபிள்ளையவர்கள், உபாத்தியாயர், வீமன்காமம் ... | 1 | 00 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| ஸ்ரீமத் | M. வேலுப்பிள்ளையவர்கள். Mission School உபாத்தியாயர், தெல்லிப்பழை. | 1 | 00 |
| ,, | C. தம்பித்துரை அவர்கள், இராமநாதன் கல்லூரி ... ... | 1 | 00 |
| ,, | S. K. சதாசிவப்பிள்ளை அவர்கள், இராமநாதன் கல்லூரி. ... ... | 1 | 00 |
| ஸ்ரீமதி. | இ. தங்கம்மாள், உபாத்தியாயி, இராமநாதன் கல்லூரி | 1 | 00 |
| ,, | பொ. பூபதியம்மாள் ,, | 1 | 00 |
| ,, | க. அழகுரத்தம்மாள். ,, | 1 | 00 |
| ,, | பொ. இராசமணியம்மாள் ,, | 1 | 00 |
| ,, | செ. தங்கரத்தினம்மாள். ,, | 1 | 00 |
| ,, | சி. இராசம்மாள். ,, | 1 | 00 |
| ,, | த. சின்னத்தங்கச்சியம்மாள். ,, | 1 | 00 |
| ,, | கு. பொன்னம்மாள். ,, | 1 | 00 |
| ,, | ந. சொர்ணகாந்தியம்மாள் ,, | 1 | 00 |

இப்புருடரத்தினங்களும், பெண்மணிகளும் பெருஞ் செல்வமும் தீர்க்காயுளு மெய்தி இன்புறுமாறு எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றேம்.

புன்னாலைக்கட்டுவன்:
குரோதன ௵
புரட்டாதி ௴.

இங்ஙனம்,
சி. கணேசையர்.

# பிழை திருத்தம்.

| பக்கம். | வரி. | பிழை | திருத்தம். |
|---|---|---|---|
| 4 | ௧௭ | Cousecrrted | Cousecrated |
| ௬ | ௧௧ | ஓரு | ஒரு |
| ௫ | ௧௦ | கதம் | சரிதம் |
| ௧௨ | ௧௪ | ஏழாலை | சிறுப்பிட்டி |
| ௧௬ | ௬ | ஷிசு | விசுவ |
| ,, | ௨௦ | கேட்டாற் | கேட்டார்ப் |
| ௧௮ | ௧௧ | சி. வை. தாமோதரம் பிள்ளை | மூ. மூத்ததம்பிச்செட்டியார் |
| ௧௧ | ௨௫ | மெருஞ்ஞான | மெய்ஞ்ஞான |
| ௨௪ | ௨௭ | சுலை | கலைப் |
| ௨௧ | ௧௪ | மேலவர் | மேலைவர் |
| ௩௧ | ௧௪ | சங்கநூல் | சங்ககாலநூல் |
| ௪௨ | ௪ | ஐயா | வழுபர் |
| ௪௪ | ௪ | அரிய | உருமை |
| ,, | ௧௫ | யவை | யமை |
| ௪௯ | ௩ | க்ஷேத்திர | க்ஷேத்திரவிளக்கம் |
| ,, | ௨௮ | கைத்தன் | கைத்தம் |
| ௫௮ | ௬௧ | செல்லப்பா | செல்லப்ப |
| ௫௪ | ௧௪ | சில | இருபத்தைந்து |
| ௫௨ | ௧௫ | பட்டவை. | பட்டது. |
| ௬௨ | ௫ | தொடர்த்து | தொடர்ந்து |
| ௬௫ | ௨௫ | கயி | கை |
| ௬௪ | ௬ | பட்டினம் | பட்டணம் |
| ௬௭ | ௪ | நாலூறு | இருநூறு |
| ௬௯ | ௧௧ | செய்வார் | சொல்வார் |
| ௭௨ | ௩ | பொருளாள | பொருளாழ |
| ,, | ௧௮ | துர்க்கி | துர்மதி |
| ,, | ,, | சித்திரை | மாசி |
| ௭௫ | ௧௪ | கின்றார்கள். | கின்றனர். |
| ௭௯ | ௯௧ | ரூபா | ரூபாவிகிதம் |
| ௮௯ | ௨௦ | திட்ட | தீட்ட |
| ,, | ,, | சாவலன் | காவலன் |
| ௧௦௫ | ௭ | தே | தேச |
| ௧௦௪ | ௬ | ஆரியத்தான் | ஆரியந்தான் |
| ,, | ௧௬ | பொரு | வொரு |
| ௧௦௭ | ௨௨ | மருவு | மருவு |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்.

# குமாரசுவாமிப்புலவர் சரித்திரம்.

பூமிசை யொளிரும் பொன்னுடையதூஉம், உலகபுருடனுக்குத் தான் இடைநாடியாகி மற்றைப் பிங்கலைநாடியாகிய இமயமலையைத் தன்னிடத்தேகொண்ட பரதகண்டத்துக்கு என்றும் சமமாக விளங்குகின்றதூஉம்; முன்னாண் மதுரைமாநகரின் மன்னியசங்கப் புலவராயிருந்த பூதந்தேவனார் முதலிய புலவர்களுக்கும் பாணபத்திரன் பாரியையனைய இசைவல்லமதங்கியர்கட்கும் பிறப்பிடமாயதூஉம், மற்றும் பெற்றுள்ளதூஉமாகிய ஈழநாடெனப்படும் இலங்கைத்தீவிலே, செந்தமிழ்மாது தன் செவ்வியொடென்றும் அரசுவீற்றிருத்தலின் ஆலவாயனைய யாழ்ப்பாணத்திலே, சுன்னாகமென்னுமூரிலே, வேளாளர் குலத்திலே, உடுவிற் சந்திரசேகரபிள்ளை மரபிலே, முத்தகச்செய்யுள் பாடுவதில் வித்தகராய முத்துக்குமார கவிராயரென்பவரொருவரிருந்தார். அவர் தம்பியார் சின்னத்தம்பியார். அவர்புத்திரர் அம்பலவாணபிள்ளை. அவ்வம்பலவாணபிள்ளை செய்த வருந்தவப்பயனாக அவர் மனைவியாராகிய சிதம்பரவம்மையார்வயிற்றிலே தமிழ்மொழி வளரவும் சைவமிளிரவும் அவ்வூர் வித்துவபரம்பரை விளியாதொளிரவும் ஒரு புத்திரர் தோன்றினர். அப்புத்திரரே குமாரசுவாமிப்புலவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர் பிறந்தகாலம் சாலிவாகன சகாப்தம் ௧௭௭௫-க்குச் சமமான பிரமாதீசவருடம் தைமாதம் ௧௮-ந் திகதி ஞாயிற்றுக்கிழமை பகல் ௧ நாழிகை ௩௨-விநாழிகையில் அவிட்டநக்ஷத்திரமும் பூருவபக்கப் பிரதமையுங் கூடிய சுபகாலமாகும்.

ஜநநகாலம்.

இவர் கிரகநிலைச் சக்கரம் வருமாறு:—

| | | | |
|---|---|---|---|
| | ல சனி. | ராகு. | |
| சுக்ரன். | கிரகநிலை. | | |
| ரவி - சந் புதன். | | | |
| குரு. | கேது. | | குசன். |

இச்சுபகாலத்திலே பிறந்த இவர் அவ்வக்காலங்களிலே அன்னப்பிராசனம் சௌளம்முதலிய செய்யப்பெற்றுத் தம் நுண்மதியோடும் தண்மதிபோல் வளருங்காலத்திலே பெற்றோர்கள் தாம்நுகர்ந்த மழலைச்சொல்லின்பமன்றிக் கற்றுச்சொல்லும் சொல்லின்பமும் நுக மாறு இவருக்கு ஐந்தாம்வயதிலே வித்தியாரம்பஞ் வித்துத், தமிழ் நெடுங்கணக்குப் பயின்று சொற்பயிற் வந்தபின் மல்லாகமென்னுமூரிலுள்ள ஆங்கில வித்தியசாலைக்கு ஆங்கிலமு மருந்தமிழுங் கற்குமாறு இவனை அனுப்பினார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர் அங்கேசென்று அவ்விருபாஷையையுங் கற்று வந்தனர். வருங்காலத்திலே இவருக்குத் தெள்ளிய ஊழினால் உண்டாகிய அதிவிவேகத்தைநோக்கித், தந்தையார் மகவென்பதனாலுண்டாகிய அன்பின்மேலும் அறிவுடைமகவென்பதனாலுமோர் அன்புவைத்துச் சுவபாஷையாகிய தமிழிலுள்ள மேலான இலக்கண இலக்கியங்களைக் கற்பித்து அவையத்து முந்தியிருப்பச் செய்யாக்காற் றீமை இவருக்குச் சத்துருவென்பதையுன்னி, அவ்விலக்கணவிலக்கியங்களைக் கற்பித்தற்பொருட்டு அவற்றிலே மிக வல்லவரும், குடந்தைவெண்பாமுதலிய நூல்களை ஆக்கியவரும், அவ்வூரவருமாகிய முருகேசபண்டிதரை இவருக்கு ஆசிரியராக நியோகித்தனர். அவரும் அவற்றைக் கிரமமாகக் கற்பித்தனர். இவரும் அவர்பால் மிக அன்புவைத்து மிக நுண்ணிதாகக் கற்றுவந்தனர். அப்போது இவருக்கு வயது பன்னிரண்டு.

தமிழ் படித்தல்.

இப்பன்னிரண்டாம் வயதிலேயே வேதாரணியத்தினின்றும் அச்சுன்னாகத்தில் வந்திருந்த நமச்சிவாயக்குருக்களிடம் சிவதீக்ஷையும் பெற்றனர். பெற்றுப் பின் முருகேசபண்டிதரிடம் புராணாதிகளுங் கற்றுவந்தனர். கற்றுவருமவ்விளமையிலேயே அறிவு முதிர்வாராய்த் தமதாசிரியர்போலத் தாமுங் கவிபாடும் வன்மையுடையராயினர்.

தீக்ஷை பெறுதல்.

அப்போது இவர் இளமையான் மென்மையராயும் அறிவான்வன்மையராதலை நோக்கிய அறிஞர் யாவரும் ன்றந்தைநோற்றவனே' எனத் தம்முள்ளத்தே விய ாய்ப் புலவரென்று இவரை அழைப்பாராயினர். அது தொடங்கிப் புலவரென்னுஞ் சிறப்புப்பெயரே இவருக்கு இயற்பெயராயது. அப்பெயரைச் சிறப்பித்து யாமியற்றிய செய்யுளொன்றை இங்கே காட்டுதும். அது:

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பேரேறு தன்னைக் குமார சுவாமிப் பெருமணிக்கே
யேரே றிடுகுறி யாகிப் புலவ னெனும்பெயர்தான்
பாரேறு மற்றைப் புலவர்க்குக் காரணப் பண்புதலாற்
சீரே றிடுகுறி காரண மாகித் திகழ்ந்ததுவே" என்பது.

தமது இளமையிற்புலமையாற் றந்தைதாயர் அறிஞர் முதலிய யாவரையும் மகிழ்வித்த இவர் தமிழிலக்கணவிலக்கியங்களைக் கற்று வருங்காலத்திலே சமஸ்கிருத

**சம்ஸ்கிருதம் படித்தல்.**

பாஷை தமிழுக்கின்றியமையாததெனக்கண்டு அதனையுங் கற்க விரும்பி, அப்பாஷையில் மிக்க வன்மையுடையவரும் குற்றவிசாரணைச் சிறுமன்றில் (பொலிசுக்கோட்டில்) பாஷாந்தரீகரண உத்தியோகத்தமர்ந்தவரும், அவ்வூரவருமான நாகநாதபண்டிதரிடஞ் சென்று அப்பாஷையைக் கற்று வந்தனர். கற்றுவருங் காலத்திலே நாகநாதபண்டிதர் கற்பிட்டியிலுள்ள குற்றவிசாரணைச் சிறுமன்றிற்குப் (பொலிசுக்கோட்டுக்கு) பாஷாந்தரகாரராக அனுப்பப்பட்டனர். அப்போது பண்டிதர், இவர் படித்தற்குச் சமஸ்கிருத நூல்களிற் சிலவற்றை மொழிபெயர்த்துக்கொடுத்துச் சென்றனர். அம்மொழிபெயர்ப்பு நூல்களுள் இவர் அச்சிட்ட இதோபதேசமுமொன்று.

இன்னும் நாகநாதபண்டிதர் தமதில்லில் வந்திருக்கு மோய்வு நாட்களில் இவர் ஆங்குச் சென்று ஐயங்களைக் கேட்டுத் தெளிந்துகொள்வர்.

இவர் நாகநாதபண்டிதரிடம் படித்த நூல்களாவன:- இரகுவம்மிசம் மாகம் முதலிய காவியங்களும், முக்தபோதம் சித்தாந்தகௌமுதி முதலிய வியாகரணங்களும், சாகுந்தலமுதலிய நாடகங்களும் தருக்கசாஸ்திரங்களுமாம். இந்நூல்களைக்கற்றவளவிலமையாது, மேலும் அப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாஷையிலுள்ள வேறும் பெருநூல்களையெல்லாம் அவரிடத்தும் வேறுபண்டிதரிடத்துஞ் சென்று ஐயந்தீரக்கற்று வந்தனர்.

கற்றுவந்த இவர் சிலவாண்டினுட் பலவாண்டு கற்றவரென அறிவின்மிக்கு அந்நூல்களைத் தமிழில் மொழிபெயர்க்குந்தக்க வன்மையுடையராயினர். இவரது மொழிபெயர்ப்புவன்மையை இவர் பிற்காலத்துச் சொற்சுவை பொருட்சுவைகளொடியற்றிய மேகதூதக்காரிகை, சாணக்கியநீதிவெண்பா, சிசுபாலவதம், இராமோதந்தம் முதலிய நூல்கள் காட்டுமாயினும், அவ்வன்மையுணர்தற்பொருட்டு இவர் மொழிபெயர்த்தியற்றிய ஒருகவியையும் அதன் மூல சுலோகத்தையும் இங்கே காட்டுதும். அவைவருமாறு:—

மொழி பெயர்ப்பு.

𑌮𑌾𑌨𑍍𑌧𑌾𑌤𑌾 𑌚 𑌮𑌹𑍀𑌪𑌤𑌿𑌃 𑌕𑍃𑌤𑌯𑍁𑌗𑌾-
𑌲𑌙𑍍𑌕𑌾𑌰𑌭𑍂𑌤𑍋 𑌗𑌤𑌃
𑌸𑍇𑌤𑍁𑌰𑍍𑌯𑍇𑌨 𑌮𑌹𑍋𑌦𑌧𑍌 𑌵𑌿𑌰𑌚𑌿𑌤𑌃
𑌕𑍍𑌵𑌾𑌸𑍌 𑌦𑌶𑌾𑌸𑍍𑌯𑌾𑌨𑍍𑌤𑌕𑌃 ।
𑌅𑌨𑍍𑌯𑍇 𑌚𑌾𑌪𑌿 𑌯𑍁𑌧𑌿𑌷𑍍𑌠𑌿𑌰𑌪𑍍𑌰𑌭𑍃𑌤𑌯𑍋
𑌯𑌾𑌤𑌾 𑌦𑌿𑌵𑌂 𑌭𑍂𑌪𑌤𑍇
𑌨𑍈𑌕𑍇𑌨𑌾𑌪𑌿 𑌸𑌮𑌂 𑌗𑌤𑌾 𑌵𑌸𑍁𑌮𑌤𑍀
𑌨𑍂𑌨𑌂 𑌤𑍍𑌵𑌯𑌾 𑌯𑌾𑌸𑍍𑌯𑌤𑌿 ॥

அதன் மொழிபெயர்ப்புச் செய்யுள்:—

முந்தேறு கிருதயுக பூபதிமாந் தாதாவு முடிந்துபோனான்
நந்தேற கடலடைத்த செயராமச் சந்திரனு நடந்துவிட்டான்
வந்தேறு குருகுலத்துக் கருமன்முதற் பலமன்னர் மடிந்துபோனார்
அந்தோவிவ் விவரொடும்போகாதபுவி நின்னொடுதா னடையுமையா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவருடைய சம்ஸ்கிருத வியுற்பத்தியே தமிழிலும் இவர் பூரணபாண்டித்திய மடைந்தமைக்குக் காரணமென்று சொல்லலாம்.

இவருக்குத் தமிழ்க்குரவர் முருகேசபண்டிதரென்பதும், சம்ஸ்கிருதகுரவர் நாகநாதபண்டிதரென்பதும், இவர்தாமியற்றிய மேகதூதக்காரிகையிற் கூறிய குருவணக்கச் செய்யுளானறியலாம்

குருவணக்கச்செய்யுள்:—

தூய மயிலணிச் சுப்பிர மணியனைத் தூமச்சி
வாய குருவை முருகேச பண்டித மாமணியைப்
பாய வடகலை தேர்நாக நாத சபாமணியைக்
காய மொழிமனஞ் சேர்த்துநம் நங்கண் மணிசமென்றே.

இன்னும் இவர் முருகேசபண்டிதரிடத்தன்றி அளவையம்பதிக்கண் வசித்த கனகசபைப்புலவரிடத்துஞ் சிற்சில இலக்கணநூலைக் கற்றன[illegible]ன்றும், இவர் படிக்க அடைந்த பிரயாசம் மிக அதிகமென்றும், அக்காலத்திலே தமது தேகாரோக்கியத்தையும் அதிகஞ் சிந்திக்கமாட்டரென்றும், எவரிடத்து அரிதான நூல்களிருக்கின்றனவோ அவரிடம் வருத்தம்பாராது சென்று அந்நூல்களை வாங்கிப் படிக்க முயலுவரென்றும், அவ்வாறே மானிப்பாயில் வசித்த ஒருவரிடஞ் சென்று அரிதான நன்னூலுரை ஒன்று வாங்கிப் படித்தனரென்றும் அறிந்தோர் சிலர் கூறுவர்.

மேலும், இவர் கம்பராமாயணங் கற்கும்போது பிரபலவித்துவானும் பகவற்கீதைவசனமாதிய இயற்றி வெளியிட்டவரும் பிரபுதிலகரும் கும்பகோணத்திலுள்ள கவிச்தலமென்னுமூரிலே வசித்தவருமாகிய ஸ்ரீமாந் துரைசாமிப்பனவர்கள் அக்கம்பராமாயணத்திலுள்ள அருஞ்

ன்களைத் தொகுத்து ஒருநூலாக்கி உரையுமெழுதி அதற்குக் கம்பராமாயண அருங்கவி விளக்கமெனப் பெயரிட்டு வெளிப்படுத்தி யிருக்கின்றாரென்று சிலர் சொல்லக்கேட்டு அந்நூற் பிரதியிற் றமக்கொரு பிரதியனுப்பும்படி ஒருசீட்டுக்கவியெழுதிப் பெற்றுப் படித்தனர் என்றுங் கூறுவர். அது உண்மையாதல் அச்சீட்டுக்கவியானு முணரக்கிடக்கின்றது. அக்கவி வருமாறு:—

செம்பதும மலரோடை தங்கியாழ்ப் பாணமாந்
தேசத்தோர் பாக மாகித்
திகழ்கின்ற சுன்னாக நகரமயி லணியினிற்
றென்கலை பயின்று வாழ்வேன்
பம்புகவி பாடுறுங் குமாரசா மிப்பெயர்ப்
பண்டிதன் வரையு மோலை
பாவலர்கள் நாவலர்கள் காவலர்கள் கொண்டாடு
பாரதிபன் பிரபு திலகன்
தம்பிபொது வேயழைத் திடவருள் புரிந்திடுந்
தோன்றலுக் கன்பு மிக்கோன்
துரைசாமி மூப்ப... ன் றுரைபெறு கிருபர்கோன்
றுயமகிழ் வோடு காண்க
கம்பரா மாயணக் கருப்பொருட் பிரதியைக்
காண்பதோர் வாஞ்சை யுள்ளோன்
காவலா வொருபிரதி யாவலோ டுதவியெக்
காலமும் வாழி நீயே.

இளமையிலியற்றிய இக்கவியினுள்ள சொற்சுவை பொருட்சுவைகளும் தொடைநயங்களும் அறிஞர்களால் மிகப் பாராட்டப்படத்தக்கன. ஆதலால் பாடும்வன்மையும் இவருக்கு இயற்கையிலேயே யமைந்துகிடந்த தென்று உணரத்தக்க தொன்றுகும்.

பாடுதலிலன்றி இளமைதொடங்கிக் கண்டனங்கள் ...வதிலும் அதிசாமர்த்தியமுடையவர். அதுபற்றிப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறவெழுதுங் கண்டனங்களும் இவர்தலைப்பாரமாகும். ஏறக்குறைய சகூ ஆண்டுகளுக்கு முன்னே நம் கண்டனம் மூரில் நடந்துவந்த "இலங்கைநேசன்" என்னும் பத்திரிகையிலே இவர் தம்பெயராலும் பிறர்பெயராலும் பலகண்டனங்கள் எழுதியுள்ளார். நூல்களிலும் உரைகளிலும் எத்துணைப்பெரிய வித்துவான்களும் காண்டற்கரிய பிழைகளையும் காணுகின்றதோர் கூரிய நுண்மதி இவருக்கு இயற்கையாக அமைந்துள்ளது. அதனால் இந்தியாவிலும் இங்குமுள்ள எப்புலவருமிவருக் கஞ்சுவர். பிழையுற வழங்கிவந்த "வேத்துணையோர்பரிபாடல்" என்னும் வாக்கியத்தொடரை வடகோவை ஸ்ரீமத். சபாபதிநாவலரவர்களுக் கெழுதிய கண்டனமொன்றில் "எத்துணையோ பரிபாடல்" எனத்திருத்தி யார்க்குங் காட்டினவருமிவரே. இவர்கண்டனங்களாற்றிருந்திய கவிகளும் பல; நூல்களும் பல; புலமையும் பல; இவற்றையெல்லா மீண்டு விரிப்பிற் பெருகும். நிற்க.

இக்காலத்திலே இந்தியாவுக்குச் சென்று அங்கே பிரசங்கங்கள் செய்த ஆறுமுகநாவலரவர்கள் மீண்டு வந்து இங்குப்பிரசங்கங்கள் செய்துவந்தார்கள். அதனைக் கேள்வியுற்ற இவர் "எனைத்தானு நல்லவை கேட்க வனைத்தானு மான்ற பெருமை தரும்" என்பதைச் சிந்தித்து அவர் பிரசங்கத்தைக் கேட்கவிரும்பி ஒருநாள் தமது தமிழாசிரியர் முருகேசபண்டிதரோடும் தமது நண்பர் வைத்தியநாதபிள்ளை என்பவரோடும் சென்றுகேட்டனர். கேட்டநாட்டொட்டு அவர்பிரசங்கத்தில் மிக விருப்புடையராகி அவர் பிரசங்கஞ் செய்யுமிடங்களிலெல்லாஞ் சென்று கேட்டுவருவார். வருங்காலத்திலே நாவலரவர்களோடுப்பரிசயமுடையராயினர். நாவலரவர்களும் இளைஞராகிய இவரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டைய விவேகத்தைப் பரீக்ஷித்தறிந்து இவரிடத்திலே மிக வும் அன்புவைத்தார்கள். பின் இவரும் இடையிடையே சென்று நாவலரவர்களுடன் சம்பாஷித்துவருவதுமன்றி ஐயங்களையுங் கேட்டுவருவார். வருங்காலத்திலே இவர் இலங்கைநேசன் என்னும் பத்திரிகையில் கந்தபுராண வியாக்கியானமென்னும் ஓர் கடிதமெழுதி வெளிப்படுத்தி னர். அதனைக்கண்ட கந்தபுராண உரையாசிரியர்கள் சிலர் மாறாகக் கடிதங்கள் வரைந்தார்கள். அக்கடிதங்களுக்கு உத்தரமாக ஓர் கடிதம் நாவலரவர்கள் எழுதினார்கள். இவர்கடிதமும் நாவலரவர்கள் கடிதமும வருமாறு:—

## கந்தபுராண வியாக்கியானம்.

கந்தபுராணத்து வள்ளியம்மை திருமணப்படலத் துக்கு விருத்தியுரைபேசும் உரையாசிரியர்களே!

நீவிர் எத்தனையோ பெண்சனங்களும் ஆண்சனங் களும் புராணங்கேட்டற்கண் நம்பிக்கையோடும் வந்து உங்கள் வாய்களையே எதிர்பார்த்திருக்க நீவிர் அவர்களுக் குக் கொஞ்சமும் விளங்காமல் வெளிப்படையான இயற் சொற்களையெல்லாம் திரிசொற்களாக மாற்றிச் சொல்லுகி றீர்கள்! பூ என்பதற்கு வீ என்கிறீர்கள்! மறைந்துபோ னார் என்பதற்கு அந்தர்த்தானமாயினார் என்கிறீர்கள்! சித் தியாரிற் சில செய்யுள்களையும் அவற்றின் கடினவாக்கிய மமைந்த பெரிய வியாக்கியானங்களையும் எடுத்துப்படிக்கி றீர்கள்! சிலகவிகளில் வேதாந்தசித்தாந்தப் பிரசங்கமுஞ் செய்கிறீர்கள்!

அதிகாரம், அவாய்நிலை முதலியவற்றால் வேண்டுமி டத்து உரைகளை வருவிந்துரைக்கவேண்டு மென்னும் விதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யினையறியாது, வாயில் வந்தனவந்தனவற்றை விரித்து அங்ஙனம்; இங்ஙனம்; என்புழி; இருப்புழி; ஈண்டுவிரிப்பிற் பல்கும்; ஆண்டுக்காண்க; என்பன முதலிய இலக்கணச்சொற்களையும் இடையிடைவைத்து நெடுநேரஞ் சொல்லி எக்கவிகளிலும் வித்தியாகம்பீரம் விளக்குகிறீர்கள்! அரியனவும், இன்றியமையாதனவுமாகிய சில அணிகளையெடுத்துக் கூறுதலே சிறப்பெனவறியாது தன்மையணி, உவமையணி, ஒட்டணி, பாவணி முதலிய பலவணிகளையுஞ் சொல்லுகிறீர்கள்! தேமா, புளிமா, கருவிளம் முதலிய யாப்பிலக்கணவாய்பாடுகளையுங் கூறுகிறீர்கள்! அகப்பொருள் விளக்கம், நன்னூல் முதலியவற்றிலே நெட்டுருப்பண்ணிய சூத்திரங்களையும் நெடுநேரம் படிக்கிறீர்கள்!

எத்தனையோசனங்கள் ஏனிங்கே வந்தோமென்று பெருமூச்சுவிட நீவிர் ஒரு மூச்சும்விடாமல் வாணன்கோவையுந் திருக்கோவையும் படிக்கிறீர்கள்! சில கவிகளில் ஞானக்கருத்துஞ் சொல்லுகிறீர்கள்! வேங்கைமரமாதல், காந்தருவமணஞ்செய்தல் முதலியவற்றிற்கு ஒன்றும்பேசாமல், இங்ஙனம் மணமயர்ந்தது உலகில் இல்லறம் நிகழ்தற்கென்று சொல்லித் "தென்பாலுகந்தாடும்" என்னுந் திருவாசகத்தையும் "போகியாயிருந்துயிர்க்குப் போகத்தைப்புரிதலோரார்" என்னுஞ் சித்தியாரையும் பலவிடத்தும் பழம்பாடமாகப் படிக்கிறீர்கள்! முராரி என்பதற்கு முரனென்னும் அசுரனுக்குப்பகைவன் என்கிறீர்கள்! தேவர் என்பதற்கு ஒன்றுஞ்சொல்லாது சும்மாவிடுகிறீர்கள்!

உங்கள் விருத்தியுரையாற் சிலவிடங்களிற் "செந்தினையியுந்தேனும்" என்றபாட்டுவரை "வைகறைவிடியல் செல்ல" மற்றநாளினும் மத்தியானமாகின்றதே! இப்படி விருத்தியுரைகூறும் நீவிர் உரையில்லாத ஒரு நூலுக்கா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வது இப்படலத்துக்காவது உரையெழுதி வெளிப்படுத்த லாமே! அங்ஙனஞ் செய்யாததென்னையோ? உரையெழுதி வெளிப்படுத்தினாற் பொருளும் புகழும் ஒருங்கு சித்திக் குமே!

## கடிதங்கட்குத்தரம்.

கடிதர்களே! பலவூர்களிலுமுள்ள பலரையும் பொதுப்படக்கண்டித்த கண்டனத்தை நீங்கள் உங்களுங் கள்மேலேயிட்டு கோபிப்பது நீதியன்று. புராணப்பிரசங் கசபையிலே வந்திருக்கிறவர்களுள்ளே சிலரொழிய மற்ற வர்களெல்லாரும் கல்வியில்லாதவர்களே. ஆதலால் மிக வெளிப்படையாகிய நடையிலே பிரசங்கிப்பதே முறை. அங்கே இலக்கணங்களெடுத்துச் சொல்லுவது தகுதி யன்று. உங்கள் பிரசங்கங்கள் தங்களுக்கு விளங்கவில்லை யென்றே வெகுசனங்கள் குறைசொல்லிக்கொண்டு திரிகி ருர்கள். சிவபுராணபடனவிதியிலே இருபத்தேழாம்பிரி வைப்பாருங்கள். சிவஞானசித்தியார்முதலிய சித்தாந்த நூல்கள் படித்தற்குரியாரிவரென்பது திருக்கோவையா ருரையிறுதியிலுள்ள தமிழ்ப்புலமையிலே பதினைந்தாம் பிரிவிலும், இரண்டாஞ் சைவவினவிடையிலும் கண்டு கொள்ளக்கடவீர். எங்காயினும் இன்றியமையாதவிடத் திலே ஒருதுண்டுவாக்கியம் உதாகரிப்பது தகுதி.

இன்னும் நாவலரவர்கள் இவரெழுதிய கண்டனங் களையும், கவிகளையும் மிகப்புகழ்ந்து பாராட்டுவர். அதனை அவர்மீதுபாடிய இரங்கற்பாவிலே "என்கடிதமென்கவிதை யார்க்குமினிதென்று - நன்குறவே பாராட்டும் நாவலனார் - எங்கேயோ" என்று இவர் கூறியதனுலுணர்க.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு, நாவலரவர்களும் புகழ்த்தக்க கண்டனங்களெழுதியும், கவிகள்பாடியும் மேன்மைபெற்று வருங் காலத்திலே தாமுஞ் சைவசமயவிருத்தியின் பொருட்டுப் பிரசங்கஞ் செய்யவிரும்பி, அதற்கின்றியமையாதனவாயுள்ள சிவஞானபோதம் சிவஞானசித்தியார் முதலிய சைவசமய நூல்களையெல்லாந் தாமேபடித்து, அவற்றில் வருமையங்களை நாவலரவர்களிடத்தும், அவர்கள் மாணவரும் சமய நூலறிவிற் சிறந்தவருமான இணுவையம்பதி பிரமஸ்ரீ. நடராஜையரவர்களிடத்துஞ் சென்று கேட்டுவந்தனர்.

இக்காலத்திலே இவ்வியாழ்ப்பாணத்திலுள்ள ஏழாலையென்னுமூரில் வசித்தவரும், தமிழபிமானம்பூண்டு ஏட்டுப்பிரதிகளாயிருந்த தொல்காப்பியம் (நச்சினார்க்கினியம்), கலித்தொகை முதலிய சங்கச்சான்றோர் நூல்களையும், சூளாமணி, இலக்கணவிளக்கம் முதலிய பிற்றைச்சான்றோர் நூல்களையும் அச்சுப்பிரதிகளாக்கித் தமிழுலகிற்கு உபகரித்தவருமாகிய இராயபகதூர் ஸ்ரீமான் சி. வை. தாமோதரம்பிள்ளையவர்கள் சைவசமய விருத்தியையும் தமிழ்மொழிவளர்ச்சியையும் குறித்து அவ்வூரிலே கிறீஸ்தாப்தம் 1878-ம் ஆண்டுக்குச் சரியான தாதுவருஷத்து ஆவணிமாசத்திற் பத்தாந்திகதி புதவாரத்திலே ஒரு தமிழ் வித்தியாசாலையைத்தாபித்து அதில் முருகேசபண்டிதரையும் இவரையுமே ஆசிரியர்களாக நியோகித்தனர். அப்போது இவருக்குவயசு ௨௩.

ஏழாலைவித்தியாசாலை தொடங்கியகாலம் மேற்காட்டப்படும் வெண்பாவாற் புலப்படும்:—

தாது வருடந் தனிலா வணிபத்தாந்
தேதி புதவாரந் தீபநா—ளோது புகழ்த்
தாமோ தரேந்திரனார் தர்மவித்தி யாசாலை
காமாரம் பஞ்செய்த நாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருவரும் கற்பித்துவருங்காலத்திலே, சிறிதுகாலத்தின்பின் முருகேசபண்டிதர் அவ்வித்தியாசாலையைவிட்டு வேறிடஞ்செல்ல, இவரே தலைமையாசிரியராகவிருந்து கற்பித்துவந்தனர். வரும்போது மாணவர்களை அவ்வித்தியாசாலையதிபராகிய தாமோதரம்பிள்ளையவர்கள் வேண்டுகோட்கிணங்கி முதலில் ஆறுமுகநாவலரவர்கள் வந்து பரீக்ஷித்தார்கள். பரீக்ஷித்தபொழுது மாணாக்கர்கள் விடைகூறிய திறமையை நோக்கி நாவலரவர்கள் இவர் படிப்பித்த திறமையை மிக வியந்து கூறினார்கள். இப் பரீக்ஷை நடந்த காலம் தாதுவருடத்து மார்கழிமாதம். கிறீஸ்தாப்தம் 1878.

இரண்டாவதாகப் ஈசுரவருஷத்துப் புரட்டாதி மாதத்தில் முருகேசபண்டிதர் வந்து பரீக்ஷித்தனர். அப்போது மாணாக்கர்கள் அவர் வினாவிய வினாக்களுக்கெல்லாம் தவறின்றி விடையிறுத்தார்கள். அப்பரீக்ஷையைக்குறித்து முருகேசபண்டிதர் ஓர் அபிப்பிராயமெழுதி இலங்கைநேசனில் வெளிப்படுத்தினர். அவ்வபிப்பிராயம் வருமாறு:-

## ஏழாலைச் சைவப்பிரகாசவித்தியாசாலை.

இது சென்னபட்டணத்தில் பி. ஏ. பி. எல். பட்டம் பெற்று ஜெனறல் ஐக்கௌண்டென் என்னும் உத்தியோகமுடையராயிருக்கும் ம. ா. ா. ஸ்ரீ. சி. வை. தாமோதரம்பிள்ளையவர்களால் தாபிக்கப்பட்டு இப்போது ஒருவருடகாலமாக நடைபெற்றுவருகின்றது. இவ்வித்தியாசாலையில் முதற்பரீக்ஷை சென்றவருடத்து மார்கழிக்கடையில் ஸ்ரீலஸ்ரீ. நாவலரவர்களாலும் இரண்டாம் பரீக்ஷை இந்த மாதம் ௨௨-ந் தேதியில் எம்மாலும் நடத்தப்பட்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதற் பரீக்ஷையிற் காணப்பட்டபிள்ளைகளின் தொகை நூறு. நோயின் கலக்கத்தினாலும், பஞ்சத்தின் வருத்தத்தினாலும் பிள்ளைகள் முந்தியதொகையிற் சுருங்கியிருந்தனராயினும், இரண்டாம் பரீக்ஷையிலும் அறுபதிற் குறையாமல் இருந்தார்கள். இவ்வளவு பிள்ளைகளுக்கும் உபாத்தியாயர் ஒருவரேயாகவும், இலக்கணமுதலிய பாடங்களில் வினவிய குறுக்குக் கேள்விகளெல்லாவற்றிற்கும் பிள்ளைகள் தவறாமல் விடைசொன்னார்கள். தமதூரிலே பிரபுவாகிய பிள்ளையவர்கள் இவ்வித்தியாசாலையைத் தாபித்து நடத்திவருவதுபோல, அந்த அந்த ஊரிலேயிருக்கும் ஒவ்வொரு சைவப்பிரபுக்களும் செய்துவருவார்களாயின் சைவசமயம் தாழ்ச்சியடைதற்கு இடமுண்டாகுமா?

பிரபுக்களே!

இவ்வாறு நீங்களும் செய்தா லென்ன?

வெண்பா.

தாமோ தரேந்திரனார் செய்யுந் தருமமெண
வனீவிர் செய்யா திருக்கின் றீர்—ஓ!மகிமை
பெற்றபெரி யோரே பெரிதோ நுமதுபொருள்
மற்றவருக் கீந்து வரல்.

சுன்னாகம்
ஈசுர௵ புரட்டாதிமீ
உச உ.

இங்ஙனம்,
பூ. முருகேசபிள்ளை.

பின்னும், இவர் கற்பித்துவருங்காலத்தில், இடையிடையே வித்துவசிரோமணி ஸ்ரீமத். ந. ச. பொன்னம்பலபிள்ளையும், ஸ்ரீமத். ச. சபாரத்தினமுதலியாரும், ஸ்ரீமத். சரவண முத்துப்புலவரும் வந்து பரீக்ஷித்தார்கள். பொன்னம்பல

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளை தாம் பரீக்ஷித்தபொழுது, மாணவர்கள் தடையின்றி விடைகூறிய வன்மையைக்குறித்து ஓர் அபிப்பிராயமெழுதி இலங்கைநேசன் என்னும் பத்திரிகையில் வெளியிட்டனர். அது வருமாறு:—

## ஏழாலைச்

## சைவப்பிரகாசவித்தியாசாலைப்பரீக்ஷை.

ஸ்ரீமாந். சி. வை. தாமோதரம்பிள்ளையவர்களால் ஏழாலையென்னு மூரிலே தாபிக்கப்பட்ட சைவப்பிரகாச வித்தியாசாலையிற் கற்கும் மாணவர்கள் இந்தமாதம் பதினைந்தாந்திகதி புதன்கிழமை எம்மாற் பரீக்ஷிக்கப்பட்டார்கள். மேல்வகுப்பு மாணவர்கள் படிக்கும் பாடங்களாவன:- தொல்காப்பியம், நன்னூல், திருவள்ளுவர்குறள், முல்லையந்தாதி, கப்பாந்தாதி, தணிகைப்புராணம், கந்தபுராணம், இரகுவம்மிசம் என்னுமிவைகளாம். இவைகளுள், எவ்வெப்பகுதிகளிலும் வினவிய வினக்களுக்கெல்லாம் மாணாக்கர்கள் தக்க விடையளித்தார்கள். இத்துணைச்சாமர்த்தியராக, அதிபிரயாசத்தோடு கற்பித்த உபாத்தியாயர் ஸ்ரீ குமாரசுவாமிப்புலவருடைய வித்தகம் எவராலும் வியக்கற்பாலது.

இங்ஙனம்,

கர வருஷ புரட்டாதிமீ. } ந. ச. பொன்னம்பலபிள்ளை.

இவ்வித்தியாசாலையிலே இவரிடத்துப்படித்துப் புலமையடைந்தவர்கள் தெல்லிப்பழை வித்துவான் சிவானந்தையரும், அவ்வூர் இ. பாலசுப்பிரமணியஐயரும், அவ்வூர் வ. சுப்பிரமணியபிள்ளையும், அவ்வூர் க. சங்கரப்பிள்ளையும், அவ்வூர் கா. மயில்வாகனம்பிள்ளையும், மாவிட்டபுரம் ச. விசுநாதமுதலியாரும், தையிட்டி மா. பொன்னையரும், வண்ணார்பண்ணை சைவப்பிரசாரகர் மாணிக்கத்தியாகராசபண்டிதரும், ஏழாலை வி. தம்பையபிள்ளையும், கொக்குவில் வாசரும் மானிப்பாய் இந்துக்கல்லூரித் தமிழ்ப்பண்டிதருமாகிய இளையதம்பியும்முதலாயினோர். இவர்களுள்ளே இயற்கையான நுண்மதியோடு நூலறிவினும் மிக்குப்பிரபலம்பெற்றவர் சிவானந்தையரே. அவர் சம்ஸ்கிருத தர்க்கசங்கிரகத்தை அதனுரைகளாகிய நியாயபோதினி பதகிருத்தியம் அன்னம்பட்டீயம் என்னுமிவற்றோடும் அன்னம்பட்டீயத்தினுரையாகிய நீலகண்டீயத்தோடும் மொழிபெயர்த்து அச்சிட்டுவெளிப்படுத்தியிருக்கின்றனர். புலியூர்ப்புராணம், புலியூரந்தாதி, சனிதுதி முதலிய பாடியுமிருக்கின்றனர். இச்சிவானந்தையரும் மாவிட்டபுரம் மயில்வாகனம்பிள்ளையும் தேகவியோகமடைந்தனர். ஸ்ரீமான் மாணிக்கத்தியாகராசபண்டிதர் கேட்டாற் பிணிக்குந் தகையவாய்க் கேளாரும் வேட்பமொழியும் சொல்வன்மையோடு இவ் வீழநாட்டிலுள்ள பற்பல வூர்கடோறும் கதாப் பிரசங்கங்களுஞ் செய்துவருகின்றனர்.

இவ்வாறு பற்பல மாணவர்களைக் கற்பித்துத் தமிழ்ப்பாஷையை விருத்திசெய்ததேயன்றி, இவர் அவ்வித்தியாசாலையினும் பிறவூர்களிலுமுள்ள வித்தியாசாலைகளினும் ஆலயங்களிலும் பற்பல பிரசங்கங்கள் செய்து சைவசமயத்தைப் பரிபாலித்தும் வந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்காலத்திலே இவரது நண்பரும் இவரால் திருக்கரசைப்புராணத்திற்கு உரையெழுதுவித்த அச்சிட்டவரும் அதிகாரபுருடரும் திருக்கோணமலைவாசருமாகிய ஸ்ரீமான். வி. அகிலேசபிள்ளை யென்பவரால் அழைக்கப்பட்டு இவரும் இவர் சிரமித்திரர் பிரமஸ்ரீ. ந. வே. கனகசபாபதி ஐயரவர்களும் சென்று திருக்கோணமலையிற்றங்கி அங்குப் பற்பல பிரசங்கங்கள் செய்தனர். செய்து புகழ் பொருள் பூசைகளும் பெற்று மீண்டு யாழ்ப்பாணம் வந்தனர். இவர் பிரசங்கஞ்செய்வதில் அதிகம் வாக்குச்சாதுரியமிலரே யாயினும் பேசுவன சிலவும் அவற்றின் குணங்கள் பலவுமாகும். அவற்றின் குணங்களாவன:—வழுவின்மை, சுருங்குதல்; விளங்குதல், இனிதாதல், விழுப்பயன்றருதல் என்றிவைமுதலாயின.

"பலசொல்லக் காமுறுவர் மன்றமா சற்ற
சிலசொல்ல றேற்றா தவர்."

**பத்திரிகைக்கு விஷயமெழுதல்.**

இன்னும் சைவசமயபரிபாலனங்குறித்தும் தமிழபிவிருத்தி நோக்கியும் பற்பல விஷயங்களெழுதிப் பத்திரிகைகளில் வெளிப்படுத்தியும் வந்தார். அக்காலத்திலே இந்தியாவிலும் இலங்கையிலுமுள்ள அறிஞர்கள்பலர் பத்திரிகைகள் நடத்திவந்தார்கள். அவர்கள் இவரெழுதும் விஷயங்களை நோக்கி அவற்றிலே சுருங்கச்சொல்லல் முதலிய பத்தழகும் வாக்கியத்தொடர்ச்சியும் விஷயச்சிறப்பும் தருக்கமுறையும் அமைந்திருத்தல் கண்டு மகிழ்ந்து தத்தம் பத்திரிகைக்கு விஷயதானஞ்செய்யும்படி கடிதம் எழுதி வேண்டினார்கள். இவரும் அக்கடிதங்களுக்கிசைந்து அவர்களுடைய பத்திரிகைகளுக்கு விஷயங்கள்பல வெழுதி அளித்தனர். இன்னும் இவர் அப்பத்திரிகைகளிற் றீட்டிய தமிழ்மரபையும் சைவசமயமாண்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யையும் நாட்டுங்கண்டனங்களும் மிகப்பலவாகும். அவைக ளைப் படித்துப் புகழ்ந்தோரும் மிகப் பலராவர்.

இவர் பத்திரிகைக்கெழுதிய விஷயங்களுள் சில மொழிபெயர்ப்பு. மொழிபெயர்க்கப்பட்டன - சாந்தோக் கிய உபநிடதம் பிரச்நோபநிடதம் சூதசங்கிதை முத லியன. இவர் மொழிபெயர்த்த விஷயங்களுட் பல உதய பானு விஞ்ஞானவர்த்தனி என்னும் பத்திரிகைகளில் தொ டர்பாக வெளிவந்தன. அப்போது உதயபானுவுக்குப் பத் திராதிபராயிருந்தவர் ஸ்ரீமான். சு. சரவணமுத்துப்புல வர். விஞ்ஞானவர்த்தனிக்குப் பத்திராதிபராயிருந்தவர் ஸ்ரீமான். சி. வை. தாமோதரம்பிள்ளையவர்கள்.

இலங்கைநேசனில் வெளிவந்த விடயங்கள் வேறும் பல. அவை பன்னகவரி சைவமகத்துவதுரீகரணம் ஆதியன. பன்னகவரி என்பது இந்தியாவினின்றும் இங்கு வந்து கத்தோலிக்கசமய போதனைசெய்த அருளப்பமுதலியா ரைக் கண்டித்தெழுதியதோர் விஷயம்.

உதயபானுவில் வெளிவந்தன: கடோபநிடத முக வுரையும், அதன் மொழிபெயர்ப்பிற் சில பகுதியும், சாந் தோக்கிய உபநிடத மொழிபெயர்ப்பும், ஈசோபநிடத மொழிபெயர்ப்பிற் சில பாகங்களுமாகும்.

இன்னும், கீரிமலைச் சிவன்கோவில் புதிதாகக்கட்டப் பட்ட காலத்திலே அச்சிவன்கோயிலைக் குறித்தும் நகுல தீர்த்தத்தைக் குறித்தும் அவற்றின் மான்மியங்களைக் கூறும் சம்ஸ்கிருதம் தமிழ் என்னும் இரண்டிலுமுள்ள நூற்பிரமாணங்களோடு ஒரு விஷயம் எழுதி அப்பத்திரி கையில் வெளிப்படுத்தினார். இன்னும் கிறீஸ்துதேவனா? என்னுமோர் விஷயமும் வேறும் வியவகாரபதமுதலிய

விஷயங்களும் எழுதி அதில் வெளிப்படுத்தினர். அவற்றை ஆங்கு நோக்கியுணர்க.

விஞ்ஞானவர்த்தனியில் வெளிவந்தன பிரச்சினோப நிடதமுதலியன. இவ்வுபநிடதத்தினின்றும் மொழிபெயர்க் கப்பட்ட விஷயங்கள்:

க. பிரஜாபதிக்கும் சிருட்டிக்குமுள்ள சம்பந்தம்.
உ. சரீரத்திற்கும் பிராணனுக்குமுள்ள சம்பந்தம்.
ரு. சாக்கிரம்.
ச. சொப்பனம்.
ரு. சுழுத்தி.
சு. கேவலம்.
எ. தூலசூக்கும பூதாதி சிருட்டிவகைகள்.
அ. ஓங்காரம் (பிரணவம்).

விஞ்ஞானவர்த்தனி தொடங்கிய காலத்தில் அதன் மேல் இவரால் இரண்டு வாழ்த்துக்கவிகள் பாடியளிக்கப் பட்டன. அவைவருமாறு:—

வெண்பா.

பொய்ஞ்ஞான நீங்கப் புலவ ருளங்களிக்க
மெய்ஞ்ஞான மோங்க விளங்குசிவ—விஞ்ஞான
வர்த்தனியாம் பத்திரிகை மல்கக் கரிமுகத்துக்
கர்த்தன்வி நாயகன்றாள் காப்பு.

கட்டளைக்கலித்துறை.

இஞ்ஞாலத் துற்றிடு மன்பருக் கன்பி னிசைந்தமல
வஞ்ஞான நீக்கும் பரம்பொரு ளேநல் லருட்குருவாய்
மெஞ்ஞான யந்திர சாலையின் பாங்கர் விரவிவரு
விஞ்ஞான வர்த்தனி பானுவி ஞேங்கி விளங்குறவே.

இவைபாடியபொழுது வயது 28. அப்போது கிறீஸ்தாப்தம் 1882.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதன்பின் வதுளைக்கதிரேசர் ஊஞ்சலும் கதிரேசர் பதிகமும் அக்கோயில் மானேஜர் வேண்டியபடி இவராற் பாடப்பட்டன. கவிகளின் சிறப்பு நோக்க அவற்றுள் ஒவ்வொன்று காட்டுதும்

## கதிரேசர்ஊஞ்சல்.

மாமேவு தென்னிலங்கைத் தீவு தன்னின்
மலைவளமும் நதிவளமும் பெரிது வாய்ந்த
காமேவு வதுளைநகர்க் கோயில் வைகுங்
காட்சியுள கதிரேசக் கடவு ளின்மேற்
பாமேவு மூஞ்சலிசை யினிது பாடப்
பரமனொடு பார்ப்பதிக்குப் பால னாகித்
தேமேவு யானைமுகத் தோடு வந்த
தேவனிரு சரணமுடி சேர்த்து வாமே.

## கதிரேசர்பதிகம்.

### காப்பு.

செந்திருவா ழும்வதுளைச் செய்யகதி ரேசருக்குப்
பைந்தமிழா லோர்பதிகம் பாடவருள்—சந்தமறை
முப்பொருளே யற்புதனே மூத்ததந்தி மாமுகனே
கற்பகமே யெற்கினிது காண்.

### நூல்.

மணிமேவு பிரகாச மிகுகனக முடிகளா
மன்னுதின மணிகளோடு
ஔர்விழிக ளீராறு மோராறு குணமெனும்
மாறுத கருணைமுகமுந்
திணிமேவு மேருமலை யென்னவுரை செய்திடுஞ்
செய்யமுந் நான்குதோளுந்
தேவியுமை யம்மையின் திருமுலைப் பாலுறச்
செம்பவள மானவாயும்

அணிமேவு நீபமொடு செச்சைமலர் மாலையு
　　மழகுற்ற திருமேனியும்
ஆண்டலை சேவலுங் கொடியும்வேற் படையுமா
　　யடியனேன் முன்னர்வந்து
பணிமேவு மன்பருக் கருள்செயும் பண்புபோற்
　　பற்றுவைத் தருள்செய்கண்டாய்
பச்சைமயி லேறுமுரு கேசனே வதுளையம்
　　பதியிலுறை கதிரேசனே.

கதிரேசர்பதிகமும் ஊஞ்சலும்பாடி அச்சிட்ட ஆண்டிற்கோராண்டின் பின் (அஃதாவது விய௵ வைகாசி மாதத்தில்) இவருடைய தந்தையாராகிய அம்பலவாண பிள்ளையவர்கள் சிவபதமடைந்தனர். அப்போது இவருக்கு வயது 31. அம்பலவாணபிள்ளையவர்கள் சைவசமயத்தில அதிசம்பற்றுள்ளவர் ஒழுக்கத்தின் விழுப்பமுடையவர். சமயதீக்கையும் விசேடதீக்கையும் பெற்றவர். இத்துணை மேன்மைபெற்ற அவர்பிரிவு இவருக்கன்றி இவர்சுற்றமித்திரர்களுக்கும் பிறர்க்கும் பெருந்துயரத்தை விளைத்தது. அம்பலவாணபிள்ளையினுடைய குணமாண்புகளைப் புகழ்ந்து தென்கோவை வித்துவான் ஸ்ரீமத். சபாபதிப்பிள்ளையென்பவர் சில சாமகவிகள் பாடியிருக்கின்றனர். அவற்றுள் அவர் இந்றத தினத்தைக்குறிக்கும் கவியையும் அவர் குணமாண்புகளைக் குறிக்குங் கவியடியொன்றையும் இங்கே காட்டுதும்:-

## இறந்ததினத்தைக் குறிக்குங்கவி.

சீர்வியம் வைகாசி சேரபர நற்றசமி
பார்வியா ழக்கிழமை பற்றுதினம்—ஊர்விடையின்
அம்பலவா ணன்கருணை யம்பலர்வா ணுள்சுன்னை
அம்பலவா ணன்பா லமி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### அம்பலவாணபிள்ளையின்
### குணமாண்புகளைக் குறிக்குங் கவியடி
### விருத்தம்.

பலரயன நிலவவருள் வலநிதிகொள் குலனுறுச
 பலவுழவர் மரபில் வந்தோன்
பண்பழகு மண்பழகு பலகலைகொள் புலநிலைகொள்
 பாக்கியர் தேக்கு பாத்ரம்
பத்திகொள் சின்னத்தம்பி மெய்த்தவம் விளைத்தெய்து
 பயனனைய பசிய பாலன்
பாவரைய ஞானமுறு பாவனைபின் ஞானசிவ
 பாதமலர் பத்தி பண்ணி
பற்றினுட னக்கமணி பற்பமிவை நித்தமணி
 பரிசவழு காது பரவி
பகர்துதிய தீக்கைகொடு பகலிரவு நீக்கமறு
 பரமனை வணங்கு பரிசான்
பாரினுயர் கற்பிலகு பாரியொடு மிற்கிழமை
 பண்புற நடாத்து சீலன்
பன்னுமம் பலவாண னென்னுமொரு நாமமுறு
 பரவுபுகழ் விசய சிங்கம்.

தந்தையாரிறந்த பின்பு அவருக்குச் செய்யவேண்டிய கடன்களையெல்லாஞ் செய்து முடித்து இவர் முன்போலத் தாமோதரம்பிள்ளையவர்களுடைய வித்தியாசாலையிலேயே படிப்பித்துக்கொண்டிருந்தனர்.

இருக்குங்காலத்திலே சம்ஸ்கிருத ஆசிரியர் நாகநாத பண்டிதராற்றமிழில் மொழிபெயர்க்கப்பட்ட இதோபதேசம் என்னும் நூலை அச்சிடமுயன்றனர். அப்பொழுது இவர் நண்பர்களும் பிரபுக்களுமாயிருந்த சிலர் பொருளுபகரிப்பதாக வாக்களித்தனர். அதனாலதனை யச்சிடுவதில் அதி முயற்சியுள்ளவராய் அதனை முதனூலோடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒப்புநோக்கி வழுவறத் திருத்திக்கொண்டு அதனையச்சிடு மாறு சென்னபட்டணஞ் சென்றனர். அப்பொழுது அங்கு உத்தியோகத்தமர்ந்தவரும் இவர் படிப்பித்த ஏழாலை வித்தியாசாலைக்கு அதிபரும் ஆகிய ஸ்ரீமான் சி. வை. தாமோதரம்பிள்ளைபவர்கள் இவரை உபசரித்து இவருக்கு வேண்டிய உதவிகளையுஞ் செய்தனர். இவரும் இதோபதேசம் அச்சிட்டு முடியும்வரைக்கும் பிள்ளையவர் களுடன் இருந்து வித்தியாசாலையைப்பற்றிய விஷயங்க ளையும் பேசிக்கொண்டு இதோபதேசம் அச்சிட்டு முடிந்த வுடன் சிதம்பரமுதலிய தலங்களைத் தரிசித்துக்கொண்டு தமதூர்வந்து சேர்ந்தனர். இது அச்சிட்டகாலம் வியவருடம் ஆவணிமீ. அப்போது கிறிஸ்தாப்தம் 1886. இவர் இவ்வி தோபதேசத்தைத் திருத்தி அச்சிட்டமையைக் குறித்து ஸ்ரீமான் கு. கதிரவேற்பிள்ளை ஸ்ரீமான் த. செல்லப்பா பிள்ளை முதலியோர் அபிப்பிராயங்கூறியுள்ளார்கள் அவை அதன் முகத்திலேசேர்த்து அச்சிடப்பட்டுள்ளன. ஆங்கு நோக்கி யுணர்க.

இதோபதேசம் அச்சிட்டபின் இவர் அச்சிட்ட நூல் துணைவைப்பதிகம். இஃதிவரே இயற்றியது. இஃதி யற்றுங்காலத்திலே இவரைத் தென்பாண்டிச் செங் கோட்டை ஆரிய நல்லூர்ச் சித்தாந்தசைவராகிய ஸ்ரீமான் இலக்குமணப்பிள்ளை யென்பவர் சங்கரபண்டிதர் கத்திய ரூபமாகச் செய்த மிலேச்சமதவிகற்பம் என்னும் நூல் செய்யுள்வடிவாக இயற்றப்படின் யாவர்க்குமெளிதில் உபயோகமாகுமென்று கருதி அதனைக் கும்மியாகப்பாடித் தரும்படி கடிதவாயிலாக வேண்டினர். அவர் வேண்டிய படி இவர் கும்மியாகப் பாடிக்கொடுக்க அவரதனை அச் சிட்டனர். அது பாடி அச்சிட்ட காலம் சர்வதாரிவருடம் ஆவணிமீ. கிறிஸ்தாப்தம் 1888

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இது யூதமதம் யேசுமதம் இசிலாமதம் என்னும் மும்மதங்களையும் கண்டித்துச்செல்லுகின்றது. ஒவ்வோர் மதத்திற்கும் ஒவ்வோர் செய்யுள் சிறப்புணரக்காட்டுதும்:-

### யூதமதம்.

அன்னிய தேவதைக் கன்புசெய் வோரை
அலைத்து வருத்தி அழித்து விடுத்திடும்
இன்னவை யேயந்தத் தேவதைக் குள்ள
இலக்கண மென்பரான் ஞானப்பெண்ணே.

### யேசுமதம்.

பாவங்கட் கேற்ற பணங்கள் கொடுத்தாலப்
பாவங்க ளெல்லாம் பொறுத்து விடுதற்கு
மேவுந்த மக்கதி காரமுண் டென்று
விளம்புவர் காணடி ஞானப்பெண்ணே.

### இசிலாமதம்.

கோரா னனுசரி யாதவர் யாவருங்
கூரிய வாட்கிரை யாகுவ ரென்றந்தக்
கோரான் மதத்தை வலாற்கார மாகவே
கொள்ளச்செய் தானவன் ஞானப்பெண்ணே.

பின் இவர், தாம் சில நூல்கள் வடமொழியிலிருந்து மொழிபெயர்த்து வைத்திருக்கிறோமென்றும் அவற்றை யச்சிடற்கு இலக்குமணப்பிள்ளைபோலப் பொருளுதவி செய்யின் அவர் பெயருடன் வெளியிடுவேமென்றும், தாமச்சிட்டகும்பியின் பிற்பாகத்திலே விளம்பரஞ்செய்தார். செய்து மொருவருமுதவாமைகண்டு தாம் மொழிபெயர்த்த புஸ்தகங்கள் உலகத்தார்க்குப் பயன்படாதிருப்பின் நிஷ்பிரயோசனமாகுமென்று கருதி அவற்றின் விசேடபாகங்களை பத்திரிகைகள் மூலமாக வெளியிட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளியிடப்பட்டவற்றுள் சூதசங்கிதையுமொன்று. இது இந்துசாதனப் பத்திரிகை மூலமாக வெளியிடப்பட்டது.

இக்கும்பிபாடி அச்சிட்டபின், இவர் திருக்கரசைப் புராணத்துக்கு ஓர் பொழிப்புரை யெழுதியச்சிட்டனர். திருக்கரசையென்பது திருக்கோணமலையின்மேல் மகாவலிகங்கைக்கரையிலுள்ள ஒருதலம். இத்தலபுராணத்தை யியற்றியவர் இன்னாரென்பது தெரிந்திலது. இவ்வுரை அவ்வூர் வாசராகிய ஸ்ரீமாந். ஆகிலேசபிள்ளை விரும்பியவாறு இயற்றியது. அது முன்னுங் கூறியுள்ளேம். இது அச்சிட்ட காலம் விகிர்தி௵ ஆனிமீ. கிறீஸ்தாப்தம் 1890.

இதன்பின் மாவைப்பதியி லெழுந்தருளியிருக்கும் கந்தசுவாமிமேபரில் ஓர் பதிகம்பாடி அச்சிட்டனர். இது அச்சிட்டகாலம் கிறீஸ்தாப்தம் 1892. இவ்வாண்டிலேயே (அஃதாவது நந்தன௵ கார்த்திகைமீ ௨௨-ந்௳ வியாழக்கிழமையன்று) இவர் விவாகம் நடந்தது. விவாகஞ்செய்தற்கு இவர் விருப்பமுடையவராயிருந்தவரல்லர். கருத்து யாதோ அறியேம். சுற்றமித்திரர்கள் பலமுறை கேட்டமையால் அதற்குடன்பட்டனர். உடன்பட்டு, அவ்வூரவரும் வைத்தியருமாகிய தாண்டவர் மயில்வாகனம்பிள்ளை யென்பவருடைய புத்திரியும், விஷவைத்தியர் சீனிவாசகமவர்களுக்கும், மலையநாட்டு உத்தியோகத்தமர்ந்த செல்லம் அவர்களுக்கும், வேதவனமவர்களுக்கும் சகோதரியும், மனைமாட்சியிற் சிறந்தவருமாகிய சின்னாச்சியம்மையை இவர் விவாகஞ் செய்தனர்.

**விவாகம்.**

செய்து இல்லறதருமங்கள் நடத்திவரும்போது மூன்றாவது ஆண்டிலே இவருக்கு ஓர் புத்திரி தோன்றினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்பெயர் விசாலாட்சியம்மை. அவ்வம்மையாரை உரிய பருவத்திலே, அவ்வூர்ப் பிரபல வைத்தியர் வல்லிபுரநாதபிள்ளை யென்பவருடைய மகன் கனகசபைப்பிள்ளைக்குத் திருமணஞ்செய்தனர்.

புத்திரிஜநநம்.

புத்திரிபிறந்த அவ்வருடத்திலே தைமீ ௨௯-ந் ௳ திங்கட்கிழமை ஓர் அர்த்தோதய புண்ணியகாலம் வந்தது. அப்போது இவர் தாம், சேதுஸ்நானஞ் செய்யவிரும்பித் தம் நண்பர் வயித்தியநாதபிள்ளையோடும் இராமேசுரஞ் சென்று இராமலிங்கப்பெருமானையும் பருவதவர்த்தனி யம்மையாரையுந் தரிசனஞ்செய்து, நியமப்படி ஆங்கு ஆடவேண்டிய தீர்த்தங்களையெல்லாம் ஆடிக்கொண்டு மறுநாள் தனுக்கோடி சென்று சங்கற்பஞ்செய்வித்து, ஸ்நானஞ்செய்து, பின் செய்யவேண்டிய கடன்களை முடித்துக்கொண்டு மீளவும் இராமேசுரஞ்சென்று, ஒழிந்த தீர்த்தங்களையு மாடிக்கொண்டு சுவாமிதரிசனஞ்செய்து, பின் மதுரை கும்பகோணம் நாகபட்டினம் வேதாரணியம் முதலிய தலங்களுக்குச் சென்று சுவாமிதரிசனஞ் செய்து கோடிக்கரைவந்து அமிர்தகடேசுரரையும் மையார்தடங் கண்ணியையுந் தரிசனஞ்செய்துகொண்டு மறுநாட்டோணியேறித் தமதூர் வந்து சேர்ந்தனர். இது நடந்தது கிறீஸ்தாப்தம் 1894.

நகுலமலைக்குறவஞ்சி நாடகம்.

சேர்ந்தபின், தமிழ்க்கல்வியை விருத்திசெய்யும் நோக்கமுடையராய் முன்போலப் பழைய நூல்களை ஆராய்ந்தும் புதிதாக நூல்களை யியற்றியும் அச்சிற் பதிப்பிக்குமாறு முயன்றனர். முயன்று முதலில், வட்டுக்கோட்டை நா. விசுவநாதசாஸ்திரி என்பவரால் இயற்றப்பட்ட நகுலமலைக்குறவஞ்சி

என்னு நூலை ஆராய்ந்து பிழையறத்திருத்தி அச்சிற் பதிப்பித்தனர். இது பதிப்பித்தது கிறீஸ்தாப்தம் 1895.

பின் சூடாமணிநிகண்டின் முதலாவது தொகுதியை, அதிலுள்ள தெய்வப் பெயர்களுக்கெல்லாம் வடமொழி நூல்களையு மாதாரமாகக்கொண்டு பொருளெழுதி அச்சிட்டனர். இவர் தமிழுலகிற்குச் செய்த அரும்பெருநன்மையு ளிதுவுமொன்று. இது அச்சிட்டகாலம் முற்கூறியதே.

அந்த ஆண்டிலே இவருக்கு ஓர் புத்திரர் தோன்றினர். அவர் பெயர் அம்பலவாணபிள்ளை. அவர் இப்போது கந்தரோடை ஆங்கில வித்தியாசாலையில் உபாத்தியாயராகி ஆங்கிலங் கற்பித்து வருகின்றனர். அவரும் முன்னர்க்கூறிய வைத்தியர் வல்லிபுரநாதபிள்ளையினுடைய மகளை விவாகஞ் செய்தனர். செய்து புத்திரப்பேறுமடைந்தனர். அதனால் இவரும் பௌத்திரப்பேறு காணும் பாக்கியமும் பெற்றனர். நிற்க,

புத்திரஜநநம்.

பின், மானிப்பாய் ஸ்ரீமாந். முத்துத்தம்பிப்பிள்ளை அவர்கள் விரும்பியவாறு, ஆரியத்திலே இராவணனாற் சொல்லப்பட்ட சிவத்தோத்திரத்தைத் தமிழிலே விருத்தக் கலித்துறையில் அதர்ப்படயாத்து, அதனோடு ஆரியத்திலுள்ள அலங்கார நூலிலிருந்து பெயர்த்துச் சில விநோதசித்திர வினாவுத்தரக் கவிகளையும், நூதனமாகப்பாடிய ஏகவிருத்தபாரதம், ஏகவிருத்தராமாயணம், ஏகவிருத்தபாகவதம் என்பவற்றையுஞ் சேர்த்து ஓரே நூலாக அச்சிட்டனர். இவற்றின் புதுமை யறிதற்பொருட்டுச் சில கவிகள் இங்கே காட்டப்படுகின்றன. அவை வருமாறு:—

சிவத்தோத்திர முதலிய.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிவத்தோத்திரம்.

கந்த ராந்தகா ரோற்பல சுமனக கஞ்சன்
றந்த சேய்மகாந் தகபவாந் தகசுரர்ப் பகைத்த
அந்த காந்தக முப்புராந் தகபொரு மசுரச்
சிந்து ராந்தமா ராந்தகா சிவசிவ நமவே.

கந்தரம்-கண்டம். அந்தகாரோற்பலம்-நீலோற்பலம். கஞ்சன்றந்தசேய் - தக்கன். மகம் - யாகம்.

## வினோதசித்திரவினவுத்தரக்கலி.

### பிரச்சினோத்தரம்.

அது வினாவமைந்த பாகத்திலே விடையுமமைந்து மறைந்து கிடக்கப்பாடுவது. பிரச்சினம் - வினா. உத்தரம் - விடை.

### வெண்பா.

கங்கை தரித்திருந்தார் காமர் சடாடவியிற்
றங்குவதென் தொண்டர் தமக்கவர்தா—மிங்கலச்
செய்வதுமென் கட்செவிகள் சேர்த்தருக் கெவ்வாறும்
இவ்வினவி னுத்தரமு மெண்.

இ - ள். கங்கை தரித்து இருந்தார்-தலையோட்டினைக் கையிலே தரித்து யாசித்தவராகிய சிவனுடைய.

### உத்தரம்.

க. கங்கை, உ. தரித்திரம் - வறுமை. ௩. தார் - மாலை.

## ஏகவிருத்தபாரதம்.

ஐவர்நூற் றுவர்க டோற்ற மரக்குமா ளிகையும் வேதஸ்
மைவரு சூதிற் றோல்வி கானகஞ் செலல்வி ராடன்
தெய்வசல் வீட்டில் வாழ்க்கை திகழ்நிரை மீட்டல் போர்க்கு
மெய்வெளி தூது நூறு வீரர்சா வைவர் வாழ்வே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### ஏகவிருத்தராமாயணம்

தாதையார் சொல்வழுவி ராமன் போதல்
சார்ந்தவன் பொன் மானெனுமா ரீசன் சாதல்
சீதையார் பிரிவெருவை மரணம் பானு
சேயொடுநட் புக்கோடல் வாலி வீடல்
ஓதநீர்க் கடற்பரப்பை யனுமன் றாண்டல்
உயரிலங்கை நகரெரியால் வேவக் காண்டல்
பாதகரா மரக்கரெலா மடியத் தாக்கல்
பாக்கியரா மாயணச்சீர்க் காதை யீதே.

### ஏகவிருத்தபாகவதம்.

தேவகி வயிற்றிற் கண்ணன் றிருவவ தாரஞ் சேரி
போய்வளர்ந் திடுதன் மாயப் பூதனை மரணம் வெற்பா
லாவினங் காத்தல் கஞ்ச னழிவுநூற் றுவர்க ளான
மேலவர் மடித லைவர் வீற்றிருந் துலகம் போற்றல்.

இது அச்சிட்டகாலம் 1896.

பின் இவர் ஸ்ரீமாந். சி. வை. தாமோதரம்பிள்ளை யவர்கள் விரும்பியவாறு நகுலேசுரப்பெருமான்மீது ஒருஞ் சலியற்றி, அரங்கேற்றி, அச்சிட்டுப் பரவச்செய்தனர். பின் அமராவதிபுதூர்ப் பாலவிநாயகர்மீது ஓர் பதிகம் பாடினர்.

இதன்பின் இவரியற்றி அச்சிட்டநூல் மேகதூதக் காரிகை. மேகதூதக்காரிகையென்பது, மேகத்தைத்தூதாக விடுத்த சரிதத்தை யுணர்த்தும் காரிகைச் செய்யுளாலியற் றப்பட்டநூலென விரியும். காரிகை=கட்டளைக்கலித்துறை. மேகத்தைத்தூதாகவிடுத்த சரிதமாவது: குபேரனுடைய சோலைக்காவற்காரனான இயக்கனொருவன் ஐராவதயானை வந்து சோலையை உழக்கி முரித்துப் பாழாக்கி விட்டமையி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ணிலே பிறவூரிலே போய் ஒரு வருஷம் வசித்தலாகிய சாபத்தைக் குபேரனாற்பெற்று மனைவியையும் விடுத்துத் தண்டகாரணியத்திலேவந்து சித்திரகூடமலையிலே விடுதியாக வசித்து நியமித்த ஒருவருஷத்திலே எட்டுமாதங்களையும் ஒருபடிநீக்கிப் பின்னர் ஆடிமாசத்து முதலாந்தேதியிலே அந்தமலையிற்படிந்த முகிலிடத்தே தன்மனைவிக்குத் தூது சொல்லி அனுப்பியது. இச்சரிதம் மெய்யன்று. அது பிரயோகவிவேகத்திலே, "வடமொழியிற் காளிதாசனும் மேகசந்தேசத்தினுள் இவ்வாறு கூறுதல்காண்க" என்பதனாலும் புலப்படும். இம்மேகதூதமும் பூர்வமேகம் உத்தரமேகம் என இருவகைப்படும். பூர்வமேகதூதம் சித்திரகூடமலைதொட்டுத் திருக்கைலாசமலையட்டு மிடையிலுள்ள மலைகள், நதிகள், மரங்கள், செடிகள், நாடுகள், நகரங்கள், காடுகள், சோலைகள், வீடுகள், கோயில்கள், விலங்குகள், பறவைகள், ஆடவர், பெண்கள், அரசர்கள், குடிகள், பாடல்கள், ஆடல்கள், பழம்பெருங்கதைகள் முதலிய பலவகைப்பாகுபாடுகளையும் முகிலுக்கு வழிகூறுந் தலைக்கீடாக விரித்துணர்த்துகின்றது.

உத்தரமேகதூதம் அளகையிலுள்ள மாடமாளிகைகளையும், ஆடவர் மகளிரையும், அரண்மனை செய்குன்றுகளையும், இயக்கனுடைய வீடுவாசல்கள் சோலைதடாகங்களையும், மனைவிவடிவம் முதலியவைகளையும் விரித்துணர்த்துகின்றது.

இம் மேகதூதக்காரிகையிலுள்ள செய்யுள்கள் மிகவும் சொற்சுவை பொருட்சுவை அமைந்துள்ளன. இடருற்றுப் பாடுவார் செய்யுட்களிற்போல் அடைசொற்களதிகமில்லை. பொருள்கள் பெரும்பாலும் அங்கங்கே முடிந்து செல்லுகின்ற பாட்டின்நடை மிகவும் பாராட்டப்படத்தக்கது. பார்த்து உணரும்பொருட்டு ஒருசெய்யுள்காட்டுதும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அவந்திநகரவியோதிகர்.

ஆவந் திகன்மகள் வாசவ தத்தையை யன்றுவற்சன்
பார்வந் தொளித்து விரகிற் கவர்ந்த பழங்கதையின்
பாகந் தெரிந்து நரையும் மிகுந்து பழிதொலைத்து
கோவந் தணிந்த மூதறிவோரு மங்குளர் கொண்மூவிலே.

இச்செய்யுளின் முதல் இரண்டடியாலும் கூறப்படும் பழங்கதையென்பது உதயணன் கதையை யுணர்த்துகின்றது. இதில்வரும் வற்சன் என்பது உதயணனே. அது உதயணனுக்கு வத்தன் வத்தவன் வச்சன் என்னும் பெயர்கள் வழங்குவதனாலே எனத் தாம்பதிப்பித்த பெருங்கதை யென்னும் நூலின் முகவுரையில் மகாமகோபாத்தியாய உ. வே. சாமிநாதையரவர்கள் கூறியதனாலுமுணர்க.

இதன்பெருமையை சேதுசமஸ்தான வித்துவான் ஸ்ரீமத். ரா. இராகவையங்காரவர்களெழுதிய கடிதமொன்றும் அவர்களாலெழுதப்பட்டுச் செந்தமிழில் வெளிவந்த மதிப்புரையும் உணர்த்தும். அவை வருமாறு:—

### கடிதம்.

ஸ்ரீராமஜயம்.

மதுரைத்தமிழ்ச்சங்கம்.

3-1-03.

அன்புள்ள பிள்ளையவர்கட்கு

மங்களாசீர்வாத பூர்வ விஞ்ஞாபனம்:

தங்கள் அருமை திருமுகம் மேகதூதக்காரிகையும் எய்தப்பெற்றுப் பரமானந்த பரிதனானேன். தங்கள் பேரறிவின் மாட்சிமையும் வடமொழி தென்மொ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ழிப் பெருநூலாராய்ச்சியையும் சொல்வன்மையையும் பல பத்திரிகைகளாலும் முன்னர்த் தாங்கள் வெளியிட்ட புத்தகங்களாலும் நன்கறிந்துள்ளேன். பிறபாஷைக்கண்ணுள்ள நூல்கள் பலவற்றையும் தன்கண் மொழிபெயர்த்துக் கோடலே ஒரு பாஷையின் முக்கிய வளர்ச்சிக்குக் காரணமாகும். இவ்வகைப் பேருபகாரத்தை நெடுங்காலமாகத் தமிழ்ப்பாஷைக்குச் செய்துபோதருந் தங்கள்பால் இத்தமிழுலகம் என்றும் நன்றி பாராட்டற்பாலது. தங்கள் மேகதூதக் காரிகையின் சிறப்புக்கள் அடுத்த பத்திரிகையில் வெளியிடுவேன். தாங்கள் பத்திரிகைக்கு எழுதியனுப்பும் விஷயம் அறிவுடையோர் பலராலுங் கொண்டாடப் படுவது. தாங்கள் விஷயதானம் புரிதலால் நம் செந்தமிழ்ப் பத்திரிகை சிறந்து விளங்கு மென்பதில் ஐயமில்லை.

இராகவையங்கார்.

## மதிப்புரை.

(செந்தமிழ்)

---

மேகதூதக்காரிகை:—இது வடமொழியிற் காளிதாசகவியினாற் செய்யப்பட்ட மேகசந்தேசத்தின் மொழிபெயர்ப்பாகவுள்ளது. யாழ்ப்பாணத்திற் றென்மொழியோடு வடமொழியினுஞ் சிறந்த வித்துவானாய் விளங்காநின்ற சுன்னாகம் மகா-ா-ா-ஸ்ரீ. அ. குமாரசுவாமிப்பிள்ளையவர்களால் கஉக கட்டளைக்கலித் துறையில் இயற்றப்பெற்றது. பூர்வமேகம் உத்தரமேகம் என்னும் இருபகுதியை உடையது. போசசரித்திரச் சுருக்கமும் காளிதாச சரித்திரச்சுருக்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலிய 'வரலாறும்' 'அருஞ்சொற்பொருள்கோளும்' சேர்த்து நன்கு அமைக்கப்பட்ட ஒரு சிறு நூல். இதன்கண் உள்ள செய்யுளெல்லாம் சொல்வளம் நிரம்பி ''நன்றிசைக்குமுரைவழிநன்னெடுங் குன்றிசைப்பதுபோல்'' முதனூலை ஒத்த மொழிபெயர்ப்புக் கொண்டுவிளங்குகின்றன. காலமுறையைத் தழுவிச் சிற்றின்பத்தைப் பற்றிய செய்யுட்களை நீக்கிப் பிள்ளையவர்கள் இந்நூலை மொழிபெயர்த்துள்ளார்கள். பிறமொழிக்கணுள்ள நூல்கள் பலவற்றையும் தன்கண் மொழிபெயர்த்துக்கொள்ளுதலே ஒரு பாஷையின் முக்கிய வளர்ச்சிக்குக் காரணம். இத்தகைய மகோபகாரத்தை நெடுங்காலமாகச் செந்தமிழுக்குச் செய்து வரும் பிள்ளையவர்கள்பால் தமிழுலகம் என்றும் நன்றிபாராட்டக் கடமைப்பட்டுள்ளது.

அகராதியும், இலக்கண சந்திரிகையும்.

பின் இவர் ஊர்காவற்றுறையில் நீதிபதியாயிருந்த ஸ்ரீமாந். கு. கதிரவேற்பிள்ளையவர்கள் வேண்டியபடி ஊர்காவற்றுறையிலும் நல்லூரிலுமாக இருந்து அவரோடு அகராதி எழுதிவந்தனர். எழுதிவருங்காலத்து அக்கதிரவேற்பிள்ளையவர்கள் விரும்பியவாறு இலக்கணசந்திரிகையென ஓர் நூலியற்றினர். இந்நூல், நன்னூலார் பதவியலுட்கூறிய விதிகளுள் அமையாத திரிபுமுதலிய விகாரங்களைப் பெற்று இலக்கியங்களிற் பயின்றுவரும் சொற்களுக்கெல்லாம் விதியமைத்துக்காட்டுவது. இது இயற்கையான நுண்ணறிவோடு வடமொழிப்புலமையும் தென்மொழிப்புலமையும் வாய்ந்தவர்களாலன்றி, ஏனையோரால் இயற்றற்கரியது. இதனுள் ஓர் விதியை இங்கே காட்டுதும்:—



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அநுச்சுவாரம்.

மகரமெய்யின் விகாரமாய் உயிரின்பின்னிற்கும் அநுச்சுவாரமென்னும் ஒற்றைப்புள்ளி மகரமாய் இகரத்தோடாவது உகரத்தோடாவது கூடிவருதலையும், பின் மெய்க்கு இனமாதலையும், ககரவிகரமாகி (கி) பின் வரப்பெறுதலையும், வருமெழுத்தாகத் திரிதலையும் பொருந்தும்.

உ - ம். மாംசம் மாமிசம் மாங்கிசம் (சல்லா. 1007. எதுகை.)
வംசம் வமிசம் வங்கிசம் (நீதிசாரம்.)
அംசம் அமிசம் அங்கிசம் (வாயுசங். அடி. 42.)
சംஹா சமூகம் சங்கம்
சംசயம் சமுசயம் சஞ்சயம் (பிரயோகவிவேகம்.)
சംசாரம் சமுசாரம் சஞ்சாரம்
சം + யோகம் = சய்யோகம் - கூட்டம்.
சം + லாபம் = சல்லாபம் - நற்பேச்சு (கந்தரனுபூதி.)

இதன்பெருமை கதிரவேற்பிள்ளையவர்கள் முதலியோர் எழுதிய முகவசனத்தால் இனிது விளங்கும். இது அச்சிட்டகாலம் கிறீஸ்தாப்தம் 1898.

இது அச்சிட்டபின் இவரால் அச்சிடப்பட்ட நூல் யாப்பருங்கலக்காரிகையுரை. யாப்பருங்கலக் காரிகைக்குக் குணசாகரராலியற்றப்பட்ட உரை பல பிழைகள் பொருந்தியதென்றும் மாணாக்கரெளிதிற்படிக்கத் தகுந்ததன்றெனவும் கண்டு இவ்வுரை இவரால் எழுதப்பட்டது. இவ்வுரை இதன்பழைய உரையையும் தொல்காப்பியச் செய்யுளியலுரைகளையும் யாப்பருங்கல விருத்தியுரையையும் நோக்கித் தமது கருத்துங்கொண்டி

யாப்பருங்கலக் காரிகையுரை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யற்றப்பட்டது. இலக்கணங்கூறிய செய்யுட்களுக்குப் பின்னை முதனினைப்புச் செய்யுட்களுட் கூறிய உதாரணங் களை அவ்வவ் விலக்கணங்களுக்குப் பின்னை முறையுறச் சேர்த்துக் காட்டப்பட்டிருத்தலின் இது மிக எளிதில் மாணாக்கர் கற்றற்குரியது. பழையவுரையினும்பார்க்க இதி லுள்ள நயங்களைப் பின்னர் இரண்டாவது பதிப்பினைப்பற் றிக் கூறும்வழிக் கூறுதும். இது அச்சிட்டகாலம் விகாரி வருஷம் ஐப்பசிமாதம். கிறீஸ்தாப்தம் 1899.

இவ்வாண்டிலே இவர் தாம் இருபத்துமூன்று வருட காலமாகப் படிப்பித்துவந்த எழாலை வித்தியாசாலையை விட்டுத் தமது இல்லத்திலிருக்கும் பொழுது அங்கும் பலர் சென்று கற்பாராயினர். அவர்களுக்கெல்லாம் இவர் வேதன மின்றியே கற்பித்துவந்தனர். அப்போதுகற்ற மாணவர் கள் தெல்லிப்பழை ங. சங்கரப்பிள்ளையும், கொக்குவில் சைவப்பிரசாரகர் முருகேசையரும், கந்தரோடை உபாத் தியாயர் அ. கந்தையபிள்ளையும், சிவஞானசித்தியாருக் குப் பிறக்றர் ஸ்ரீமாந் திருவிளங்கமவர்கள் எழுதி அச்சிட்ட உரையின் குறையை நிறைவுசெய்து அச்சிட்டவரும் கதிர் காமசுவாமிபேரிற் பிள்ளைத்தமிழ் முதலிய பிரபந்தமியற் றியவருமான பிறக்றர் ஸ்ரீ. க. சி. நாதனவர்களும் முதலா யினோர்கள். யாமும் அக்காலத்திலேயே சென்று கற்று வந்தோம். இலங்கை அரசினர்கல்லூரித் தமிழ்ப்பண்டித ராயிருந்தவரும் சங்கச்சான்றோர் செய்யுள்போலச் செய்யு ளியற்ற வல்லவருமாகிய தென்கோவை ஸ்ரீமத் ச. கந் தையபிள்ளையவர்களும் அக்காலத்திலேயே சென்று கற் றனர். பிள்ளையவர்கள் இவரிடத்திற்கற்றமையை அவர்கள் கூறிய;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அளியனேன் மனமா மலிநீர்ப் பொய்கையின்
மலர்ந்திடுஞ் செந்தா மரைமல ரடியான்
துலைமார் குமார சுவாமிப் புலவனை"

என்று (நகுலேச்சர விநோதவிசித்திர கவிப்பூக்கொத்துச் சிறப்புப்பாயிரம்) மடிகளாலும், இவரியற்றிய சாணக்கிய நீதி வெண்பாவுக்கு அவர்களியற்றிய சிறப்புப்பாயிரத்துவரும்

"பன்னுமெம்போல் வார்பலர்க்குப் பலகலைநூ லளித்தருளும்
பரோபகாரி"

என்னுமடியாலும் உணரலாம்.

பிள்ளையவர்கள் இவர் இறந்தபொழுது இவர்மீது தாங்கொண்ட அநுதாபத்தை வெளிப்படுத்தி ஓர்விஷயமெழுதி மதுரைச் செந்தமிழ்ப் பத்திரிகையில் வெளிப்படுத்தியுள்ளார்கள். அதனை இச்சரிதத்துக்கு அநுபந்தமாகப் பின்னெடுத்துக் காட்டுதும். நிற்க,

ஆசாரக்கோவை.

இவர் தம்மில்லத்திலிருந்து மாணாக்கர்களுக்குக் கற்பித்து வருங்காலத்திலே பெருவாயின்முள்ளியாரென்னும் கடைச்சங்கப் புலவராலியற்றப்பட்ட ஆசாரக்கோவை யென்னுநூலைப் பல ஏட்டுப்பிரதிகளைவைத்து ஆராய்ந்து பதிப்பித்தனர். அந்நூல் மக்களுக்குரிய ஆசாரங்களை விளக்கிக்கூறுவது. அதன்பெருமையை யறிதற்காக அதனுள் ஒருசெய்யுள் எடுத்துக்காட்டுதும்:—

அரச னுபாத்தியாய னாய்தந்தை தம்முன்
நிகரில் குரவ ரிவரிவ ரிவரைத்
தேவரைப் போலத் தொழுதெழுக வென்பதே
மூத்தையோர் கண்ட நெறி.

இது பதிப்பித்தது கிறீஸ்தாப்தம் 1900.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சூடாமணிநிகண்டு இரண்டாவது தொகுதிஉரை.**

இதன்பின் சூடாமணிநிகண்டின் முதற்றொகுதிக்குப்போலவே இரண்டாந் தொகுதிக்கும் பதங்களுக்குப் பொருள் எழுதி அச்சிட்டனர். இது அச்சிட்டகாலம் கிறீஸ்தாப்தம் 1900.

**சதாசாரக்கவித்திரட்டு.**

இதன்பின் ஆசாரவிடயங்களைக் கூறும் கவிகளைத் தமிழிலக்கியங்களி லிருந்து எடுத்துத்திரட்டி அதற்குச் சதாசாரக்கவித்திரட்டு எனப் பெயர்தந்து ஒருநூல் அச்சிட்டனர். இதில் நூறுகவிகள் அடங்கியிருத்தல்பற்றி இதற்குச் சதாசாரக்கவித்திரட்டு எனப் பெயரிடப்பட்டது. இதில் முப்பது ஆசாரங்கள் அமைந்துள்ளன. இது கந்தரோடை பிறக்றர் ஸ்ரீமாந். சி. பொன்னம்பலபிள்ளையவர்கள் விரும்பியவாறு செய்தது. இதுவும் முற்கூறிய ஆண்டில் அச்சிடப்பட்டது.

**நான்மணிக்கடிகை.**

இதன்பின் பதினெண் கீழ்க்கணக்கி லொன்றாகிய நான்மணிக்கடிகை என்னு நூலையும் பல ஏட்டுப்பிரதிகளை வைத்து ஆராய்ந்து அச்சிட்டனர். இது யாழ்ப்பாணத்துத் தமிழ்ச்சங்கத்தார் விரும்பியவாறு அச்சிடப்பட்டது. இது அச்சிட்டகாலமும் முற்கூறியதே.

**யாப்பருங்கலமும் வெண்பாப்பாட்டியலும்.**

இதன்பின் யாப்பருங்கலமும் வெண்பாப்பாட்டியலும் என்னு நூல்களைப் பல ஏட்டுப்பிரதிகளை வைத்து ஆராய்ந்து ஒரே புத்தகமாகப் பதிப்பித்தனர். இந்நூல்கள் முறையே ஆசிரியமுதலிய பாக்களினிலக்கணமும், தொடர்நிலைச்செய்யுள்களினிலக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணத்தோடு பிறவும் கூறுவன. இவையுமச்சங்கத்தார் விரும்பியபடி அச்சிடப்பட்டன. இவற்றின் பொழிப்புரையுமிவரே எழுதியது. இவையும் முற்கூறிய ஆண்டில் அச்சிடப்பட்டன.

**இளையபுதல்வர் ஜநநம்.** இவ்வாண்டிலேயே முத்துக்குமாரசுவாமியென்னும் இளையபுதல்வர் பிறந்தனர். இவர் ஆங்கிலத்தில் மற்றிக்கிலேசன் பரீக்ஷையில் சித்தியடைந்து இப்போது சென்னையிற்சென்று கற்றுவருகின்றனர்.

**இரகுவமிசக் கருப்பொருள்.** பின் இவர் யாழ்ப்பாணத்தை அதன் தலைநகராகிய நல்லூரிலிருந்து அரசாண்ட பரராசசேகர மகாராசாவின் மருகரும், வடமொழி தென்மொழியென்னும் இருமொழியினும்வல்ல வித்துவானுமாகிய அரசகேசரியால் வடமொழி இரகுவமிசத்தினின்றும் மொழிபெயர்த்துத் தமிழிலியற்றப்பட்ட இரகுவமிசமென்னு நூலிலுள்ள அருங்கவிகளையெல்லாந்தொகுத்துப் பொருளெழுதி இரகுவமிசக் கருப்பொருளெனப் பெயரிட்டு ஒரு நூல் அச்சிட்டனர். இவ்வுரை ஊர்காவற்றுறை நீதிபதி ஸ்ரீமான். கு. கதிரவேற்பிள்ளையவர்கள் விரும்பியவாறியற்றியது. அதனுள் ஒருசெய்யுளும் உரையும் இங்கேகாட்டுதும்.

**தேசிகன் சிறிது சொல்லோ தந்தைவீற் றிருந்த செம்பொன்**
**ஆசனஞ் சிறிது சொல்லோ வமர்ந்தகத் திருந்த போதில்**
**தேசிகன் மணிக்கா லுள்ளே வவ்வுபு சிறந்த செம்பொன்**
**ஆசனப் புறம்பு பாய்ந்த வம்மசொல் லறிகி லேமே.**

(இதன்பொருள்) அமர்ந்து அகத்து இருந்தபோதில்—பொருந்திச் சிங்காசனத்தினுள்ளே இருந்தபோது,—இவன்தேசு—இவனுடைய இராசகாந்தியானது,—மணிக்காலுள்ளே வவ்வுபு சிறந்த செம்பொன் ஆசனப் புறம்பு பாய்ந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தது-இவனுடைய காலை உள்ளே அடக்கிச் சிறப்புற்ற செம்பொன்மயமாய ஆசனத்தின் புறத்தே பாய்ந்தது,—இவன் தேசு சிறிதுகொல்லோ-இவனுடைய காந்தியானது அற்பமானதோ,—தந்தை வீற்றிருந்த செம்பொன் ஆசனஞ் சிறிதுகொல்லோ-தந்தை வீற்றிருந்த செம்பொனாசனஞ் சிறியதோ,—அம்மகொல் அறிகிலேம்-அம்மம்ம அறியேம்.

சிங்காசனத்திலே இருக்கும்போது கால்கள் புறத்தே தூங்காது உள்ளேயடங்கும் அத்துணைச் சிறுவயசினனாயினும் இராசாவுக்குரிய பிரதாபமுடையவன் என்பது கருத்து. இது ஐயவதிசயமென்னுமணி.

இது அச்சிட்டகாலம் 1901. இவ்விரகுவம்மிசத்திற்குத் திக்குவிசயப்படலம் வரையும் யாமும் ஒரு புத்துரையெழுதி அச்சிட்டிருக்கின்றோம்.

**கண்ணகிகதை.**

இதன்பின் சங்கநூலாகிய சிலப்பதிகாரமென்னு நூலைச் சுருக்கிக் கதையாக எழுதிக் கண்ணகிகதையெனப் பெயரிட்டு அச்சிட்டனர். இது மிகச்சுருக்கமாயினும் வாக்கிய அழகமைந்துள்ளது. இது அச்சிட்டகாலம் 1901.

**நீதிநெறிவிளக்கவுரை.**

இதன்பின் இவர் கீரிமலைவாசராகிய ஸ்ரீமாந் கதிரவேற்சிருப்பர் அவர்கள் விரும்பியபடி நீதிநெறிவிளக்கமென்னு நூலுக்கு முன்னுரைகளினுஞ் சிறப்புற ஓர் உரையெழுதி அச்சிட்டனர். முன்னுரைகளிற் பல பிழைகள் காணப்பட்டபடியால் இவ்வுரை இவரால் எழுதப்பட்டது. இதனைக்குறித்தும் ஓர் மதிப்புரை எழுதி ஸ்ரீமாந். ரா. இராகவையங்காரவர்கள் செந்தமிழ்ப்பத்திரிகையில் வெளிப்படுத்தியுள்ளார்கள். அதனை இங்கே காட்டுதும்:—

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(செந்தமிழ்)

## நீதிநெறிவிளக்கப்புத்துரை.

---

ஸ்ரீ குமரகுருபரமுனிவரால் திருக்குறள்முதலிய நீதிநூல்களின் கருத்தைத்தழுவி வெண்பா யாப்பில் அனைத்தழகும்பொருந்த அமைக்கப்பட்ட நீதிநெறி விளக்கத்திற்கு முன்னர்ச் சில உரைகள் எழுதப்பட்டனவாயினும் அவையெல்லாம் கவியின் சொற்பொருண்மாட்சிகளை உள்ளவாறுணர்த்தும் ஆற்றலுள்ளவாகாமைதேர்ந்து யாழ்ப்பாணத்துச் சிறந்த வித்துவானாக விளங்கும் ஸ்ரீமத் அ. குமாரசுவாமிப்பிள்ளையவர்கள் அதற்குச் சிறந்ததோர் உரையெழுதியிருக்கின்றார்கள். அவ்வுரைப்பிரதியொன்று யாமும் கிடைக்கப்பெற்றுப் படித்து மகிழ்ந்தோம். நூலாசிரியர் எடுத்தாண்ட சொற்களும் சொற்றொடர்களும் பொருள்களும் பிறவும் திருவள்ளுவப்பயன்முதலாய பண்டைப்பனுவல்களின் பெருவழக்காக நிற்றலை உரையாளர் தம்மாராய்ச்சி வன்மையால் அங்கங்கு எடுத்துக்காட்டிச்செல்கின்றனர். அந்நீதிநூல்உறுதிப் பொருள் நான்கையும் உணர்த்துமுறையில் அமைந்து நிற்றலைவிளக்கி, அதன் ஒவ்வொரு செய்யுட்டலைப்பினும் கருத்துறுபொருள்களுந்தெரிந்து காட்டியுள்ளார். பெரும்பான்மை பரிமேலழகியார் போக்கைத் தழுவியே பிள்ளையவர்கள் அச்சிறுநூற்குச் சொற்சுருக்கமும் பொருட்பெருக்கமும் பொருந்த உரையிட்டிருக்கின்றனர். தமிழ் கற்பான் புகும் மாணாக்கரெல்லாம் இதனைப் பெற்றுப்படித்தல் நலம்பயப்பதாகுமென்னும் அபிப்பிராயம் உள்ளேம்.

இது அச்சிட்டகாலம் கிறீஸ்தாப்தம் 1902.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வுரையெழுதியபின், இவர் சிலகாலம் வாதநோயாற் பீடிக்கப்பட்டுத் தமதில்லத்திலேயே வசித்தனர். அப்போது சென்னை வித்துவான் ஸ்ரீமாந். வேதாசலம்பிள்ளையவர்கள் நடத்திய ஞானசாகரப் பத்திரிகைக்கு விஷயதானஞ் செய்துவந்தனர். வாதநோய் சுகமாகியபின் ஆறுமுகநாவலரவர்களால் வண்ணார்பண்ணையிலே ஸ்தாபிக்கப்பட்ட சைவப்பிரகாசவித்தியாசாலையில், அதற்கதிபராயிருக்கும் ஸ்ரீமாந். த. கைலாசபிள்ளை அவர்கள் விரும்பியபடி கிறீஸ்தாப்தம் 1902-ம் ஆண்டில் தலைமையாசிரியராக அமர்ந்து கற்பித்து வந்தனர். அப்போது தமிழ் ஆரியம் என்னும் இருபாஷையையும் விருத்திசெய்யுநோக்கமாக அவ்வித்தியாசாலையின் அதிபரவர்களால் அதில் ஓர்பாலாக அரசினருதவியோடு (பண்டிதவகுப்பு பாலபண்டிதவகுப்பு பிரவேசவகுப்பு எனமூன்று வகுப்புக்களமைந்த) காவியபாடசாலை ஒன்று தொடங்கி நடத்தப்பட்டது. அப்பாடசாலைக்கு இவரே தலைமையாசிரியராகவிருந்து தமிழிலக்கணவிலக்கியங்களும் சம்ஸ்கிருதபாடங்களிற் சிலவும் கற்பித்து வந்தனர். அப்பாடசாலையிலே இவரிடம் படித்துப் பரீக்ஷைகொடுத்த மாணவர்கள் பெயர் வருமாறு:—

உடுவில் வ. மு. இரத்தினேஸ்வர ஐயரும், அல்வூர் ச. செகநாதையரும், காரைதீவு ச. பஞ்சாட்சர ஐயரும், வல்லுவெட்டித்துறை மு. சுப்பிரமணியதேசிகரும், இருபாலை மு. வேதாரணியதேசிகரும், அல்வூர் சி. தியாகராசபிள்ளையும், தாவடி மு. பொன்னையபிள்ளையும், நாயன்மார்கட்டு செ. சிவசிதம்பரப்பிள்ளையும், நீர்வேலி வி. மயில்வாகனப்பிள்ளையும், தெல்லிப்பழை சி. கதிரிப்பிள்ளையும், வேதாரணியம் தி. அருணாசலதேசிகரும், சிறுப்பிட்டி த. கார்த்திகேசபிள்ளையும், நல்லூர் க. குருமூர்த்தி ஐயரும், மட்டுவில் சி. கணபதிப்பிள்ளையும் என்னும் இவர்முதலாயி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னோர்கள். இவருள் செகநாதையர் சிதம்பரத்தில் ஆறுமுகநாவலராற்றாபிக்கப்பட்ட சைவப்பிரகாச வித்தியாசாலையில் உபாத்தியாயராக இருக்கின்றனர். இரத்தினேஸ் ஐயர் இராமநாதபுரத்துக் கீழைச்சிவப்பட்டியென்னுமூரில் உபாத்தியாயராகவிருந்து கல்விகற்பித்துவருவது மன்றிப் பல ஊர்களினுஞ்சென்று அறிஞர்களும் மதிக்குமாறு சைவப்பிரசங்கங்களுஞ் செய்துவருகின்றனர். பஞ்சாட்சர ஐயர் தமதூரிலுள்ள சுப்பிரமணியவித்தியாசாலையிலே தலைமைஉபாத்தியாயராக இருக்கின்றனர். மயில்வாகனப்பிள்ளையும் உரும்பராய் ஆங்கிலவித்தியாசாலையில் தமிழுபாத்தியாயராக விருக்கின்றனர் மற்றையோருள்ளும் பெரும்பாலார் உபாத்தியாயர்களாகவே இருக்கின்றனர்.

இவர் நாவலர்வித்தியாசாலையிலிருந்து கற்பித்துவருகிறகாலத்திலே மேற்கூறிய அதிபரவர்களால் யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கமென ஓர் சங்கந்தாபிக்கப்பட்டு நடந்தது. அச்சங்கத்திற் பிரதமவித்துவானாக இவரேயிருந்தனர்.

இச்சங்கந்தாபித்தபின் ஸ்ரீமாந். பாண்டித்துரைத்தேவரவர்களால் மதுரையிலே ஓர் சங்கந்தாபிக்கப்பட்டது. அச்சங்கத்திற்கு ஓரங்கத்தவராகும்படி தேவரவர்கள் இவருக்கு ஓர் கடிதமெழுதி வேண்டினர். அவ்வேண்டுகோட்கு தாமுடன்பட்டு தமதுடன்பாட்டைக்குறித்துத் தேவரவர்களுக்கு இவர் ஓர் கடிதமெழுதினர். அக்கடிதம் நோக்கிய தேவரவர்களும் மகிழ்ந்து இவரைத் தஞ் சங்கத்தில் அங்கத்தவராகச் சேர்த்ததுமன்றி இவருடன்பட்டமைக்காக ஓர் வந்தனக்கடிதமுமெழுதினர். அவ்விரண்டுகடிதமும் வருமாறு:—

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மதுரைத்தமிழ்ச்சங்கம்,
17-10-02,

ஐயா!

1901-ம் வருடம் மே மாதம் இம்மதுரைமாநகரின்கண்ணே ஒருதமிழ்ச்சங்கம் ஸ்தாபனமாய் நடைபெற்று வருவதைப் பத்திரிகைவாயிலாகத் தாங்களறிந்திருக்கலாம். அதன்விபரம் இத்துடன் அனுப்பியுள்ள பிரகடனப்பத்திரத்தால் நன்கு விளங்கும். தாங்கள் இச்சங்கத்தின் வித்வ அங்கத்தினருள் தமிழ்வித்துவானாக அமர்ந்திருந்து செந்தமிழ்ப்பாஷாபிவிருத்திக்கு வேண்டுவனவற்றைச் செய்து உதவி புரியுமாறு வேண்டிக்கொள்ளுகிறேன்.

இதுவிஷயமாய்த் தங்கள் சம்மதத்தை அறிவிக்கவேண்டுகிறேன்.

இங்ஙனம்,
பாண்டித்துரை.

மதுரைத்தமிழ்ச்சங்கம்,
29-11 02.

ஐயா!

தாங்கள் மதுரைத்தமிழ்ச்சங்கத்தின் கல்வியங்கத்தினருள் ஒருவராய் அமர்ந்து செந்தமிழ்ப்பாஷாபிவிர்த்திக்கு வேண்டுவனவற்றைப்புரிதற்கு மனமுவந்துவரவிடுத்த சம்மதப்பத்திரிகையைக் கண்ணுற்றுப் பெருமகிழ்ச்சியடைந்தேன். இவ்வாறு அன்புகூர்ந்து மனமுவந்து வாக்குதவிய தங்கட்கு அநேக வந்தனம் அளிக்கிறேன்.

இங்ஙனம்,
பாண்டித்துரை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதன்பின் தேவரவர்கள் சங்கத்தால் நடத்தப்பெறும் செந்தமிழ்ப்பத்திரிகைக்கு விஷயதானம்புரியுமாறும் ஓர் கடிதமெழுதி வேண்டினர். இவரும் அதற்குடன்பட்டு அவர்வேண்டியநாட்டொட்டு அரியவும் பெருமையுமாய விஷயங்கள் பல எழுதிவந்தனர். தேவரவர்கள் கடிதம் வருமாறு:—

மதுரைத்தமிழ்ச்சங்கம்.

ஐயா!

நம் சங்கத்தினின்றும் "செந்தமிழ்" எனப் பெயரிய ஓர் மாதாந்தத்தமிழ்ப் பத்திரிகை வெளிப்படுத்தலாகுமென முன்னரேயறிவித்துள்ளபடி வெளியிடற்கு அப்பத்திரிகைக்குத் தங்கள் அருமையிற் கற்ற கல்வியாலாய விஷயசாதனங்கள் இன்றியமையாச் சிறப்புடையவாதலின் தங்கள் நுண்ணறிவிற்கெட்டிய அரும்பெரும் விஷயங்கள்யாவும் நம் செந்தமிழ்ப்பத்திரிகை தன்னிடங்கொண்டு இத்தமிழுலகிற்கு மிக்க நன்மை புரியுமாறு செய்விக்கத் தங்களை வணங்கிக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

இங்ஙனம்,
பாண்டித்துரை,
அக்கிராசனாதிபதி.

இவர் செந்தமிழ்ப் பத்திரிகைக்கு எழுதிய விஷயங்கள் யாவும் அருமையும் பெருமையுமாய என்பதை அப்பத்திரிகைக்கு அதிபராயிருந்த, வித்துவான் ஸ்ரீமாந். மு. இராகவையங்காரவர்கள் எழுதிய மதிப்புரைக்கடிதமொன்றானுமறியலாம். அதனையுமிங்கே தருதும்:—

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மதுரைத்தமிழ்ச்சங்கம்.

8-1-05.

ஸ்ரீமத். பிள்ளையவர்கட்குப் பிரியவிஞ்ஞாபனம்.

தங்கட்கு யாங்கள் நெடுநாளாகக் கடிதம் எழுதாத பிழையைப்பொறுப்பீர்களாக. தாங்கள் நம் "செந்தமி" ழுக்கு எழுதிவரும் அரிய விஷயங்கள் தமிழகம் முழுவதும் படித்துப் பாராட்டத்தக்கனவாக ஒளிர்கின்றன. நம் செந்தமிழ்ப் பெருமையை வளர்த்தற்கண் தாங்கள் கொண்டுள்ள முயற்சியளவு வேறெவருங் கொண்டிலர் என்பது இந்நாட்டின் பொது அபிப்பிராயம். யான் தேவரவர்களுடன் சென்னைசென்றிருந்தபோது மகாவித்துவான் ஸ்ரீமத். வே. சாமிநாதையரவர்கள் தங்களையும் என் அருமை மைத்துனர் ஸ்ரீமத். ரா. இராகவையங்காரவர்களையும், "இரண்டு தமிழ் இரத்தின" மென்று பாராட்டித் தேவரவர்கள் திருமுன்பு புகழ்ந்தது உண்மையில் அதிசயோக்தியன்று. யான் தங்களுடன் கடிதமூலம் மிகுதியும் பழகாதவனாயினும் தங்கள் அருமைப்பாடுகளை நன்குணருமாற்றல் மட்டில் உடையேனாதலாலும் செந்தமிழ்ப் பத்திரிகையோடு சம்பந்தமுடையேனாதலாலும் இக்கடிதத்தை வலியத் தங்கட்கு எழுதத் துணிந்தேன்.

எங்களோடு கொண்ட நட்புரிமை யென்றும் பெருகிவரத் திருவருளைச் சிந்திக்கிறேன்.

இங்ஙனம்,

மு. இராகவையங்கார்,

"செந்தமிழ்" உதவிப்பத்திராசிரியர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சிவக்ஷேத்திரவிளக்கம்**

இக்காலத்திலே சிவக்ஷேத்திரம் என்னும் நூலைத் திருத்தித் தெல்லிப்பழை இ. முத்துக்குமாரசாமிக் குருக்களைக் கொண்டு பதிப்பித்தனர். இது பதிப்பித்தகாலம் 1902

**திருவாதவூரர்புராணமூலம்.**

இதன்பின் இவரால் அச்சிடப்பட்டநூல் திருவாதவூரர்புராணமூலம். இது வாதவூரில் அவதரித்தவரும், சிவனுடைய பாதகமலங்களை தமக்குப் பற்றெனக்கொண்டு என்றும் அவற்றையே தியானித்தலால் அவை என்றும் நீங்காதலரும் உள்ளத்தடத்தினரும், அத்தடத்தினிறைந்த அன்பாகிய நீரே தம் வடிவாய்ப் புறத்தே உந்நாற்போன்றவாய கவிகளமைந்து கன்னெஞ்சையுங் கசியச்செய்யுந் திருவாசகம் திருக்கோவையென்னும் நூல்களைத் திருவாய்மலர்ந்தருளினவருமாகிய மாணிக்கவாசகப்பெருமான் சரிதமுணர்த்துவது. அதன் மூலபாடங்களுட்பல, ஏட்டுப்பிரதிகளைநோக்கி முன் அச்சிட்டோர் உண்மையான பாடம் எதுவென்று நுண்ணிதாகவாராய்ந்து அச்சிடாமையாற் பொருத்தமின்றியிருந்தமைகண்டு, அவற்றைத்; தாம் பல பிரதிகளைநோக்கி யாராய்ந்து பொருத்தமுடையதிதுவெனக்கண்டு திருத்தி அதனை அச்சிட்டனர். திருத்திய பாடங்களுள் அரிதான சில பாடங்களையிங்கே காட்டுதும்:—

மந்திரிச்சருக்கம் உகூ-ம் செய்யுளில்

"விற்படை வெற்றி மடந்தையு மிக்க மலர்த்திரு வும்பயின்
மற்புய வெற்பினி னங்கயல் வைத்த வலத்தன்" என்பது

"விற்படை வெற்றி மடந்தையு மிக்க மலர்த்திரு வும்பயில்
மற்புயன் வெற்பினி னங்கயல் வைத்த வனத்தன்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனத் திருத்தப்பட்டுள்ளது. தமிழ்நாட்டரசர் வெற்றி கருதித் தங்கொடியை மேருவிற் பொறிப்பதாக இலக்கியங்கள் பலவற்றினுங் காணப்படுதலின் பின்னையபாடமே சிறப்புடைத்து.

புத்தரைவாதில்வென்றசருக்கம் எ-ம் செய்யுளில் 'பார்மீதே" என்பது "பாரமிதை" எனத் திருத்தப்பட்டுள்ளது. பாரமிதை முப்பது என்பது புத்தநூற் கொள்கையாதலின் அதுவே பொருத்தமுடையது.

தானம் சீலம் பொறை வீரியம் தியானம் உணர்ச்சி உபாயம் தயை பெலம் ஞானம் என்னும் பத்தினையும் நேர்ச்சி மூன்றானு முறழப் பாரமிதை முப்பதாகும். இன்னும் பலவுள. அவற்றை நோக்கி உணர்க.

சூடாமணிநிகண்டின் முதலாவதுதொகுதியின் உ-ம் பதிப்பு.

பின் தாம் அச்சிட்ட சூடாமணிநிகண்டின் முதலாவது தொகுதியை இரண்டாம் முறையாக அச்சிட்டனர். அச்சிட்டபொழுது, முன் பொருளெழுதாத பதங்களுக்குப் பொருளெழுதியும் எழுதியவற்றுட் பலதிருத்தியும் செவ்விதாக அச்சிட்டனர். இதனைக் குறித்துஞ் செந்தமிழ்ப் பத்திராதிபராயிருந்த ஸ்ரீமாந். இராகவையங்காரவர்கள் ஓர்மதிப்புரை செந்தமிழில் எழுதி வெளிப்படுத்தியுள்ளார்கள். அதனையும் இங்கே தருதும்:—

**சூடாமணிநிகண்டு.**

(செந்- 1-ம் தொ. 430-ம் பக்கம்.)

**யா**ழ்ப்பாணத்துச் சுன்னாகம் ஸ்ரீமத். அ. குமாரசுவாமிப்பிள்ளையவர்கள் மண்டலபுருட நிகண்டின் முதற்றொகுதிக்கு முன்னர்த் தாமெழுதி வெளியிட்ட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உரையினையே இப்போது இரண்டாம் முறையாகப் பதிப்பித்துள்ளார்கள். அவ்வுரைப் பிரதி யொன்று யாமும் கிடைக்கப் பெற்றுப்பார்த்து மகிழ்ந்தோம். முன்னைப்பதிப்பினும் இப்பதிப்புப் பல திருத்தஞ் செய்து சுருத்தப்பட்டிருக்கின்றது. இவ்விதமே பிள்ளையவர்கள் இரண்டாந்தொகுதிக்கு உரையிட்டிருப்பதாக அறிகிறோம். சூடாமணிநிகண்டு முழுமைக்கும் இவ்வாறோர் உரை பிள்ளையவர்களால் முடிக்கப்படுமாயின் அஃது தமிழ்நாட்டிற்குப் பெரிதும் உபயோகமாகும். நிகண்டிற் கண்ட ஒவ்வொரு சொல்லிற்கும் உண்மைப்பொருளைக் கண்டெழுதலிற் பிள்ளையவர்கள்கொண்ட முயற்சி தமிழறிஞரெல்லாம் பெரிதுங் கொண்டாடத்தக்கதாகும். இந்நூல் தமிழாராயினோர் ஒவ்வொருவர் கையினும் இருத்தற்குரியதாகும்.

இது அச்சிட்டகாலம் கிறிஸ்தாப்தம் 1902.

இவ்வருஷத்தில் திருவனந்தபுர சமஸ்தானத்து நியாயசபையில் முதலாம்நீதிபதியாயிருந்தவரும் தமது நண்பருமாகிய யாழ்ப்பாணத்து வண்ணார்பண்ணை ஸ்ரீமாந். த. செல்லப்பாபிள்ளையவர்கள் இறக்க அவர்பேரில் அவர் சுற்றத்தார் வேண்டியபடி ஓர் சரமகவிபாடினர். அப்பாக்கள் மிகச்சுவையமைந்தன. பார்த்துணரும்படி சிலகாட்டுதும்:—

"பாரிற் பரந்தது நாவலர் பாவிற் பரந்ததுமை
சூரிற் பரந்தது செந்தமிழ் நாட்டொடு சூழ்திருவாங்
கூரிற் பரந்த துலகாளு மன்னவ ரோங்குசபைச்
சீரிற் பரந்தது செல்லப்ப பிள்ளை செழும்புகழே.

முன்னே பலப்பல நன்மைசெய் நாவலன் முத்திபெற்றான்
பின்னே புரிந்த துரைநாக லிங்கப் பிரபு சென்றான்
இன்னே புரிந்த தயாநிதி செல்லப்ப வேந்தல்சென்றான்
அன்னோ சுதேசப் பெருநன்மை செய்பவ ராரினியே."

சூடாமணிநிகண்டின் இரண்டாவதுதொகுதியின் இரண்டாம்பதிப்பு.

பின் சூடாமணிநிகண்டின் இரண்டாவது தொகுதியையும் முதலாவது தொகுதிபோலவே முன் பொருளெழுதாதவற்றிற்குப் பொருளெழுதியும் பலதிருத்தியும் இரண்டாம் முறையாக அச்சிட்டனர். இது அச்சிட்டகாலம் 1903.

தண்டியலங்காரவுரை

இவ்வருடத்திலே ஐந்திலக்கணங்களுள் அணியிலக்கணத்தைத் தனித்தெடுத்துணர்த்துவதாகிய தண்டியலங்காரம் என்னும் நூல் இவராற்றிருத்தியச்சிடப்பட்டது. இந்நூல் செய்தவர் தண்டியென்னும் ஆசிரியர். அதனால் தண்டியலங்காரம் எனப் பெயர்பெற்றது. இது வடமொழியிலுள்ள காவியாதர்சம் என்னும் அலங்காரநூலின் மொழிபெயர்ப்பு. அந்நூல்செய்தவரும் தண்டியே. அந்நூலோடு மற்றும் வடமொழியிலுள்ள சாகித்தியதர்ப்பணம் சரஸ்வதிகண்டாபரணமென்னும் அலங்காரநூல்களோடும் தொல்காப்பிய உவமவியலோடும் ஒப்புநோக்கி வழுநீக்கி இவர் இதனை அச்சிட்டனர். இதற்கு அமைந்த உரையும் இவர் எழுதியதே. அவ்வுரை; இதன் பழைய உரையிற்காணப்பட்ட பிழைகளைத்திருத்தியும், சில அணிகளுக்கு இராமாயணம் இரகுவம்சம் முதலிய இலக்கியங்களிலுள்ள செய்யுட்களை உதாகரித்தும், சித்திரக்கோடுகளில் முறைபிறழ அமைக்கப்பட்டிருந்த சித்திரகவிகளை அவைகளில் முறையுற அமைத்தும் சில அணிகளைப் புதிதாகச் சேர்த்தும் இவரால் எழுதப்பட்டுள்ளது.

அவ்வுரையை ஸ்ரீமாந் பாண்டித்துரைத்தேவரவர்கள் உதவியோடு பதிக்கவிரும்பி அவர்கள் நோக்குமாறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதனை அவர்களுக்கு அனுப்பினர். தேவரும் நோக்கிவியந்து ஒருதொகைப்பொருள் பரிசிலாகச் செந்தமிழ்ப் பரிபாலனங்குறித்துதவினர். அவ்வுரையைக்குறித்து ஸ்ரீமாந். ரா. இராகவையங்காரவர்களாலெழுதப்பட்டுச் செந்தமிழ்ப் பத்திரிகையில் வெளிவந்த மதிப்புரை வருமாறு:—

செந்தமிழ்த் தொகுதி - ௨.

தண்டியலங்காரவுரை.

இது தண்டியலங்காரத்தின் பதவுரையைத் துணைக்கொண்டு வடநூற்போக்கைப் பெரும்பாலுந் தழுவி எழுதப்பட்டது. கற்றோர்க்கும் மற்றோர்க்கும் பெரிதும் பயன்படுமாறு சொற்சுருக்கமும் பொருட்பெருக்கமும் பொருந்த யாழ்ப்பாணத்துச் சுன்னாகம் ஸ்ரீமத். அ. குமாரசுவாமிப்பிள்ளையவர்களால் உரையியற்றப்பெற்றது. இது மதுரைத்தமிழ்ச்சங்க அக்கிராசனாதிபதியாகிய ஸ்ரீமாந். பாண்டித்துரைத்தேவரவர்களது பேரபிமானத்தைப்பெற்று வெளிவந்தது. இது வெளிவந்தகாலம் 1903.

இதன்பின் தாம் திருத்தியச்சிட்ட வாதவூரர்புராணமூலத்துக்கு ஒருபதவுரையெழுதி அச்சிட்டனர். அவ்வுரையிற்சிலபாகங்கள் மிகவும் வியக்கத்தக்கன. அவைவருமாறு:—

(க). மந்திரிச்சருக்கம் ௬-ம் செய்யுளில் "தீயசிகை இல்லார்க்கு" என்பதில்வரும் சிகை என்பதிற்குக் கணக்குத்திரள் எனப் பொருள்கொண்டது சிறப்புடைத்து. சிகைஎன்பது அப்பொருள்படுதலை "நின்றசித்திரகுத்தனை நின்சிகை" என்னும் வேதாரணியபுராணச்செய்யுளாலறிக.

(௨). திருப்பெருந்துறைச் சருக்கம் ௩௬-ம் செய்யுளில் "திவ்வியாதரமேயான செய்தியர்" என்பதைத் "திவ்

விரதரமேயான செய்தியர்'' எனப்பாடங்கொண்டு திவ்விரதரம் என்பதற்குத் தீவிரதரமெனப் பொருளுரைத்தது மிகச்சிறப்புடைத்து. தீவிரதரம்-சத்திநிபாதம் நான்கனுள் இறுதிக்கண்ணது.

(௩). குதிரையிட்டசருக்கம் ௩௯-ம் செய்யுளுரையும் மிக வியக்கத்தக்கது. அதனை முன்னுரைகளோடொப்ப நோக்கியுணர்க. இவையன்றி வியக்கத்தக்கன இன்னும் பலவுள. அவைகளையெல்லாம் உற்றுநோக்கியுணர்க.

இது அச்சிட்டகாலம் 1904.

பின்னர் நல்லூர்க் கைலாசபிள்ளையார் மீது ஓர் ஊஞ்சல் இயற்றினர்.

இஃதியற்றியவாண்டு 1905.

முத்தகபஞ்சவிஞ்சதி.

இதன்பின் தம்முன்னோராகிய முத்துக்குமாரகவிராசரியற்றிய சில முத்தகச்செய்யுட்களைத் திரட்டி முத்தகபஞ்சவிஞ்சதி யென்னும் பெயரோடு அச்சிட்டனர். இவர் இந்நூலை அச்சிடுதற்கு முன் இந்தக்கவிகளிற்சிலவற்றைத் தாம் விஷயதானம் புரிந்துவரும் செந்தமிழ்ப்பத்திரிகையில் வெளிப்படுத்தினர். அதனைநோக்கிச் சென்னையில்வசிக்கும் ஸ்ரீமத். சுவாமிநாதபண்டிதரவர்கள் அக்கவிகளைத்தொகுத்து உரையோடு ஒருநூலாக வெளிப்படுத்தின் அது உலகிற்கு உபயோகமாகுமென்று கடிதமெழுதிவேண்டினர். அதனால் இவரும் இதனைத்தொகுத்துக் காடின்னியமான செய்யுள்களுக்கு உரையுமெழுதி அச்சிட்டனர். அக்கவிகள்மிகவும் விநோதமானவைகள். அவற்றுள் ஒன்று காட்டுதும்:—

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### கட்டளைக்கலிப்பா.

முடிவி லாதுறை சுன்னாகத் தான்வழி
முந்தித் தாவடிக் கொக்குவின் மீதுவந்
தடைய வோர்பெண் கொடிகாமத் தாளசைத்
தானைக் கோட்டை வெளிச்சட் டைவிட்டாள்
உடுவி லான்வரப் பன்னாலை யான்மிக
வுருத்த னன்கடம் புற்றமல் லாகத்துத்
தடைவி டாதனை யென்றுப லாலிகண்
சார வந்தன ளோரிள வாலையே.

இதனுரைவருமாறு:—

இக்கட்டளைக்கலிப்பா நாமாந்தரிதை யென்னும் பிரகேளிகையமைத்துச் சுப்பிரமணியக்கடவுளையே பாட்டுடைத்தலைவராகக்கொண்டு பாடப்பட்டவை. இது முருகக்கடவுள் பவனிவருதலைக்கண்டு மயங்கிய மகளிர்செயல் கூறுவது.

இக்கட்டளைக்கலிப்பாவிலே கருதிய பொருளை மறைத்துக்கொண்டு வேறொன்றாகத் தோன்றி நின்ற பெயர்களாவன.- சுன்னாகம், தாவடி, கொக்குவில், கொடிகாமம், ஆனைக்கோட்டை, கட்டுடை, உடுவில், பன்னாலை, மல்லாகம், பலாலி, இளவாலை என்பன. இவை யாழ்ப்பாணத்துள்ள பிரசித்திபெற்ற சில ஊர்களின் பேர்கள்.

இங்கே மறைத்துவைக்கப்பட்ட பொருளையும் கூறுதும்:- சுன்னாகத்தான் - திருக்கைலாசமலைவாசராகியசிவன். சுல் - வெள்ளி, நாகம் - மலை. வழி - மகன். தாவடிக்கொக்கு - தாவுகின்ற அடியையுடைய குதிரை. பெண்கொடி - பெண்ணாகிய கொடிபோல்பவள். காமத்தாள் - காமவிச்சையுடையவள். ஆனைக்கோட்டு வெளி கட்டு உடை விட்

டாள் - யானைக்கொம்புபோன்ற ஸ்தனத்தையும் மருங்குற் பிரதேசத்தையும் மறைத்துக்கட்டுகின்ற வஸ்திரக்கச்சினை நெகிழ்ந்து நழுவவிட்டாள். உடுவிலான் - நக்ஷத்திரங்களை மனைவியாகவுடைய சந்திரன். உடு - நக்ஷத்திரம், இல் - மனைவி. பன்னுலையான் - சொல்லப்படுகின்ற கருப்புவில்லையுடைய மன்மதன், ஆலை - கரும்பு. மல்லாகம் - வலிய மார்பு. பலாலி - பலவாகிய துளி. இளவாலை - பெரிதும் இளம்பருவமுடைய பெண்.

இந்நூலைக்குறித்துச் ஸ்ரீமான் ரா. இராகவையங்காரவர்களாலெழுதப்பட்டுச் செந்தமிழில் வெளிவந்த மதிப்புரையையும் இங்கே தருதும்.

## செந்தமிழ் தொகுதி - ௬. பகுதி - ௫.

### முத்தகபஞ்சவிஞ்சதி.

இப்பெயர்கொண்ட சிறுபுத்தகமொன்று யாழ்ப்பாணத்துப் பிரசித்த வித்துவானாகிய சுன்னாகம் ஸ்ரீ. குமாரசுவாமிப்பிள்ளையவர்களால் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. இற்றைக்கு ஐம்பது வருடங்கட்கு முன் பிரபலகவிஞராய் விளங்கியவரென்று தெரியும் முத்துக்குமார கவிராசராற் பாடப்பெற்றுக் கர்ணபரம்பரையாகவந்த தனிச்செய்யுள்களில், இருபத்தைந்தைக் குறிப்புரையிட்டு விளக்கிக்காட்டியிருக்கிறார்கள். நம்செந்தமிழின் சென்றதொகுதியில், பிள்ளையவர்கள் "முத்துக்குமாரகவிராசர் முத்தகத்திரயம்" என்னுந் தலைப்பின்கீழ் விசேடக்குறிப்புக்களுடன் வெளியிட்ட பாடல்களும் இதனுட்சேர்ந்தனவேயயாம். நம்பத்திரிகையில் வெளிவந்த செய்யுள்களைப்படித்திருப்போர் அவரின்சொல்லலங்கார நயங்களைக்கண்டு மகிழ்ந்திருப்பாரென்பது திண்ணம். இப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடல்கள் யாழ்ப்பாணப்பக்கங்களில் அவர்காலத்து எங்கும்விரும்பிப் படிக்கும்படியான சுவையுடையன வாய் இருந்தன என்பர். இயற்கையிலே சிறந்த புலவராய் எல்லாராலும் புகழப்பட்ட இக்கவிராசர் பிள்ளையவர்கட்கு முன்னோராகவுங் காலஞ்சென்ற ஸ்ரீ. சி. வை. தாமோதரம்பிள்ளையவர்கள் பதித்த நூல்களின்பதிப்புரைகளிலெல்லாம், குருவணக்கமாக அவர்கள்பாடியசெய்யுட்கு உரிமைபூண்டவராகவும் விளங்குதல் நமக்கு அவரிடத்துள்ள மதிப்புப்பின்னும் பெருகுதற்கு ஏதுவாயுள்ளது. இந்நூலின் விலை அணா-2. வேண்டியோர் பிள்ளையவர்கட்கெழுதிப்பெறுக.

இது அச்சிட்டகாலம் 1907.

இதன்பின் தாமெழுதிய யாப்பருங்கலக்காரிகையை முன்னையினும் பலதிருத்தங்கள்செய்து இரண்டாம்முறை யச்சிட்டனர். இதன்கண்; பழையவுரையிற் கூறாத கட்டளைக்கலிப்பா, கட்டளைக்கலித்துறை என்பவற்றின் இலக்கணங்கள் புதிதாகக்கூறி விளக்கப்பட்டிருக்கின்றன. நீக்கிவிடப்பட்ட வண்ணத்திலக்கணச்செய்யுள் காரிகைச்செய்யுளே யெனப்பலவாற்றால் நிரூபித்துக்காட்டிச்சேர்த்து அச்சிடப்பட்டிருக்கின்றது. வண்ணங்களின் இலக்கணங்களும் விரித்துரைக்கப்பட்டிருக்கின்றன. சந்தம் தாண்டகங்களின் இலக்கணங்களும் விரித்துரைக்கப்பட்டிருக்கின்றன. அராகம் அம்போதரங்கம் தாழிசை முதலியசொற்களின் பொருள்களும் விளக்கப்பட்டிருக்கின்றன. ஆதலின் இவ்வுரை பழையவுரையினும் பார்க்கப் பலநயம் பொருந்தியனவேயாம்.

இது அச்சிட்டகாலம் 1908.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுத்தவருடம் மதுரைத்தமிழ்ச்சங்கத்தை நோக்கும்படியும் ஆலயதரிசனஞ் செய்யும்பொருட்டும் இந்தியாவுக்கு பிரயாணமாயினர். அப்போது இவருடன் சென்றவர் பண்டிதர் சோமாஸ்கந்தபிள்ளையும் ஸ்ரீநிவாசக்குருக்களும் இவர் நண்பர் வயித்தியநாதபிள்ளையுமாகும். இவர்களோடும் இவர் பிரயாணமாகி இராமேசுரஞ் சென்று அங்கு முறைப்படி தீர்த்தமாடிப் பின் சேதுவந்து தீர்த்தமாடிப் பின்னும் இராமேசுரஞ்சென்று இராமநாத தரிசனஞ் செய்து அன்றிரவு அங்குவசித்து மறுநாள் தன்வருகையைப் பாண்டித்துரைத்தேவர் அவர்களுக்குத் தந்திமார்க்கமாகத் தெரிவித்து அவர்வசிக்கும் இராமநாதபுரம் போயினர். அப்போது தேவரவர்களனுமதிப்படி வித்துவான் ஸ்ரீமத் கோபாலையரவர்கள் புகைரதஸ்தானத்தில் வந்துநின்று அழைத்துக்கொண்டுசென்று தேவரவர்களுடைய மாளிகையின் பக்கத்திலுள்ள ஓர்மாளிகையில் வசிக்கச்செய்து வேண்டிய உபசரணைகளுஞ் செய்தனர். இவர் அங்கேவசித்து மறுநாள் மதுரைசென்றனர். அப்போது தேவரவர்கள் புகைரதஸ்தானத்தில் வந்துநின்று தமது வண்டியிலேற்றிக்கொண்டு சென்று தாமிருந்தமாளிகையில் வசிக்கச்செய்து உபசரித்தார்கள். மறுநாள் ஸ்ரீமத் சுப்பிரமணிய கவிராயர் ஸ்ரீமத் அருணாசலக்கவிராயர் ஸ்ரீமத் நாராயணஐயங்கார் ஸ்ரீமத் மு. இராகவையங்கார் முதலிய வித்துவான்களையும் அங்கே வரவழைத்து அவர்களுந்தாமுமாக வித்தியாவிடயங்களைக்குறித்து இவரோடும் சம்பாஷித்தனர். பின்தேவரவர்கள் சங்கமண்டபத்திற்கு அழைத்துக்கொண்டுபோய் அங்குள்ள கலாசாலை புத்தகசாலை அச்சியந்திரசாலை முதலியவற்றையெல்லாம் காண்பித்துக்கொண்டு மீளவும் தம்மாளிகைக்கு அழைத்துவந்து இரவு அங்கே தங்கும்படிசெய்தனர். மறுநாளும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர் சங்கஞ்சென்று அங்குள்ள வித்துவான்களோடு சம்பாஷித்துக்கொண்டு இரவு தேவர்மாளிகையிலே தங்கி மற்றைநாள் தேவர்விடையோடு அங்கு நின்றும் புறப்பட்டுக் கும்பகோணஞ் சென்றனர். சென்று சுவாமிதரிசனஞ் செய்து பின் திருவாவடுதுறையாதீனத்துத் தம்பிரானாகிய ஸ்ரீலஸ்ரீ. அம்பலவாணசுவாமிகளைக் காணும்படி அங்குப் போயினர். அப்போது சுவாமிகள் திருவிடைமருதூரில் இருக்கின்றாரெனக்கேட்டு அங்குச்சென்றனர். சென்று சுவாமிகளைக்கண்டு அவரால் உபசரிக்கப்பட்டு அன்று அங்கே தங்கினர் தங்கியபொழுது சுவாமி இலக்கணஇலக்கியங்களிலும் தருக்கசாஸ்திரங்களிலும் பலவினாக்கள் வினாவினர். அவ்வினாக்களுக்கெல்லாம் இவரும் விடையளித்தனர். அப்பொழுது சுவாமிகள் இவரதுபுத்தியின் கூர்மையைவியந்து ஓர் பட்டுப்பீதாம்பரம் பரிசிலாகவளித்தனர். பெற்று இவரும் அங்கே தங்கினர்.

அம்பலவாணசுவாமிகள்மீது இவர் சிலகவிகள்பாடியுள்ளார்கள். அவற்றுட் சிலகாட்டுதும்:—

### கட்டளைக் கலித்துறை.

தேவார மாதி யருட்பெருஞ் செல்வர் திருமுறைகள்
நாவார வோதிக் குசையினுங் கூரிய நன்மதியாற்
பாவாண ருங்கொள நற்பொரு ளாய்ந்து பகர்ந்துமகிழ்
கோவே நமோநம வம்பல வாண குருமணியே.

விருதமர் கோகழி யம்பல வாண வியன்குருவின்
அரிதுணர் கல்வியை யீகையை ஞானத்தை யாடகப்பொன்
பொருதிரு மேனியைச் சைவநல் வேடப் பொலிவழகைக்
கருதிடுஞ் சன்னைக் குமார சுவாமி கவியிலையே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறுநாள் அவரிடம் உத்தரவுபெற்றுக்கொண்டு, ஆரியனூர் கோயில்சென்று, அங்கிருக்கும் ஸ்ரீலஸ்ரீ. முத்துக்குமார தேசிகர் அவர்களைக்கண்டு, அவர்களோடும் சம்பாஷித்துக் கொண்டு, மறுநாள் வயித்திசுரன்கோயில் சென்றனர். சென்று சுவாமிதரிசனஞ்செய்துகொண்டு, வழியிலுள்ள தலங்களையுந் தரிசித்துக்கொண்டு சிதம்பரஞ்சென்றனர். அங்கே ஆறுமுகநாவலராற் ஸ்தாபிக்கப்பட்ட கலாசாலைக்கு அதிபராயிருந்த ஸ்ரீமாந். பொன்னம்பலபிள்ளையவர்களால் உபசரிக்கப்பெற்று அன்றிரவு அவர் இல்லத்திற்றங்கினர்.

மறுநாள் நடேசதரிசனஞ்செய்துகொண்டு அதிபரவர்கள் விரும்பியவாறு நாவலர்கலாசாலையிற் சென்று அங்குக் கற்கும் மாணவர்களை இலக்கிய இலக்கணங்களிற் பரீக்ஷித்தனர். பரீக்ஷித்தபின், கற்பித்தவற்றை வியந்து, பின் அதிபரில்லம்வந்து வசித்து. மறுநாளும் நடேசதரிசனஞ்செய்துகொண்டு, மீண்டு மதுரைவந்து, திருப்பரங்குன்றஞ்சென்று சுவாமிதரிசனஞ்செய்துகொண்டு அங்கு வசித்திருந்த ஸ்ரீலஸ்ரீ. செந்திநாதையரவர்களைக்கண்டு சம்பாஷித்துக்கொண்டு, அங்கேதங்கி மறுநாள் திருநெல்வேலி சென்று ஸ்ரீமாந். பால்வண்ணமுதலியாரவர்களைக்கண்டு சம்பாஷித்துக்கொண்டு திருச்செந்தூர்சென்று கந்தசட்டி ஆறுநாளும் அங்கேதங்கி சுவாமிதரிசனஞ்செய்துகொண்டு, மறுநாள் தூத்துக்குடிசென்று சித்தாந்தவித்துவான் ஸ்ரீமத். முத்தையாபிள்ளையவர்களையுங்கண்டு, அவர்களால் உபசரிக்கப்பெற்று, அங்கேதங்கி, அவரோடும் சம்பாஷித்துக்கொண்டு, மறுநாட்பிரயாணமாகிக் கொழும்பு மார்க்கமாக யாழ்ப்பாணம்வந்து தமதில்லத்தமர்ந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ குமாரசுவாமிப்புலவர் சரித்திரம்.

அடுத்தவருஷம் மதுரைத்தமிழ்ச்சங்கப்பரீக்ஷகருள் ஒருவராக நியமிக்கப்பட்டுப் பரீக்ஷைக்குரிய வினுப்பத்திரங் கள் எழுதி உபகரித்துவந்தனர். பரீக்ஷகராயகாலம் 1910.

பின், நடவாமடிசீ முதலாக நன்னூலார் வகுத்துக் கூறிய இருபத்துமூன்றீற்றினுள்ளும் அடங்கிய வினைப்பகு பதங்களுக்கும், அவற்றினடியா விளைப்பகுபத விளக்கம். கப்பிறந்த பெயர்ப்பகுபதங்களுக் கும் பகுதி விகுதி முதலிய வுறுப் புக்களைப் பகுத்துக்காட்டி ஒருநூல் இயற்றி அதனை வினைப்பகுபத விளக்கமென்னும் பெயரோடு அச்சிட்டு வெளிப்படுத்தினர். இதுவும் வடமொழி தென்மொழி யென்னு மிருமொழி யுணர்ச்சியோடு நுண்மாணுழை புல முடையோர்களாலன்றி ஏனையோர்களாலியற்றற்கரியது இதன் சிறப்பு, மஹாமஹோபாத்தியாய உ. வே. சாமிநா தையர் அவர்கள் எழுதிய கடிதத்தானும் தற்போது செந்த மிழ்ப்பத்திராதிபராயிருக்கும் வித்துவமணி திரு நாரா யணஐயங்காரவர்கள் எழுதிய மதிப்புரையானு மறியலாம். அவற்றுள் மஹாமஹோபாத்தியாய உ. வே. சாமிநாதை யரவர்கள் கடிதம் வருமாறு:—

நீங்கள் பேரன்புடன் அனுப்பிய வினைப்பகுபத விளக்கம் என்னும் புத்தகம் வரப்பெற்று மிகமகிழ்ச்சி யடைந்தேன். மேற்படி புத்தகம் உருவத்தாற்சிறிதா யிருந்தாலும் பொருளமைப்பில் மிகப் பெரிதாயிருக் கின்றது. எத்தனைவருடம் கடினமாக உழைத்துத் தொகுத்தீர்களோ தெரியவில்லை. தங்களுடைய வேலை களுள் எதுதான் சாதாரணமானது.

உ. வே. சாமிநாதஐயர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீமாந். திரு. நாராயணையங்காரவர்களெழுதிய மதிப்புரை வருமாறு:—

சேந்தமிழ்.

வினைப்பகுபத விளக்கம்.

இது சுன்னாகம் வித்துவான் ஸ்ரீமத். அ. குமாரசுவாமிப் பிள்ளையவர்களால் இயற்றப் பெற்ற ஒரு வகைச் சொல்லிலக்கண நூல்.

சொல்லிலக்கண நூலாலாகும் பயன் பலவற்றுள்ளும் முதன்மை யுள்ளது மொழித்திறத்தின் முட்டறுத்தலாம். அம்மொழி ஒருமொழி தொடர்மொழி என இருவகைப்படும்.

அவற்றுள் தொடர்மொழி யிலக்கணங்களே தொல்காப்பிய முதலிய பல நூல்களாலும் குறைவறக் கூறப்பட்டுள்ளன. ஒருமொழி யிலக்கணம் அவ்வாறு ஒரு நூலாலும் கூறப்பட்டிலது. இது தமிழ்மொழிக்குள்ள குறையுட்டலையாயது.

இவ்விலக்கணம் வடமொழியகத்துக் குறைவற வகுக்கப் பட்டிருத்தலால் அது சிறப்புற்று விளங்குகின்றது. அவ்வாறே தமிழ்மொழிக் கண்ணும் இவ்விலக்கணம் நிரம்புதல் தமிழ்மொழி வளர்ச்சிக்கு முக்கிய சாதனமாகும்.

வீரசோழியம் பிரயோகவிவேகம் என்னு நூல்களுள் ஒருமொழி யிலக்கணம் சிறிது விதிக்கப்பட்டிருக்கின்றது. அது அவ்விலக்கணம் வகுக்கப் புகுவார்க்கு வடமொழி நெறிபற்றி வழிகாட்டிய துணையேயாவதன்றி வரையறுத்து முடிக்கப் பட்டதன்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவ்விலக்கணங்களை யெல்லாம் வரையறுத்துரைத்தல் அரிதேயாயினும் பிள்ளையவர்கள்போல வடமொழி தென்மொழி இரண்டினும் வல்லவராய் வழக்குஞ் செய்யுளு மாராய்ந்த புலவர் பலர் புகுந்து ஓரோரிலக்கணத்தை ஓரோரொருவராராய்ந்து வரையறுத்து வருவாராயின் அது நிரம்புதலுடையதாமென்பதில் ஒரு சிறிதும் தடையில்லை.

அவ்விலக்கணங்களாவன: பெயரடியாகப் பிறக்கும் பெயர்ப்பகுபதவிலக்கணங்களும் வினையடியாகப்பிறக்கும் வினைப்பகுபதவிலக்கணங்களும் பெயரடியாகப்பிறக்கும் பெயர்ப்பகுபதங்களும் முதலிய பலதிறப்படுவனவாம்.

அவற்றுட் பெயரடியாய்ப் பிறக்கும் பெயர்ப்பகுபதவிலக்கணங்களைத் தத்திதாதிகாரத்துட் பலதிறப்படப் பகுத்துக்கூறி முடிப்பர் வடநூலார்.

தமிழினும் அவ்வாறு பகுத்து முடித்தற்குபகாரமாகுமாறு பலவிதப்படும் பெயர்ப்பகுபதவிலக்கணங்களை ஒருவாறு தொகுத்து முன்னமே பிள்ளையவர்களால் இலக்கணசந்திரிகை எனப்பெயரிட்டு ஒரு சிறுநூல் வெளிப்படுத்தப் பட்டுள்ளது.

அவ்வாறே வினையடியாகப் பிறக்கும் வினைப்பகுபத விலக்கணங்களையும் பெயர்ப்பகுபத விலக்கணங்களையும் வரையறுத்தற்கு உபகாரமாகுமாறு வினைப்பகுபதவிளக்கம்என்னுமிந்நூல் பின்னும் பிள்ளையவர்களால் இயற்றி வெளியிடப்பட்டிருக்கின்றது

இந்நூலுட் சற்றேறக்தாழ முன்னூற்றைம்பது வினைப்பகுதிகளை எடுபற்றி வேறுபடவகுத்து அவற்

ழிணடியாகப் பிறக்கும் வினைப்பகுபதங்களாகிய தொழிற்பெயர், வினையெச்சம் பெயரெச்சம் வினைமுற்றென்னும் இவற்றின் வடிவுதோன்ற வரலாறு காட்டியும், அப்பகுதியடியாகப் பிறக்கும் சிலபெயர் வேறுபாடுகளும் அவற்றிற்கேற்றசில விகுதி பெறு முறைகளும் ஆணைவினைப் பகுதி வருநெறிகளும் சில பகுதிகள் விரிந்து விகாரப்படும் வகைகளும் சிலபகுதிகள் விகுதியால் பொருள் வேறுபடுந் திறங்களுமாகிய பலவகை யிலக்கணங்களைத் தெளிவுபெறக் காட்டியும் அரிய சொற்களுக்குப் பொருளுரைத்தும், அவை அப்பொருளில் ஆன்றோரால்வழங்கப்பட்டனவெனப் பிரயோகங் காட்டியும் முடிக்கப் பெற்றிருக்கின்றது.

இன்னும் இதனைக்குறித்து உதயதாரகைப் பத்திராதிபரெழுதிய மதிப்புரையையுங் காட்டுதும்:—

### உதயதாரகை.

### வினைப்பகுபத விளக்கம்.

நாவலர் கோட்டம் ஸ்ரீ முத்துத்தம்பிப்பிள்ளையவர்கள் விரும்பியவண்ணம் சுன்னாகம் ஸ்ரீ. அ. குமாரசுவாமிப்புலவர் அவர்களால் இயற்றப் பெற்று யாழ்ப்பாணம் நாவலர் அச்சுக்கூடத்திற் பிரசுரிக்கப் பெற்று வெளிப்பட்ட இப்பெரிய ஓர் இலக்கண நூலைக் கவனமாக வாசித்து ஆராய்ந்து பார்த்தோம். ஆக்கியோன் தமிழ் இலக்கண இலக்கியங்களிற் சிறந்த பாண்டித்தியமும் பலவிசேட இலக்கண நூல்களை இயற்றிய வன்மையுமுடையராயிருத்தலினால் இவ்விலக்கண நூல் மிகச்சிறப் புடைத்தெனக்கூறல் பொற்குடத்திற்குப் பொட்டிடுதல் போலாம் எனநினைக்கின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வினைப்பகுபத விளக்கம் என்னும் பெயருடன் வெளிப்பட்ட இந்நூல் நன்னூல் முதலிய இலக்கணங்களைப் படிப்போற்கும் படிப்பிப்போர்க்கும் அதிகம் உதவிசெய்வதுடன், நன்னூலிலேயுள்ள "நடவாமடி" என்ற சூத்திரத்தைப் பின்றொடர்த்து விரித்து நடவா முதலிய ஒவ்வொரீற்றிலும் பற்பல பகுதிகள்காட்டி முடிக்கப் பட்டிருத்தலை நன்கு விளக்குகின்றது. நன்னூல் முதலிய இலக்கணங்களிலே காணாதனவாய் விளங்கும் பலமுடிபுகளின் நுணுக்கங்களும் கொணர்தல் சோகாத்தல் ஏமாற்றல் முதலிய பகுபதங்கள் புதுமுடிபேற்று நிற்கும் தகைமையும் அரியனவாய பகுபதங்களுக்கு, சிந்தாமணி சிலப்பதிகாரம் முதலிய பழைய இலக்கியப் பிரமாணங்களும் அர்த்தங்களும் எழுதப் பட்டிருக்கும் வன்மையும் இக்காலத்துக் காணப்படும் விசேட சிறப்புக்களாம். நடவா முதலியவைகளாலே தோன்றிய பெயர்களும் நைடதம் பாரதம் படிப்போர்களுக்குபயோகமாய் அவற்றிலுள்ள பலசொற்களின் முடிபுகளும் இந்நூலின் கண்ணே மிகச்சிறப்பாகக் காட்டப் பட்டிருக்கின்றன.

தமிழ் இலக்கண இலக்கியங்களைக் கற்போருக்கு இந்நூல் அதிக பிரயோசன மாயிருக்கு மென்பது எனது அபிப்பிராயம். இவ்விலக்கண நூலையும் ஏனைய பலவிலக்கண நூலையும் இயற்றிய இந்நூலாக்கியோனுக்குத் தமிழுலகம் மிகுந்த கடமைப்பாடுடையதாய் இருப்பதால் இந்நூலை அனேகர் அபிமானித்து வாங்கிக் கற்றுத் தாமின்புறுவதுடன் ஆக்கியோனுக்கு உதவி புரிவாரென்று நம்புகிறோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த வினைப்பகுபத விளக்கம் என்னுநூல் நாவலர் கோட்டம் ஸ்ரீமாந் ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை அவர்கள் விரும்பியவாறு இயற்றியது.

இது அச்சிட்டகாலம் 1912.

**அகப்பொருள்விளக்கவுரை.**

பின் இவரும் தி. த. கனகசுந்தரம்பிள்ளையுமாக அகப்பொருள் விளக்கம் என்னு நூலை அதனுரையுடன் திருத்தி அச்சிட்டனர்.

இது அச்சிட்டகாலம் 1912.

**அகராதி. எழுதக்கேட்டல்.**

இந்நூலியற்றிய ஆண்டிலே சென்னை பரசாட்சியார் வித்துவான்களைக் கூட்டி ஒரு தமிழகராதி யெழுதுவிக்க விரும்பி அக்கருத்தை அரசாங்க உத்தியோகத்தர்களுக்குத் தெரிவித்தார்கள். அவ்வுத்தியோகத்தர்கள் "சான்ட்லர்" என்பவரை அக்கிராசனராகக் கொண்டு 1913-ம் ஆண்டில் (அதாவது) பிரமாதீச வருஷத்தில் ஒருசபை கூட்டினார்கள். கூட்டப்பட்ட அச்சபையார் அவ்வகராதியை யெழுதுவிக்குமுன் அவ்வகராதி எப்படி எழுதப்படவேண்டு மென்பதைப் பற்றித் தத்தம் அபிப்பிராயத்தைத் தெரிவிக்குமாறு பற்பலவூர்களினு மிருக்கும் தக்க வித்துவான்களிடம் கடித மூலமாகக் கேட்டார்கள். கேட்கப்பட்டவர்களில் இவரு மொருவர். இவர் தம் நண்பரான ஸ்ரீமத். கயிலாசபிள்ளை ஸ்ரீமத். முத்துத்தம்பிப்பிள்ளை என்னு மிருவரோடும் ஆலோசித்து ஆறுமுகநாவலர் கலாசாலையில் ஓர் சபைகூட்டினார். கூட்டிய அச்சபையார் கருத்தின்படி இவ்விதம் எழுதப்பட வேண்டு மென்று ஒரு நிருபம் அச்சென்னைச் சபையாருக்கு இவர் எழுதினர். எழுதிய நிருபத்தைக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ட அச்சுவைத் தில்லராகிய சான்ட்லரவர்கள் அடுத்த வருஷம் தையில் (1914-ல்) யாழ்ப்பாணம் வந்து இவரையழைத்து அகராதி யெழுதுதற்கு வேண்டிய விஷயங்களைப்பற்றிப் பேசினர். இரண்டு வாரம் வரையில் இருந்து வேண்டியவற்றை யிவரோடு கலந்து பேசிக்கொண்டு இவரைச் சென்னபட்டினம் வந்து எழுதுவோரிலொருவராக வருமாறு கேட்டனர். இவர் தேகாரோக்கியமின்மை முதலியவற்றைக் கருதி அதற்குடன்படவில்லை. பின் சான்ட்லரவர்கள் தாம் இவர் அச்சிடும் நோக்கமாக எழுதிவைத்திருந்த ஓகாராதிக் கொப்பியை ஒருதொகைப் பணங்கொடுத்துப் பெற்றுச் சென்றனர்.

சாணக்கிய நீதிவெண்பா

பின் வடமொழியிலுள்ள சாணக்கிய சதகத்தை மொழிபெயர்த்து வெண்பாவாற் பாடிச் சாணக்கியநீதி வெண்பாவெனப் பெயரிட்டு அச்சிட்டனர். அவ்வெண்பாக்கள் பழைய வெண்பாக்கள் போல மிகச்சுவையும் இசையும் அமைந்துள்ளனவாகும். அவற்றுட் சில காட்டுதும்:—

## சாணக்கிய நீதிவெண்பா.

### பண்டிதர்மகிமை.

சொல்லணிசேர் கல்வித் துறைபோய பண்டிதர்தாம்
வெல்லுமிகல் வேந்தரினு மிக்கவர்காண்—சொல்லுங்கால்
வேந்தர்க்குத் தந்நாட்டின் மேன்மையுண்டாம் பண்டிதர்க்குச்
சேர்ந்தவிட மெல்லாஞ் சிறப்பு.

### பண்டிதரல்லாதவர்.

உருவ மிளமை யுயர்ந்தகுடித் தோற்றம்
மருவினுமென் கல்வியிலா மக்கள்—ஒருசிறிதும்
வாசந் தராமுருக்கின் வண்மலரே போல்வரெனப்
பேசுவரே நூலோர் பிரித்து.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மூடன்வேடம்.

ஆடையா லேனை யணியா லலங்கரித்துப்
பீடுபெற வந்த பெருமூடன்—நீடவையில்
எவ்வளவும் பேசா தடங்கி யிருப்பானேல்
அவ்வளவு மேன்மை யவற்கு.

இதன் பெருமையை மகாமகோபாத்தியாயர் உ. வே. சாமிநாதஐயரவர்கள் எழுதிய கடிதம் உணர்த்தும். அது வருமாறு:—

### சாணக்கிய நீதிவெண்பா.

மிக்க பிரீதியோடு தாங்கள் அனுப்பிய சாணக்கிய நீதிவெண்பா என்னுமரிய புத்தகம் வரப்பெற்று மகிழ்ச்சியடைந்தேன்.

வடமொழி தென்மொழிகளில் ஒழுங்கான பயிற்சியடைந்து பயன்களையும் பெற்று விளங்கும் உங்களுடைய நாவின் அருமையை யான் பாராட்டுதல் மிகை. மொழி பெயர்ப்பும் செய்யுட்களின் நடையும் குறிப்புரையும் மிக்க திருப்தியை விளைவிக்கின்றன. தங்கள் போன்றவர்கள் இருந்து விளங்குவதுதான் தமிழ் மடந்தையின் ஆக்கத்திற்குக் காரணம். உங்களுடைய ஞாபகம் தான் எனக்கு ஊக்கத்தை அளிக்கின்றது.

உ. வே. சாமிநாதஐயர்.

இது அச்சிட்டகாலம் 1914.

9

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதன்பின் இவர் சங்க இலக்கியங்களிலும் சங்கமருவிய இலக்கியங்களிலும் பிற்றைச் சான்றோரிலக்கியங்களிலுமுள்ள அருஞ்சொற்களையெல்லாமாராய்ந்து தொகுத்து ஓர் அகராதியெழுதி அதற்கு

இலக்கியச்சொல்லகராதி. இலக்கியச்சொல்லகராதி யெனப் பெயர்தந்து ஓர் நூல் அச்சிட்டனர். இது பெரிதும் அரிய சொற்களின் பொருள்களை அறிதற்குதவியாகும். மற்றைய அகராதிகளில் வழுவுறவெழுதப்பட்ட சொற்கள் பல இதிற் றிருத்தமுறவெழுதப் பட்டுள்ளனவாதலின் இது மிகச்சிறப்புவாய்ந்தது. இதனருமையை மஹாராஜ சமூகபூஜித மகத்துவ ஸ்ரீயுக்த ராஜ ராஜேசுவர சேதுபதியவர்கள் வியந்தெழுதிய கடிதம் உணர்த்தும். அது வருமாறு:—

## இலக்கியச்சொல்லகராதி.

மஹாவித்துவான் ஸ்ரீமான் அ. குமாரசுவாமிப் பிள்ளையவர்களுக்கு விஞ்ஞாபனம்.

தாங்கள் அன்புகூர்ந்தனுப்பிய இலக்கியச்சொல் லகராதியென்ற அரியபுத்தகம் எய்தப்பெற்று மகிழ்ச்சியடைந்தேன். பெரிய இலக்கியங்களிலுள்ள அரிய சொற்களெல்லாம் இதன்கணுண்மையால் இது தமிழ்நூலாராய்வார்க்கெல்லாம் அதிகமாகப் பயன்படுமென்று கருதுகிறேன்.

இங்ஙனம்

B. ராஜராஜேசுவரசேதுபதி.

இது அச்சிட்டகாலமும் முன்னையாண்டே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதன்பின் இவர் அச்சிட்டநூல் தமிழ்ப்புலவர் சரிதம். இது தமிழிற்புலமையடைந்த புலவர்களுடைய சரிதங் கூறுவது. இதில் ஏறக்குறைய நானூறுபுலவர்களின்சரிதம் அடங்கியுள்ளது. சரிதத்தை மிகச்சுருக்கிக் காட்டினும் எழுதப்பட்ட வாக்கிய நடையோ முரண் முதலிய தொடைநயமும் சுருங்கச்சொல்லல் முதலிய அழகுமமைந்து, தஞ்சுவையை மிகப்பெருக்கிக் காட்டுகின்றன. புலவர்களுடைய ஊரும் பேரும் குலமும் செயலும் முதலியனவன்றிக் காலமுந் தெரிந்தவரையில் உணர்த்தப் பட்டுள்ளது. சிலசில புலவர்கள் பாடிய அருஞ் செய்யுள்களும் காட்டப்பட்டுள்ளன. கடினமான சில செய்யுட்களுக்கு உரையும் எழுதப்பட்டுள்ளது. இந்நூற்கு ஓர்முகவுரையும் மிகவிசேடமாக எழுதப்பட்டுள்ளது. அம்முகவுரையை வியந்து ஸ்ரீமத். ரா. ராகவையங்காரவர்களும் ஸ்ரீமத். திரு. நாராயணையங்காரவர்களும் கடிதம் எழுதியுள்ளார்கள்.

தமிழ்ப்புலவர்சரிதம்.

இப்புலவர் சரிதம் மஹாராஜசமுகபூஜித மகத்துவ ஸ்ரீயுக்த ராஜராஜேசுவரசேதுபதியவர்களின் செந்தமிழ்ப் பரிபாலன விருப்பம்நோக்கி யமைக்கப்பட்டது. இந்நூலையச்சிடுதற்குச் சேதுபதியவர்களும் ஒருதொகைப் பொருளுதவினார்கள். உதவிய நன்றிநோக்கி இவர் தாமெழுதிய முகவுரையில் சேதுபதியவர்களின் பெருமையை உரையானுங் கவியானும் வியந்து கூறியுள்ளார்கள். கவிகளிரண்டையுமிங்கேகாட்டுதும்.

**கட்டளைக்கலிப்பா.**

சீதை காவல னாதியி னட்டிய
தேவ ராலயம் போற்றிடுங் காவலன்

நீதி காவலன் றென்னெறி காவலன்
நீடு முன்னவர் செய்தரு மங்களின்
பாது காவலன் பாவலர் காவலன்
பழைய வைதிக சைவர்கள் காவலன்
சேது காவலன் செந்தமிழ் காவலன்
சீர்த்தி ராஜரா ஜேசுர மன்னனே.

### வாழ்த்து விருத்தம்.

ஓதுதமிழ்ப் புலவர்சரித் திரமா மிந்நூல்
உயர்ச்சிபெற வுபகரித்த செல்வச் சீமான்
தாதுமலி தளவமலர் மாலை மார்பன்
சயவீர ராசரா சேசுரப் பேர்ச்
சேதுபதி நரபாலன் பலநூல் கற்றோன்
செய்யதமிழ் வளர்க்குமபி மான சீலன்
மாதுபதி ராமேச னருளால் வேண்டும்
வரங்களெல்லாம் பெற்றினிது வாழி மாதோ.

இது அச்சிட்ட காலம். 1916.

இராமவதாரப் பாலகாண்டம்.

இதன்பின் இவரும் தி. த. கனகசுந்தரம்பிள்ளையுமாக ஆராய்ந்து பதிப்பித்தது இராமாவதாரத்துப் பாலகாண்டம். முன்னுள்ள அச்சுப் பிரதிகளையும், பல ஏட்டுப்பிரதிகளையும் வைத்து ஒப்புநோக்கி நன்கு ஆராய்ந்து அவற்றுள் உண்மையான பாடம் இதுவெனக்கண்டு திருத்தப்பட்ட செய்யுட்களையுடைத்தாகலின் இது முன்னுள்ள அச்சுப்பிரதிகளினும் எத்துணையோ மடங்கு சிறந்தது. இதற்கு ஓர் அரும்பதவுரையும் செவ்விதாக எழுதப்பட்டுள்ளது. ஆசிரியர்கருத்துக்குச் சிறிதும் இயையாத முன்னுரைகளையெல்லாம் விடுத்துப்பெரும்பாலும் அவர்கருத்தோடு பொருந்த எழு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தப்பட்டுள்ளதாகலின் இவ்வுரையும் முன் னுரைகளினும் மிகச் சிறந்தது. பாடச்சிறப்பும் உரைச்சிறப்பும் நோக்கச் சிலவற்றை இங்கே காட்டுதும்:—

**பாடங்களுட் சிறந்தனசில வருமாறு:—**

ஆற்றுப்படலத்து கக-ம் செய்யுளில், 'மணியுடைக் கொடி' என்பது 'மணிநுரைக்கொடி' எனவும் கஙு-ம்செய்யுளில், 'மறியுடையாயர் மாதர்' என்பது 'மறிவிழியாயர் மாதர்' எனவும், நாட்டுப்படலத்து உ-ம் செய்யுளில், 'கரம்பெலாம்' என்பது 'கரும்பெலாம்' எனவும், ௨0-ம் செய்யுளில் 'குறிகளும் போற்றிக்கொள்வார்' என்பது 'குறிகொளும் போத்திற்கொள்வார்' எனவும், நகரப்படலத்து ரு-ம் செய்யுளில் 'கண்டிலாநகரது' என்பது 'கண்டிலரங்கது' எனவும், திருத்தப்பட்டவைகள் சிறந்தவைகளேயாம். ஏனையவும் நோக்கியுணர்க.

**உரையுட்சிறந்தனசிலவருமாறு:—**

நாட்டுப்படலத்து க-ம் செய்யுளில் "வாங்கரும் பாத நான்கு வகுத்தவான் மீகி யென்பான்" என்னு மடியில்வரும் 'வகுத்தவான்மீகி' என்பதை 'வகுத்த அவ்வான் மீகி' எனவுரைத்தது மிகவுஞ் சிறப்புடைத்து.

உஅ-ம் செய்யுளில், 'தாட்டுடைகுடையும' என்பதற்குத் 'தாளாலே குடைதற்குச் சிதறுகின்ற' எனவுரைத்தது சிறப்புடையது.

நகரப்படலத்து எரு-ம் செய்யுளில் 'குணங்கூட்டிசைக்குப்பை' என்பதில், 'கூட்டு' என்பதற்கு 'நட்பு' எனப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருளுணர்த்தது சிறப்புடைத்து. "கூட்டொருவரையும் வேண்டா" எனப் பின்னுங் கூறுவர். (வாலிவதை-௮௬.)

௬௯-ம் செய்யுளுக்கு 'மடந்தையருடையகுதலை குழலிசையேயாம்' (பேதமில்லை) என்றும், 'அவர்களுடைய குழலிசை யாழிசையேயாம்' என்றும் பொருள் கொண்டது சிறப்புடைத்து.

மிதிலைக்காட்சிப்படலத்து வரும் ௨௯-ம் செய்யுளுரைப்பகுதியும் சிறப்புடைத்து. இன்னும்பலவுள. நோக்கியுணர்க.

இது அச்சிட்டகாலம் 1918.

இதன்பின்னர் இவர் தாம் முன்னரச்சிட்ட இதோபதேச மொழிபெயர்ப்பைச் சுருக்கி வசனரூபமாக எழுதி அச்சிட்டனர். இது அச்சிட்டகாலம் 1920.

இது பள்ளிக்கூடமாணவர் படித்தற்காக எழுதப்பட்டது. வாக்கிய நடை மிகஅழகுஞ் சுவையுமமைந்துள்ளது.

பின்வடமொழியிலுள்ள மாகமெனப்படும் சிசுபாலவதமென்னு நூலை அந்நூலிலுள்ளபடி வர்ணனைகளும் நடையும் சுவையுமமையத் தமிழில் மொழிபெயர்த்துக் கத்தியரூபமாக எழுதி அச்சிட்டனர். எழுதும் சிசுபாலசரிதம். போது வடமொழியிலுள்ள மகாபாரதம் பாகவதம்முதலிய இதிகாசங்களிற் சொல்லப்படும் சிசுபாலனென்பவனுடையகதையையுந் தழுவி எழுதினர். தமிழிலே உரைநடையில் இதுபோலும் மொழிபெயர்ப்புநூல் செய்தவர் இதுவரையும் இல்லையெனலாம். மொழிபெயர்ப்புவன்மையுணர அதனுட் சிலபாகத்தைஇங்கே காட்டுதும்:—

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாலையுங் காலையும்வருகை.

சூரியனும் மேலைக்கடலைநோக்கினன். சீரியரும் மாலைக்கடனை நோக்கினர். மிருகங்களும் துயிலிடத்தை நோக்கின பறவைகளுங் கூடுகளைநோக்கின. திக்குஞ் சிவந்தது. செக்கரும் பரந்தது. பகலும் போயிற்று. இரவும் வந்தது இருளுஞ் செறிந்தது. சந்திரனும் எழுந்தது. தாமரையுங் குவிந்தது. குவளையும்மலர்ந்தது. விண்மீன்களும் விரிந்தன. யாவருந் தத்தமக்கேற்ற இடங்களை எய்தினர்; உண்டனர்; மகிழ்ந்தனர்; உறக்கமும் புகுந்தனர். இப்படியே இரவும்போயிற்று. காலையும்வந்தது. சூதரேத்திய துயிலெடை நிலையும் எழுந்தது. கீதவாத்திய முரசசங்க நாதமும் எழுந்தது. கோழிச்சேவல் கூவுஞ்சத்தமும் எழுந்தது. தாழித்தோய்தயிர்கடையுஞ் சத்தமும் எழுந்தது. யாவருந் துயிலெழுந் திதயந் தெளிந்தனர். தேவரை வழிபாடுசெய்து மகிழ்ந்தனர். அரசரும் நால்வகை உபாயங்களை ஆராய்ந்தனர். தாமரையும் மலர்ந்தது. குவளையுங் குவிந்தது. வண்டுகளும் மொய்த்தன. இரவும்போயிற்று. பகலும்வந்தது. சந்திரனும் நடந்தது சூரியனும் எழுந்தது.

இது அச்சிட்டகாலம். 1921

**இராமோதந்தம்.** பின் வடமொழியிலுள்ள இராமோதந்தமென்னு நூலைத் தமிழில் மொழிபெயர்த்துப்பாடி மதுரைத் தமிழ்ச்சங்கத்தாருக்கு அச்சிடும்படி உதவினர்.

மாணாக்கர் படித்தற்பொருட் டியற்றியதாதலின், இதிலுள்ள செய்யுட்கள்யாவும் கடினபதங்கள் நீக்கியியற்

றப்பட்டன. ஆயினும் பொருணயமும் சுவையுமமைந் துள்ளன. அவற்றுட் சில காட்டுதும்:—

"வேந்தனும் வரங்கொ டுத்தான் வீரனு மதனைக் கேட்டு
வாய்ந்திடுங் காடு செல்ல வழிக்கொளும் போதிற் சீதை
தேர்ந்துடன் வருவே னென்று சேர்ந்தன ளிளைய கோவும்
சேர்ந்தனன் மூன்று பேருஞ் சென்றனர் கான நோக்கி."

"சித்திர கூடஞ் சென்று தேவியை யிளைய கோவை
அத்தனை யணுகிக் கண்டா னடைந்தகா ரியமுஞ் சொன்னான்
அத்தனு மவனை நோக்கி யையநீ வந்த செய்கை
எத்திறமென்ன வுன்னை யான்கொடு போக வென்றான்.

இது அச்சிட்டகாலம் 1922.

அதன்பின், இரகுவம்சகாவியத்தைக் கத்தியரூபமாகத் தமிழில் மொழிபெயர்த்து இரகுவம்ச சரிதாமிர்தம் எழுதிவந்தனர். எழுதிவந்த இந்நூல் பூரணமாகமுன் முன்பற்றிய வாதநோய் குறைந்து வயிற்றுளைவுநோயுண்டாயிற்று. உண்டாய அந்நோயின் முதிர்வினாலே இவர் கிறீஸ்தாப்தம் 1922-க்குச் சமமான துந்துபிவருஷம் சித்திரைமாதம் உ௩-ம் திகதி புதன்கிழமையிலன்று புத்திரரும் மித்திரரு மேங்கக் கற்றோரும் மற்றோரு மிரங்கத் தேகவியோகமடைந்தனர்

தேகவியோகம்

இவர் தேகவியோகமடைந்த காலத்தையமைத்து யாம் பாடிய வெண்பாவையு மிங்கே தருதும்:—

ஆண்டுநிகழ் துன்மதியி லாயகும்ப நன்மதியிற்
பூண்டவிரு பானைந்திற் புந்தியினி—னீண்டகலை
கூர்தசமி சுன்னைக் குமாரசுவா மிப்புலவப்
பேர்மணிசென் மேற்கதிநாட் பேறு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நூல்களன்றி, இன்னுஞ் சில நூல்கள் இவராற் றிருத்தப்பட்டும், உரையெழுதப்பட்டும், நூதனமாக இயற்றப்பட்டு முள்ளன. திருத்தப்பட்டன, உரிச்சொனிகண்டு பழமொழிவிளக்க மென்பன. உரையெழுதப்பட்டது, கலைசைச்சிலேடைவெண்பா உரை. இவ்வுரையே இதற்கு முதலுரை. இயற்றப் பட்டன, அத்தியடிவிநாயகரூஞ்சல் முதலியன. விரிவஞ்சி இவைமுதலிய விரிக்கப் படாது விடப்பட்டன. நிற்க.

பிறர்க்குத் துணைபுரிதல்.

இவர், முன்சொல்லிய நூல்களைத் தாமே இயற்றியும் திருத்தியும் உலகிற் குபகரித்ததேயன்றி, பிறர்க்கும் அவர் வேண்டுகோட் கிணங்கி அவர் இயற்றியும் திருத்தியும் அச்சிடவிரும்பிய நூல்களையும் பரிசோதனை செய்து அவரச்சிடற்குத் துணைசெய்திருக்கின்றார்கள்.

கொழும்பில் வசித்த நியாயதுரந்தரர் ஸ்ரீமான். மு. திருவிளங்கமவர்கள் திருப்புகழ், கந்தரலங்காரம், சிவப்பிரகாசம், சிவஞானசித்தியார் என்னு மிந்நூல்களுக்கு உரையெழுதி யச்சிட்டபோது இவரே மிகப்பல திருத்தங்கள் செய்து உதவினர். ஸ்ரீமத். சுவாமிநாத பண்டிதரவர்கள் தேவாரமும் சிவஞானபாடியமும் அச்சிட்டபோது இவரும் அவற்றைப் பரிசோதனைசெய்து பல திருத்தங்கள் செய்தனர். அதனைப் பண்டிதரவர்களும் தாமெழுதிய நூன்முகத்திற் கூறியுள்ளார்கள். இங்ஙனமே இவர் உதவியை விரும்பிய உரையாசிரியரும் நூலாசிரியரும் இன்னும் பலருளர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்னும் பிறர் தொகுத்தும் திருத்தியும் புதிதாக இயற்றியும் அச்சிட்ட நூலுரைகளுக்குச் சிறப்புப்பாயிரமும் அளித்துள்ளார்கள். அவற்றுள் அருமையும் பெருமையும் வாய்ந்த சிலகவிகளை இங்கே காட்டுதும்:—

சிறப்புப்பாயிரமளித்தல்.

ஸ்ரீமான். பாண்டித்துரைத் தேவரவர்கள் தொகுத்த சைவமஞ்சரி என்னு நூலுக்கு அளித்த சிறப்புப்பாயிரத்துட் சிலகவி வருமாறு:—

திக்குலவும் புகழாளன் பிரபுகுல சிகாமணியாய்ச் சிறந்த சீலன், அக்கிரகண் ணியன்பொன்னுச் சாமியெனு நரபால னருளும் பாலன், நக்கனடி யவர்பாலன் பேறுளத்தன் வெண்ணீறு நண்ணும்பாலன், தக்கபொரு ணிலவுகலை விநோதனுயர் சற்சங்க சநனு கூலன்.

பூதேவன் புகலியர்கோன் முதலறிஞர் தமிழ்நூலின் பொருள்களுள்ள, மீதேவன் புறமருவப் பதித்தேவன் றேவனெனும் வெளிறு நீங்கி, நீதேவ னெனக்கொண்டு நிலத்தேவன் பகைகடந்து நெறிநின் றீசன், மாதேவன் பதத்தேவன் மகிழ்பாண்டித்துரைத்தேவ மன்னன் மாதோ.

ஸ்ரீமத். சுவாமிநாத பண்டிதரவர்கள் அச்சிட்ட சிவஞானபோதமாபாடியவுரைக்கு இவர் அளித்த சிறப்புப்பாயிரத்துள்ளும் ஒரு செய்யுள் காட்டுதும்:—

கராவிடஞ்சேர் மகனளித்தோன் கயிலையுறை தருநாளிற்
கைக்கொண் டுந்த
வராவிடஞ்சேர் மிடறுடையோ னருளடைந்த பாணினிமுன்
னளித்த நூற்குப்
பராவிடமிக் குயர்வுபெறு பதஞ்சலிமா பாடியம்போற்
பயிலும் பண்பாற்
றிராவிடமா பாடியமாந் திருப்பெயரும் பேருரைக்குச்
செப்பு வாரே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்னும், தன்மாணுக்கராகிய ஸ்ரீமத். ஆ. சண்முகரத்தினசர்மா என்பவர் நடாத்திய ஞானப்பிரகாசமென்னும் பத்திரிகைக்கும் இவரளித்த வியப்புக் கவியொன்றையும் இங்கே காட்டுதும்:—

பற்றுள செந்தமிழ் வாக்கியங் காட்டும் பகைநொதுமல்
அற்றுயர் நூதன சம்பவங் காட்டு மருங்கவிக்குச்
சிற்றுரை காட்டும் பொழிப்புரை காட்டுஞ் சிறந்தபொருள்
உற்றுள ஞானப் பிரகாச மென்னு மொளிவட்டமே. நிற்க

இனி, இவர் புலமைநலங்களுட் சில கூறுதும்:—

இவர் சொற்களை வரையறுத்துப் பிழையின்றி யெழுதுவதிலும் அவற்றிற்குப் பொருள் கூறுவதிலும் மிகவல்லுநர். இலக்கியங்களின் மூலபாடங்களைப் பலமுறைநோக்கி, அவற்றின்பொருளை நுண்ணிதிற்கண்டு உரை கூறுவதிலும் வல்லுநர். ஏட்டுப்பிரதிகளாயுள்ள பழையநூலுரைகளை நோக்கிப் பிழையற அச்சிற் பதிப்பித்தலிலும் வல்லுநர். பிறர் அச்சிற்பதிப்பித்த நூலுரைகளைநோக்கி யவற்றிலுள்ள பிழைகளை நுண்ணிதிற்கண்டு வெளிப்படுத்தவும் வல்லுநர். சொற்சுருங்கன் முதலிய அழகுபெற வாக்கியங்களைத் தொடுக்கவும் வல்லுநர். பழையபாக்கள்போல வெண்பாமுதலிய பாக்கள் இயற்றவும் வல்லுநர். இவருடைய இவ்வன்மைகளை நோக்கித் தாம்செய்த நூல்களைத் திருத்துவித்தாரும், பிழைகூறுவாரோ வென்னு மச்சத்தால் சிறப்புப்பாயிரம் பெற்ருரும் பலரென்ருல் இவர்வன்மையைக்குறித்து யாம் சொல்வதென்னே?

இனி, இவர் குணநலங்களுள்ளுஞ் சிலகூறுதும்:—

இவர் மாணுக்கர்களுக்குத் தாமறிந்த நுண்பொருள்களை யெல்லாம் வஞ்சியாது உணர்த்துபவர். பணத்தை விரும்பி மாணுக்கர்களைக் கற்பியாதவர். தமது புத்த

சங்களைக் கொடுத்தும் மாணாக்கர்களைக் கற்பிக்கும் தருமசிலர். தமிழ்க்கல்வி கற்கும்படி இளைஞரை ஏவுபவர். கற்றவரிடத்தில் மிகவும் அன்புடையவர். அவரைப்பெரிதும் உபசரிப்பவர். கற்றவரோடு பேசும் விருப்புடையவர். மற்றவரோடும் வினோதமாகப்பேசும் விருப்புமுடையவர். ஏனைப்புலவரைப் போலப் பிறரைக்கொண்டு தம்மை மதிப்பிக்க விரும்பாதவர். உடைநடைகளாற் பிறர்தம்மை மதிக்கவேண்டுமென்று எண்ணாதவர். தம்மைப்புலவரென்று தாமியற்றிய நூல்களில் தாமே எழுதாதவர். தமக்கு அவமானமென்று கருதாது தமக்குப் புலப்படாதவற்றைக் கற்றவர்பால் வினவியறியும் பெருங்குணம் பூண்டவர். தெரியாதென்று சொல்லுதல் அவமானமென்று கருதாது தெரியாதவற்றைத் தெரியாதென்றே சொல்லுபவர். நூலுரைகளில் வரும் பிழைகளைச் சிறிதும் சகியாதவர். தமது நூல்களில்வரும் பிழைகளையும் ஒப்புக்கொள்பவர்.

இலங்கையரசாட்சியாரின் சன்மானம்பெறல்.

இலங்கையரசாட்சியார் இலங்கையிலுள்ள தமிழ் வித்துவான்களுட் சிறந்தவர்களாயுள்ளவர்கள் ஐவர்க்கு ஓரொருவர்க்கு இருநூற்றைம்பதுரூபா கொடுத்துச் சன்மானிப்பதாகத் தீர்மானித்தனர். அப்பொழுது யாழ்ப்பாணத்திலுள்ள செந்தமிழ்ப்பரிபாலன சபையார் நாவலர்கலாசாலையில் ஓர்சங்கங்கூட்டி அரசாட்சியாருடைய சன்மானப்பணத்தைப்பெறுதற்குத் தகுந்த தமிழ்ப்புலவர் இவரேயென்று தீர்மானித்து அதனை அரசாட்சியாருக்கு அறிவித்தார்கள். அரசாட்சியாரும் அப்பணத்தைக் கொடுத்து இவரைச் சன்மானித்தார்கள். இவர் சன்மானிக்கத் தகுந்தவரென்பதை இவர் இயற்றிய நூல்களே கூறுமாதலின் யாம் கூறுதல் மிகையாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அநுபந்தம்.

---

தென்கோவை பண்டிதர் ஸ்ரீமாந். ச. கந்தையா பிள்ளையவர்கள் இவர் தேகவியோகமானபோது இவர்மீது தாம்கொண்ட அநுதாபத்தைக்குறித்து எழுதிச் செந்தமிழில் வெளிப்படுத்திய விஷயத்தையும், இந்நூல் ௬௪ - ம் பக்கத்திற் காட்டியவாறு அநுபந்தமாக இங்கே தருதும்:—

## குமாரசுவாமிப்புலவர்.

---

அருமைபெருமைவாய்ந்த அறிவு ஒழுக்கங்களான்ற ஆப்த சிகாமணியும், வடமொழி தென்மொழிகளில்வல்ல கவிஞர்சிகாமணியுமாகிய யாழ்ப்பாணைச் சுன்னாகத்துக் குமாரசுவாமிப்புலவர் சிவபதமடைந்தனர் என்னுஞ் செய்தியைக் கேள்வியுற்ற தமிழுலகம் அருமணியிழந்த நாகம்போலக் கையாறுற்றுக் கலையின் சூழ்கலமாயிற்றே! நுணங்கியகேள்வியும் வணக்கவியல்புமுடையராய்ச் சொற்பிரயோகஞ்செவ்விதுகொண்டு படியில்லாத்தலைய செழுந்தமிழ்வல்லவராகிய இப்புலவர்பெருமானைப்போலக் கற்பவருளங்கொள்ளுமாறு கற்பகமென்னச் சொற்பொருள்விளக்கும் தேசிகோத்தமர்கள் யார்கொலோ என்று மாணவரெல்லாம் கவலாநிற்கின்றனரே! நஞ் செந்தமிழணங்கின் செய்தவப்பெற்றியு மின்னதாயிற்றே!

இப்புலவர்திலகர், யாழ்ப்பாணத்து உடுவிற்பதியில்வசித்த வேளாண்குலத்தினராகிய சந்திரசேகரர்மரபிலே முத்துக்குமார கவிராயருக்குப் பௌத்திரராய்ச் சிவபத்தி அடியார்பத்திகளிற் சிறந்த அம்பலவாணபிள்ளை என்பவருக்கு அருந்தவப்புதல்வராய்ச் சுன்னாகத்திற்பிறந்து, நல்லொழுக்கமும் நுண்மதியும் உடன்வளர வளர்ந்து, முருகேசபண்டிதரிடம் தமிழும், நாகநாதபண்டிதரிடம் ஸம்ஸ்கிருதமும் கற்று வல்லராகி, மாணவர்பலர்க்கு இலக்கண இலக்கியங்களையும் பிறநூல்களையும் கற்பித்தலையும், பத்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரிகைகளுக்கு வாதவிடயங்களும் பிறவுமாக அரியவிடயங்கள் எழுதுவதையும், நூலுரைகளைப் புதியனவாக இயற்றுவதையுமே தொழிலாகக்கொண்டு, தமிழ்ப்புலமையிலும், கவிபாடுதலிலும் மிகச்சிறந்தவராய்த் தமிழ்நாட்டுக்குப் பேருபகாரியாய் விளங்கினர்; முன்னர்க் கற்றதனோடமையாது, மேலும் நூலுரைகளைத் தேடி இடைவிடாது கற்றலும் கற்றவாறு ஒழுகுதலும் கைகூடப்பெற்றனர்; கல்வி செல்வங் காரணமாக அகங்காரங்கொண்டு பழி பாவங்களைத் தேடுதலும், புகழ் பொருள் காரணமாக ஆடம்பரவேடம்பூண்டு அவமானமடைதலும் அறியாதவர். "தூக்கின் - மெலியது மேன்மேலெழச்செல்லச் செல்ல - வலிதன்றே தாழுந் துலைக்கு" எனவும், "முழுமணிப் பூணுக்குப் பூண்வேண்டா யாரே - அழகுக் கழகு செய்வார்" எனவும் வரும் ஆன்றோர் வாக்குக்களும் ஈண்டு நோக்கற்பாலன. இவரிடம் முறையாக நெடுங்காலங் கற்றோரும் இடையிடையே ஐயங்களை வினவித் தெளிந்தோருமாக உள்ளவர் மிகப் பலராவர். 'பொன்னைக்கருமல்லாது புகலுண்டோ' என்பதுபோலப் புகழ்ந்து, கடிதவாயிலாக ஐயங்களை வினவித்தெளிந்தும், நூலுரைகளைப் பார்வையிடுவித்தும் உதவிபெற்றுக்கொண்டுவந்த வடதேயப் புலவரும் பலராவர். இவ்வாறு கற்றோர்க்கும் மற்றோர்க்கும் உற்றிடத்துதவும் பெற்றிநோக்கி இவரைப் புலவர்சிந்தாமணி எனக் கூறுதல் ஒருஞான்றும் புனைந்துரையாகாது. மாணவர்யார்க்கும் பரோபகாரமாகச் சொற்பொருள்தெளிக்கு நற்குணமாண்பும், ஆற்றலும், முன்னொருகால் யாம் சிறப்புப்பாயிரமாகக் கூறிய பின்வரும் ஆசிரியப்பாவின் அடிகளாலும் ஒருவாறு புலப்படும். அவ்வடிகள்,

"மங்குல்கண் படுக்கும் பொங்குபூந் தருக்களின்
விண்மணி வெயில்புகாத் தண்மணி நிழற்கீழ்ச்
செந்தார்ப் பொலிந்த சிறுபசுங் கிளிகள்
மேவிய காதலிற் பூவைகட் கென்றுஞ்
செந்தமிழ் மொழிகளைச் செவ்விதிற் பயிற்றல்
தம்பயன் கருதாத் தன்மையின் மரீஇ
மாணவர் தமக்குப் பேணியே நாளுங்
கலையமு தளிக்கு நிலைமையின் வழாஅ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆன்றமை புலத்துச் சான்றோர் செயலென
இறும்பூது பயக்கு நறும்பொழி லுடுத்த
சுன்னைமா நகரின் மன்னுபே ரறிஞன்;
எல்லார்க்கு நன்றாம் பணித லவருளுஞ்
செல்வர் தமக்கே செல்வமென் றுரைத்த
பொய்யில் புலவன் பொருளுரைக் கிலக்கியம்
ஆகப் புகலுஞ் சோகமில் பெரியோன்
வடமொழி தென்மொழிக் கடனிலை கண்ட
இத்தலம் புகழும் வித்துவச் சிரோமணி
அளியனேன் மனமா மணிநீர்ப் பொய்கையின்
மலர்ந்திடுஞ் செந்தா மரைமல ரடியான்
துங்கமார் குமார சுவாமிப் புலவன்”

என்பனவாம்.

பிள்ளைமைக்காலந்தொட்டுப் பத்திரிகைகளிலும், மாசிக சங்கிகைகளிலும், நான்முகங்களிலும் இவரால் எழுதப்பட்ட வசனவடிவமைந்த விஷயங்கள் செந்தமிழ்நறுந்தேன்பிலிற்றிப் பத்தழகும்பயின்று, விவாதச்செறிவாற் போலிக்கொள்கைகளைச் சண்டமாருதம்போற் சென்றுதாக்கித் தலைகுனிவிக்குந் தன்மையன. பிறரைத் தெருட்டுமுகத்தால், பரோபகாரமாக நூலுரைப் பிழைகளை நுண்ணிதினாய்ர்து இவரால் வெளியிடப்பட்ட எதிர்நூல்களும் பல. “போலிநாவலர்கள் புரைபட வியற்றிய - நூலுரைப்பிழைகளை நுண்ணிதி னாய்ந்தவர்” என இவரைப்புகழ்ந்து கூறினாருமுளர். இவராற் பாடப்பட்ட பிரபந்தங்களும், சிறப்புப்பாயிரங்களும், முத்தகச்செய்யுட்களும் எத்தனையோபல. கவிகள் செவ்விய மதுரஞ்சேர்ந்த சீரிய கூரிய நீஞ்சொற்களானமைந்து, ஒழுகிய ஓசையும் விழுமியபொருளுங் கொண்டுள்ளன. இவர் மொழிபெயர்த்துப்பாடிய மேகதூதக்காரிகை, ஏகவிருத்தபாரதம், இராமோதந்தம், சாணக்கியநீதிவெண்பா முதலியன “நன்றிசைக்குமுறைவழி நன்னெடுங் - குன்றிசைப்பதுபோல” அவ்வவ் வடநூற்பொருண்மாண்மையும், செந்தமிழ்ப்பாடற்செவ்வியையும் நன்கு புலப்படுத்துவனவாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாணக்கியநீதிவெண்பா என்னும் நூலுக்குச் சிறப்புப்பாயிரமாக யாம்கூறிய கவிகளும் உரிமைபற்றி ஈண்டுக் காட்டப்படுகின்றன.

உலகுபுகழ் வடமொழியி னுயர்சாணக் கியகவிஞ னுரைத்த நீதி, குலவியநூ னறும்பொருளைப் பத்தழகு நவரசமுவ குதிகொண் டாட, நிலவுதமிழ் வெண்பாவி லெளிமைமொழி யிதுவென்று நிலத் தோர் கொள்ளப், புலவர்புது விருந்துகொளப் பெயர்த்துரைத் தான் யாவனெனிற் புகலக் கேண்மோ.

மன்னியசெந் தமிழ்மொழியும் வடமொழியு மினிதுணர்ந் தோன் மாசில் வாய்மை, துன்னிமிகு குணக்குன்று கவிஞர்சிகா மணியாகித் துலங்குந் தோன்றல், பன்னுமென்பேர வியர்பலர்க் குப் பலகலைநூலளித்தருளும் பரோபகாரி, சென்னையெனு நகராளி குமாரசுவாமிப் பெயர்கொள் சுகுணன் மாதோ.

சிசுபாலன்கதை, கண்ணகிகதை, இதோபதேசம், தமிழ்ப்புலவர்சரித்திரம் என்பனவும் "செந்தமிழ்"ச் சஞ்சிகைகளிலும் பிற பத்திரிகைகளிலும் வரையப்பட்ட அரியவிஷயங்களும் வாக்கியத் தொடைவன்மையைக் காட்டும். தண்டியலங்காரப்புத்துரை, யாப்பருங்கலக்காரிகையுரை, அகப்பொருள்விளக்கவுரை, நீதிநெறி விளக்கப்புத்துரை, இராமாயணஅரும்பதவுரை, இரகுவம்மிசக் கருப்பொருளுரை முதலியனவும், இலக்கணசந்திரிகை, வினைப் பகுபதவிளக்கம் என்பனவும், உரைவன்மையையும் இலக்கண இலக்கியஉணர்ச்சியையும் நன்கு காட்டும். செந்தமிழ்வள்ளலும், மதுரைத்தமிழ்ச்சங்கத் தாபகருமாகிய ஸ்ரீமாந். பாண்டித்துரைத் தேவரவர்களும். மாட்சிமைதங்கிய இராஜராஜேஸ்வரசேதுபதி மகாராசர் அவர்களும் நம் புலவரவர்கள்மாட்டுப் பெருமதிப்புடையார்களென்பது, அன்னவர் விசேஷாபிமானம்பெற்றுப் புலவரவர்களால் வெளியிடப்பட்ட நூலுரைகள் காட்டும்.

புலவரவர்கள் அவ்வப்பெரியார்மீது பாடிய கவிகளுள்ளும் இவ்விரண்டு கவிகள் இயைபுபற்றி ஈண்டுக் காட்டப்படுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஸ்ரீமாந். பாண்டித்துரைத்தேவரவர்கள்மீது பாடியன.

திக்குலவும் புகழாளன் பிரபுகுல சிகாமணியாய்ச் சிறந்த சீலன்
அக்கிரகண் ணியன்பொன்னு சாமியெனு நரபால னருளும் பாலன்
தக்கனடி யவர்பாலன் பேறுளத்தன் வெண்ணீறு நண்ணும் பாலன்
தக்கபொரு ணிலவுகலை விநோதனுயர் சற்சங்க சஜ்ஜனுகூலன்.

பூதேவன் புகலியர்கோன் முதலறிஞர் தமிழ்நூலின் பொருள்க ளுள்ள, மீதேவன் புறமருவப் பதித்தேவன் தேவனெனும் வெளிறு நீங்கி, நீதேவ னெனக்கொண்டு நிலத்தேவன் பகைகடந்து நெறி நின் றீசன், மாதேவன் பதத்தேவன் மகிழ்பாண்டித் துரைத்தேவ மன்னன் மாதோ.

---

மாட்சிமைதங்கிய

## சேதுபதிமன்னரவர்கள்மீது பாடியன.

சீதை காவல னுதியி னட்டிய
 தேவ ராலயம் போற்றிடுங் காவலன்
நீதி காவலன் றொன்னெறி காவலன்
 நீடு முன்னவர் செய்தரு மங்களின்
பாது காவலன் பாவலர் காவலன்
 பழைய வைதிக சைவர்கள் காவலன்
சேது காவலன் செந்தமிழ்க் காவலன்
 சீர்த்தி ராஜரா ஜேசுர மன்னனே.

ஓதுதமிழ்ப் புலவர்சரித் திரமா யிந்நூல்
 உயர்ச்சிபெற வுபகரித்த செல்வச் சீமான்
தாதுமலி தளவமலர் மாலை மார்பன்
 சபாவீர ராசரா சேசுரப் பேர்ச்
சேதுபதி நரபாலன் பலநூல் கற்றோன்
 செய்யதமிழ் வளர்க்குமபி மான சீலன்
மாதுபதி ராமேச னருளால் வேண்டும்
 வரங்களெலாம் பெற்றினிது வாழி மாதோ.

புலவரவர்களது சொற்பொருளுணர்ச்சிவன்மையையும், சம்ஸ்கிருதநூலுணர்ச்சியையும், அவர்களால் வெளியிடப்பட்ட இலக்கியச்சொல்லகராதியும், சூடாமணிநிகண்டுச்சொற்பொருள்விளக்கமும் ஷை புலவரவர்களுதவிகொண்டு ஸ்ரீமான். நீதிபதி கு. கதிரைவேற்பிள்ளையவர்களால் தொகுக்கப்பட்டு, மதுரைத்தமிழ்ச்சங்கத்தாரால் அச்சிடப்பட்ட அகராதியும், மொழிபெயர்ப்புநூல்களும் காட்டும். இவர்களால் தமிழுலகம் அடைந்த நன்மையோ அளவிடற்கரியது. தக்கவாறு அபிமானிப்போருதவியும் பிறவுதவிகளும் வாய்க்கப்பெற்றிருக்குமாயின் நம் புலவரவர்கள் எத்தனையோ அரிய பழந்தமிழ்நூல்களையெல்லாம் பிழையின்றிப் பரிசோதித்து அச்சிட்டும், புதியனவாகப் பலநூல்களை இயற்றியும் இன்னும் விசேஷமாக உலகிற்கு உபகரித்திருப்பார்கள்.

இவர்கள் பாடிய செய்யுட்கள்முழுவதையும் ஒருங்குசேர்த்துக் "குமாரசுவாமிப்புலவரவர்கள்பிரபந்தம்" என்னும் பெயரோடு அச்சிட்டு வெளிப்படுத்தினால், அஃது, இத்தமிழுலகிற்குப் பெரும்பயன்றருதலோடு, புலவரவர்கள் தமிழ்ப்புலமைகாரணமாகஅமைக்கப்படுந் தக்க ஞாபகச்சின்னங்களுள் ஒன்றாகவும நின்று நிலவும் என்பது எமதுகருத்து.

இத்தகைய அருமைபெருமைவாய்ந்த புலவர்பெருந்தகையைத் தமிழுலகம் இழக்கப்பெற்றது நம்மனோர்தவக்குறைவென்றே பின்னும் கூறி இவ்வளவில் முடிக்குதும். இவர் இச்சங்கப்புலவருள் ஒருவராதலின், இவர் சிவபதமடைந்தமைகாரணமாக எழுதப்பட்ட இவ்விஷயமும் 'செந்தமி'ழுக்கு உரியதென்றே கொள்ளுதும்.

இங்ஙனம்

தேன்கோவை, ச. கந்தையபிள்ளை.

UNIVERSITY OF CEYLON
-7 FEB 1944
LIBRARY.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## TAMIL SCHOLAR & POET.

## SRI A. KUMARASWAMY PULAVAR.

---

Sri A. Kumaraswamypulavar, the great scholar and poet of the North, died last Wednesday at Chunnakam, Jaffna.

Jaffna has been famous as the seat of Sen-tamil (Chaste Tamil) from the times of Aryachakkaravarthys who patronised Tamil literature by establishing Tamil Sangams at Nallore in Jaffna. Scholars and poets flourished for a long time. By then Prince Arasakesari, Sinnatambipulavar, Senathirayamudaliar, Arumuga Navalar, Sivasambupulavar, Ponnampalapillai, Sabapathy Navalar and Kumaraswamypulavar were recognised as talented scholars and poets.

The late Kumaraswamypillai was a great authority on Tamil literature and grammar. He was a good Sanskrit scholar and poet. He was one of the chief Members of and examiner to the Madura and Jaffna Tamil Sangams. His whole life was spent in teaching and writing. He has written many commentaries on many classical works and he has composed many poems. He was held in great esteem by the late Pandithoreythevar, founder of the Madura Tamil Sangam and by the leading Tamil scholars in Southern India. He has rendered valuable assistance in the compilation of that

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

big Tamil dictionary published by the late C. Cathiravetpillai (father of Mr. K. Balasingham). A great gap is caused by the death of this eminent scholar which cannot easily be filled. Among his pupils the late Vidwan S. Sivananda Iyer of Tellippalai, S. Ganesa Iyer. Tamil Pandit Oriental school Jaffna, and Pandit Candiahpillai of the Education department may be mentioned. He leaves behind two sons and a daughter and a host of relations to bemoan his loss.

— " The Ceylon Daily News " (10-3-1922).

---

## ஒரு புலவர்பெருமானின் மரணம்.

யாழ்ப்பாணத்துச் சுன்னாகம் குமாரசுவாமிப்புலவரவர்களை நந்தமிழுலகத்தறியாதார் இல்லை. இப்புலவர்பெருமான் துர்மதி வருஷம் மாசிமீ ௨௰௨ இரவு தேகவியோகமாயினரெனக்கேட்டுப் பெரிதும் இரங்குகின்றோம். புலவரவர்கள் தென்கலை நிலைகண்டுணர்ந்தவர். வடநூற்புலமையுமுடையவர். இவராற் தமிழுலகுக்கு விளைந்தநன்மை அளப்பரிதாம். இவ்வருந்தகையாளர் கேட்டார்ப்பிணித்துக் கேளாரும் வேட்பமொழியுஞ் சொற்பிரயோக வன்மையுடையவர். தமக்கென வாழாது பிறர்பொருட்டுழைத்தவர். இவரியற்றிய கட்டுரைகளெல்லாம் திட்பநுட்பஞ்செறிந்து செந்தமிழ்த்தேன்பிலிற்றிப் படிப்போர்க்குப் பேருவகை அளிப்பனவாம். "செந்தமிழ்"ப் பத்திரிகைக்குப் புலவரவர்கள் எழுதிவந்திருக்கும் நுண்பொருள்களெல்லாம் அவர்தம் சீர்த்த கல்வியினையும், கூர்ந்த அறிவினையும், தவமுயற்சிகளையும் இனிதுகாட்டுவனவாம். இப்பெருந்தகையாளர் இறைவன் திருவடிநீழலெய்தினரென்பது கேட்டுச் செந்தமிழுலகம் துன்பக்கடலில் மூழ்கினது.

இவ்வறிஞர்பெருமானை இழந்து துன்பத்திற்கிடந்து வருந்தும் இவர்குடும்பத்தாருக்கு நம் அனுதாபத்தைத் தெரிவிக்கிறோம்.

— "தமிழகம்", கோலாலம்பூர். (8-6-22)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Telegrams.

11. 3. 22

Sir P. ARUNACHALAM
COLOMBO.

Deeply grieved your father's death. Irreparable loss Tamil learning.

*Sir P. Arunachalam.*

9. 3. 22

S. CANDIAH PILLAI Esq.
Education office, COLOMBO.

Deeply regret. Tamil damsel lost her inestimable necklace. Irreparable loss to Tamildom. Accept heart-felt Condolence. May he rest in Sivam.

*S. Candiah Pillai.*

9. 3. 22

T. KANAGASUNDARAMPILLAI Esq. B. A.
MADRAS.

By your father's death Tamil world has sustained irreparable loss. Accept heart-felt Condolence.

*Kanagasundaram.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

17. 3. 22

St. M. P. T. PETHACHCHI CHETTIAR Esq.
ZEMINDAR OF ANDIPATTI AND
VICE PRESIDENT, MADURA TAMIL SANGAM.

Extremely sorry. Your father's demise is a great loss to the Tamil world. Please accept my heart felt Condolence.

*Zemindar of Andipatti.*

---

9. 3. 22

THE RAJA OF RAMNAD
RAMNAD.

Extremely sorry. Great loss Tamilakam.

*Sethupathy.*

---

9. 3. 22

K. C. NATHAN Esq.,
Proctor S. C.
COLOMBO.

Tamil lost brightest jewel. Be consoled.

*Nathan.*

---

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பச்சையப்பன் காலீஜ் தமிழ்ச்சங்கம்.

சென்னை. 14. 3. 22

அன்புடையீர்,

செந்தமிழிலும் சித்தாந்தநூல்களிலும் வடமொழியிலும் மிகுந்த ஆராய்ச்சியுடையராய்ப் பல ஆண்டுகளாகத் தமிழ்நாட்டில் பெரும் புகழ்வாய்ந்து திகழ்ந்த பெரும்புலவராகிய சுன்னுகம் குமார சுவாமிப்புலவரவர்கள் சிவபதமடைந்தனரெனக் கேள்வியுற்றுப் பெரிதும் வருந்துகிறேம்.

சத்துள்ள புலவர்களில் ஒருவராகிய அன்னூர் அடைந்தபுகழ் நிலவுலகில் நிலவுக.

மோ. கந்தசாமிமுதலியார்
ஷை சங்கத்தின்
உதவித்தலைவர்.

---

மதுரைத் தமிழ்சங்கம்
மதுரை, 13-3-1922

ஐயா,

பண்டிதர் ஸ்ரீமத். அ. குமாரசுவாமிப்பிள்ளையவர்கள் காலஞ் சென்றதாக எழுதிய கடிதம் கிடைத்தது. அவர்களது அருமை வாய்ந்த கல்வியறிவின் பயன்கள் இன்னும் இவ்வுலகம் நெடுநா ளனுபவிக்கும் பாக்கியம் பெற்றிலது; யாமெவ்வனம் பெறுவம். ஆயினும் அவர்கள் புகழுடம்பில் நிற்றலால், மண்ணகத்தும் விண் ணகத்தும் புலவர்பலரும் போற்ற நிலவுவர். ஆதலால் யாமும் ஒருவாறு ஆறுதும்.

தங்கள் அன்புள்ள
திரு. நாராயணையங்கார்.

---

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீமத். ரா. இராகவையங்கார் அவர்கள்
சமஸ்தானவித்துவான்
இராமநாதபுரம்.

இராமநாதபுரம்
28. 4. 22.

அன்பரவர்கட்கு விஞ்ஞாபனம்,

தங்களருமைப்பிதாவும் பெரும்புலவருமான ஸ்ரீமத். குமாரசுவாமிப்பிள்ளையவர்கள் இறந்தசெய்திதெரிந்து மிகவும் வருந்துகின்றேன். தமிழுலகிற்கிஃதோர் பேரிழவேயாகும். பல்வகையானும் நிரம்பிய இவரன்ன கல்வியறிவினரை இக்காலத்திலே காண்பதரிது. யானிங்கில்லாமல் சிலகாலம் வெளியூரிலிருந்ததனால் செய்தி உரியகாலத்தே தெரிந்திலேன். தங்கட்கு நேர்ந்த இப்பெருந்துயரத்தைத் தங்கள் அறிவாற் பொறுக்கும்வண்ணம் இறைவனருளுக.

இங்ஙனம்
தங்கள் அன்பன்
ரா. இராகவையங்கார்.

---

K. AMIRTHALINGAM PILLAI Esq. B. A.
MADRAS.

My Dear Sir,

I was deeply sorry to learn the news of your father's death. I sympathise with you in your bereavement. Not only his friends, but his Country has lost a distinguished scholar in the person of your father.

Yours sincerely,
*K. Amirthalingampillai.*

---

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*From*

ப்ரம்ஸ்ரீ. வே. சாமிநாதையரவர்கள்
சென்னபட்டணம்.

Triplicane, 23-3-1922.

உ
சிவமயம்.

ஐயா,

உங்களுடைய அருமைத்தந்தையாரவர்களும், வித்துவ இரத்தினமுமாகிய குமாரசுவாமிப்பிள்ளையவர்கள் தேகவியோகமடைந்த செய்தி அறிந்து மெத்த வருத்தமடைந்துகொண்டேன். என்ன செய்யலாம். தமிழின் நிலைமை இவ்வாறாகின்றது. என் வருத்தத்தை இஃடருக்கெல்லாம் தெரிவிக்க வேண்டுகிறேன்.

இங்ஙனம்
வே. சாமிநாதையன்.

---

*From*

Hon'ble Mr. K. BALASINGHAM
COLOMBO.

Cambell's place
Colombo, 9-3-22.

Dear Mr. Ambalavanar,

The death of your father is a great loss to Jaffna and the whole of the Tamil land. He was undoubtedly the foremost Tamil scholar of the day. He has kept the torch of Tamil learning bright for many years and I do not see any one in Jaffna to take his place. Please accept my sincerest condolence.

Yours sincerely,
*K. Balasingham.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Tellipalai,
*From* 14th March 1922.

V. MUTTUCUMARU Esq. M. A.

Dear Mr. Ambalavanar,

I was very sorry to hear the death of your father. He was one of the very few in Jaffna whom I truly honoured and still honour. His death is a great loss to all the Tamil land, and I feel that an age has passed away with him. I regret pressure of business has not permitted me to see you personally Please Convey my message of condolence to your brother.

Yours sincerely
*V. Muttucumaru.*

---

PROCEEDINGS OF THE MEETING OF THE
MANAGING COMMITTEE OF THE
MADURA TAMIL SANGAM
Held on 27-8-22.

*Resolution No.* **6.**

சங்கத்தின் வித்தியாவிஷய ஆலோசனைச்சபை அங்கத்தினராகிய மகா. ா. ா. ஸ்ரீ. அ. குமாரசுவாமிப்புலவரவர்கள் காலஞ்சென்றமையாற் சங்கத்துக்கேற்பட்ட பெருங்கஷ்டத்தைக் குறித்துச் சங்கத்தார் அநுதாபமொழி கூறும்படிக்கும், மேற்படியாரின் குடும்பத்தார்களுக்குச் சங்கத்தாரின் அநுதாபத்தைத் தெரிவிக்கும்படிக்கும் சங்கநிர்வாக சபையார் தீர்மானித்திருக்கிறார்கள்.

B. இராஜராஜேஸ்வரசேதுபதி
President.

**Lakshiminarayanan**
Manager.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீலஸ்ரீ. ஆறுமுகநாவலரவர்கள் மருகரும் மாணாக்கரும்
வித்துவசிரோமணியுமாகிய
ஸ்ரீமத். ந. ச. பொன்னம்பலபிள்ளை அவர்கள் மாணாக்கர்

## ஸ்ரீமத். சுவாமிநாதபண்டிதர் அவர்கள்

இயற்றிய கவிகள்.

—:O:—

### ஆசிரியவிருத்தம்.

நன்மதி யமைச்சுப் போல நங்களுக் கேற்ப சொல்லிப்
பன்மதி யறிஞர் யாரும் பளகறப் புகழப் பெற்ற
பொன்மதிக் குமார சாமிப் புலவனைச் செகுத்த லாலே
துன்மதி வருட மென்று தூற்றின ரிந்த வாண்டை.

### வேறு.

என்னிருகண் மணியனைய வேந்தாலோ
வென்னுயிரி னினிமை யாக
உன்னுயிரை யுளங்கொண்டு மூரைப்பவற்றை
யுறுதியென வுவந்தும் வந்தேன்
என்னிலைமை யிதுவாக விருப்புலவர்
சிகாமணியே யிகந்த தென்னே
நின்னிலைமை நினைதோறு நெஞ்சுருகு
மென்புநெகு நீதான் பேசாய்.

### கட்டளைக்கலித்துறை.

நித்தியம் வீறு ணிசழா நியம நினைந்துநெஞ்சிற்
பத்திய மெத்தனை பண்டிதர் மெச்சப் பளகிலவாங்
கத்திய மெத்தனை கண்டனன் மற்றெவர் காண்பரிது
சத்தியஞ் சத்திய மென்றறிந் தார்நனி சாற்றுவரே.

பண்டிதர் பற்பலர் பாவலர் பற்பலர் பாரடக்க
மண்டின ரேனு மவரா லெமக்கு வருபயனென்
எண்டிசை போற்று குமார சுவாமி யெனும்புலவன்
கண்டிடு நன்மை கணிப்பவர் யாரினிக் காண்பவரே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அநுபந்தம்.

திருவாவடுதுறையாதீனத்துச்
சைவசித்தாந்தப் பிரசாரகர்
தாத்துக்குடி
வித்துவான்
ஸ்ரீமத். பொ. முத்தையாபிள்ளையவர்கள்
இயற்றிய
கவிகள்.

—:—

1. செந்தமி ழெனுந்தாய் பெற்ற செல்வமே சிறப்பு வாய்ந்த
செந்தமிழ்ப் புலவ ருக்கோர் இலகமே சிறியே னுள்ளஞ்
சிந்தனை செயும்போ தெல்லாம் தித்திக்கும் அமுத ஆற்றே
எந்தையே குமார சாமிப் புலவநீ எங்கே சென்றாய்.

2. வடமொழி வல்லார் தாமும் வரையறுத் துரைக்க லாற்றா
திடருறு மிடங்க டன்னின் இடரறுத் தியம்ப வல்ல
திடமினி யனைப்போல் யாரே செப்புதற் குரிய ராவர்
உடல்நிலை யிலதா மேனும் உன்பிரி வாற்று கில்லேன்.

3. உலகினை யிறந்து நின்ற தானுரு வென்ன வோர்ந்திவ்
வுலகினைத் துறந்தாய் போலும் உனக்கது சாலு மேனும்
உலகிலெம் போல்வார்க் செல்லாம் உறுதுணை யின்றிச் சென்ற
தலகுள வளவு மாற்றேம் ஓங்கருள் பெற்று வாழி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

புலவரவர்கள்
மாணவருள் ஒருவரும்
கொழும்பு அரசினர் ஆசிரியகல்லூரித்
தமிழ்ப்பண்டிதராயிருந்தவருமாகிய
தென்கோவை

## ஸ்ரீமத். ச. கந்தையபிள்ளை

இயற்றிய கவிகள்.

—:0:—

### நேரிசை வெண்பா.

1. செந்தமிழ்தேர் மாணவருஞ் செய்ய தமிழணங்கும்
நொந்து புலம்புதிற னோக்கரிதே—அந்தமில்சீர்ச்
சுன்னைக் குமார சுவாமிப் புலவனரன்
பொன்னுலகம் புக்கமர்ந்த போது.

(மன்னைக்காஞ்சி.)

2. சுன்னைநகர் மேய சுகுணன்மன் செந்தமிழும்
மன்னு வடநூலும் வல்லவன்மன்—பன்னும்
குரவர் பிரான்மன் குமார சுவாமி
வரகவிமன் மாதவத்தோன் மன்.

### கட்டளைக்கலித்துறை.

3. மன்னிய செந்தமிழ் நூலுட னாரிய மாமொழியில்
துன்னும் பலகலை நுண்பொருள் யாவர்க்குஞ் சூழ்ந்துரைத்துத்
தன்னொப் பவரித் தமிழ்நாட் டிலரெனச் சாற்றநின்றோன்
சுன்னைக் குமார சுவாமிப் புலவர் தொழுங்குருவே.

4. அரும்பொருட் டண்டி யலங்கார நம்பி யகப்பொருளே
திருந்திய காரிகை ராமா யணமுதற் செந்தமிழ்நூற்
பொருந்திய நுண்பொரு ணன்கு தெளித்த புலமையினோன்
மருந்துறழ் கேள்விக் குமார சுவாமி மகிபதியே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. பொய்யி லாளத்தன் புலமையின் மேம்படு புண்ணியத்தோன்
வையம் புகழு முபகாரி சீலன் மறைமுடிவாஞ்
சைவந் திகழும் பலவாண வள்ள றலைப்புதல்வன்
செய்யன் குமார சுவாமிப் புலவர் சிகாமணியே.

6. தீஞ்சுவை யாருங் கவியாற் றிருத்தக்க தேவனென்கோ
மேம்படு கல்வி யறிவா லொழுக்க விழுப்பத்தினால்
தாய்பிற ரொவ்வாத் திருவள் ளுவனெனச் சாற்றிடுகோ
பூம்பொழிற் சுன்னைக் குமார சுவாமிப் புலவனையே.

7. சாலித் தடவயல் சூழுஞ்சுன் னைத் தனிநகரான்
மாலுக் கரிய மலரடிக் கன்பன் வரம்பிலவாம்
தோலென் றிலகுதொன் னூறோர் குமார சுவாமியில்லை
போலிப் புலவருக் கேயினிக் காலம் புகன்றிடினே.

8. முன்னூறு மாறு முகநா வலனில்லை மூதுணர்ந்த
பொன்னனைய பலப்பெயர்த் தேசிக னில்லைப் புலமைநிறை
சுன்னாக குமார சுவாமியு மில்லையித் தொல்புவியில்
என்னை யினியார் தமிழ்நூ லுரைக்கு மியல்பினரே.

9. சீரார் தணிகைப் புராண முதலாஞ் செழுந்தமிழ்நூல்
ஆராய்ந் தெமக்குமுன் னோதிய நீர்மை யறிந்துநிதம்
ஏரா ரிறைவ னடிமலர் வாழ்கவென் றேத்தலன்றி
நேரார் குமார சுவாமிக்குச் செய்வதென் னேருறவே.

நேரிசை வெண்பா.

10. சுன்னைக் குமார சுவாமிப் புலவர்பிரான்
மன்னுந் தமிழ்வளர்த்து மாண்புகழைத்—துன்னினன்
தோன்றிற் புகழொடு தோன்றுக வஃதிலார்
தோன்றலிற் றோன்றாமை நன்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடமொழி தென்மொழி வித்துவான்
மகிபாலன்பட்டி
## ஸ்ரீமத். மு. கதிரேசன்செட்டியாரவர்கள்
இயற்றியன.

—::—

வெண்பா.

1. முந்நீர்த் திரைக்கரத்தான் முத்திறைக்கும் யாழ்ப்பாணச்
சுன்னாகத் திற்பிறந்த தோன்றலே—முன்னறிவிற்
கற்ற குமார சுவாமீ கவிஞருள்
உற்ற புகழெஞ்சின் றே.

2. கூடல்வரு செந்தமிழிற் கூடும் பொருள்வினவி
நாடவருங் கட்டுரைக ணல்கினோய்—தேடிப்
பொருளுரை நூல்கூறிப் புகழ்விளைத்த நின்னே
வெரியின் சுவையாயிற் றே.

3. வாழூர்த் தமிழ்நிலத்து மக்களெலாம் துன்பமுறச்
சூழவ் குமார சுவாமிநீ—யீழமெனு
நாடொரீஇச் சென்றுயர் நாகமு மீழமய
நாடென்ப தோர்ந்திலைகொ னன்று.

4. சொல்லாய்ந் தரும்பொருளுந் தோன்றவெழு துந்திறனோ
நல்லோய்நின் பாலமைந்த நற்குணமோ—பொலலா
விதனப் புரைதீர்க்கு மெய்யன்பர் பாலன்போ
எதனைப்பா ராட்டு வோம்.

5. பாயசடைப் பரமன் பாதநிழ லெய்தினையேற்
றூய குமார சுவாமிநீ—மேயபே
ரின்ப நுகர்வா யிருநிலத்திற் றோன்றுவையேல்
அன்பிற் றமிழ்புரப்பா யால்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

V. P. SUBRAMANIA MUDALIAR
Dy. Superintendent C. V. D.
(Retired.)
Surandai, Tinnevelly,
**India.**

---

என்றுமுள தென்மொழியில் வடமொழியில் இலக்கியத்தில் இலக்கணத்தில், நன்றுபயில் மாணாக்கர்க் குயர்குருவாய் நூல்கள்பல நலக்கத்தந்தோன், துன்றெழில்கூர் சுன்னாகக் குமாரசுவாமிப்புலவர் தூயசீர்த்தி, நின்றிலக இவ்வுலகை நீங்கினன் அறிஞர்மனம் நீங்கிலானே.

---

கும்பகோணம்
(Town High School)
தமிழ்ப்பண்டிதர்
**ப்ரமஸ்ரீ. உ.வே. சா. வேங்கடராமையர் அவர்கள்**
இயற்றியன.

---

1. தனித்தமிழ் வழங்கு மீழ
 மண்டலந் தனில்யாழ்ப் பாணம்
தனிற்புக ழெவர்க்குந் தாமே
 யென்பவன் மானத் தான்செய்
இனிப்புறு முறைகள் பாக்கள்
 பெயர்ப்புக்க ளினைய வற்றால்
எனைப்புகழ் தமையும் பெற்றோ
 னெவனென வியம்பி லன்னான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தண்டமிழ் வள்ளாஅல் தமிழ்நாடு போற்றுந் தகுதியிக்கோய்
பண்டுள வாரிய நூலும் பயின்று பலபெயர்த்தோய்
மண்டனில் வாழ்புல வோர்க்கு விருத்திடும் மாண்புலவோய்
எண்டகு விண்புல வோர்க்கு விருந்தென வெய்தினையே.

---

யாழ்ப்பாணம்

வண்ணார்பண்ணைச்

சைவப்பிரகாச வித்தியாசாலை உபாத்தியாயர்

## ஸ்ரீ. தி. கிருஷ்ணபிள்ளையவர்கள்

இயற்றியன.

—:0:—

### ஆசிரியவிருத்தம்.

பொன்னாக மதித்துமிக ஞாலம் போற்றப்
புகழான பெருங்குணங்கள் பொருந்தி யோங்கிச்
சுன்னாகப் பதிவாழ்வார் தம்மின் மேன்மை
துலங்கிடுமம் பலவாணத் தோன்றல் பெற்ற
மன்னாக மதித்தபெயர்க் குமார சாமி
மதிப்புலவ விலக்கணநூல் வரம்பு தோன்றப்
பின்னாக வேறுமொரு புலவ ருண்டோ
பெருந்தகுதி நூலுரைக்கும் பெருமை யோரே.

முற்காலத் திருந்தசங்கப் புலவ ரென்ன
முழுதுணர்ந்த மூதத்புலவ ரிவரே யென்று
பிற்காலத் தவர்கூறுங் குமார சாமிப்
பெரும்புலவர் சிகாமணிபோ போன பின்னர்
சொற்கால வுரையமைந்த தொன்மை நூலுந்
துகளகற்றிச் சுவைபயப்பச் சொல்வா ரில்லை
தற்காலத் தெழுந்தபல புதுமை நூலுந்
தலைகியிர்ந்து தனியெழுந்து சாலும் மன்றே.

---


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம்

வண்ணார்பண்ணைச் சைவப்பிரகாசவித்தியாசாலை

ஆசிரியர்

பிரமஸ்ரீ. சீ. முருகேசையரவர்கள்

இயற்றியது.

—:O:—

## ஆசிரியப்பா.

திருத்தகு புலவர் தினந்தொறு மகிழ
உருத்தகு பலபொரு ளுவந்தருள் செய்தலில்
சுன்னாகந் தோன்றிச் சுடரென விளங்கலில்
மன்னைகந் தங்கு மயிலணி தரித்தலில்
அம்பல வாண ரார்வத் துதித்தலில்
நம்பல விடுக்கண் நாடகக் களைதலில்
ஆறு முகனு லலர்தரு மருந்தமிழ்
தேறு நிலையம் தெளிவுற விளக்கலில்
சகத்தியந் திசைவுறச் சார்தரு மிலக்கணம்
அகத்தியற் கமைவுற வார்வத் துதவலில்
அன்பி னைந்திணை யகப்பொருள் நூலுரை
இன்பந் தோன்ற விருந்தவை தெரித்தலில்
மன்னுஞ் சத்தியால் மாவினை வீழ்த்தலில்
உன்னுங் கடாவிடை யுயர வெழுதலில்
புலவ ரிடுக்கண் புறந்தரக் காண்டலில்
குலவு மாயைக் குன்றந் தகர்த்தலில்
குவலயம் விரும்புங் குமார சுவாமியாக்
குவலயம் விரும்புங் குமார சுவாமியின்
மறைப்பதம் வணங்கி மனங்கொடு போற்றி
நிறைப்பிணி நீங்கி நிலவுவம் நிலத்தே.

---

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. வடகலை யுணர்ந்தோன் றெய்வ
மறைவழி யொழுகுஞ் சீலன்
திடமுள மனத்தா னானுஞ்
செழுந்தமிழ்த் திருத்தொண் டொன்றே
கடனெனப் புரிந்தோன் கேட்போர்
களிப்புற வுரைக்குஞ் சாந்தன்
மடமொருங் ககற்றி வாழ்ந்தோன்
மன்னரும் மதிக்கப் பெற்றோன்

3. சங்கரப் பெயர்கொண் டாதிக்
கடவுளே தோன்றி யாண்ட
செந்தமிழ் சிறந்த பாண்டித்
திருநகர் மதுரை தன்னில்
செந்தமிழ் வளர்த்த பாண்டித்
துரையெனுஞ் செம்ம லன்பால்
தந்தநற் கழகத் தாய்ந்த
தனிப்பெரும் புலவனா னோன்

4. செந்தமிழ் மொழியுஞ் சைவ
சமயமுஞ் சிறக்க வென்றே
வந்திவ ணுயர்ந்தோ னாறு
முகவள்ள லன்று மன்னத்
தந்தநற் றமிழ்த்தேர் கல்விச்
சாலையின் றலைவ னாகிச்
சந்தத மவைக்கு ழைத்தோன்
சற்குணன் குமார சாமி

5. அன்னவன் புகழும் வாழி
அவன்வழி பெரிதும் வாழி
மன்னுதென் மொழியும் வாழி
வடமொழி வாழி மண்ணிலை
துன்னிய வுயிர்கள் வாழி
துயரொருங் ககற்றி நாளும்
நன்னெறிச் செல்வோர் வாழி
நானிலம் வாழி வாழி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரமேசுரக் கல்லூரித்
தலைமைத் தமிழ்ப்பண்டிதர்
## ஸ்ரீமத். நவநீதகிருஷ்ணபாரதியாரவர்கள்
இயற்றியன.

—:o:—

**1**

ஒழியாத வருட்குமர சாமிமன்றே
நீவிண்ணை யுற்ற போதில்
அழியாத தமிழ்த்தாயி னுயிர்நிலையுங்
கலக்கமுற்ற தாகி லுன்றன்
பழியாத பெரும்புலமைத் திறனோயா
விடற்கெளிதோ பண்பார் சோவே
கழியாத அன்புசெய்தா யெம்மோர்க்குங்
கருணையிதோ கழறு வாயே.

**2**

ஒண்மைமணி யொடுபோலி மணிமலிவுற்
றுறழ்ந்ததென ஆற்றுக் கல்வி
வண்மைநிறை புலவரொடு புன்புலவர்
மயங்கியினி வாது செய்வார்
வண்மைகொடு வயிற்றினுக்காத் தமிழ்மறந்து
போலிச்சீர்க் கேமாந் தோரைக்
கண்மைகொடு பாராத பெருங்குமர
சாமிவிண்ணைக் கலந்த தானே.

**3**

சேய்நிகர்த்த தமிழ்க்குமர சாமிவள்ளல்
சேர்ந்துவிண்ணிற் சிறப்புற் றுறனல்
நோய்நிகர்த்தி ரினியேனு நும்முற்ற
நோக்குவிரோ நோக்கி லென்றும்
தாய்மொழியை நிலைநிறுத்தல் வேண்டுமெனத்
தெருவெல்லாஞ் சாற்றிச் சாற்றி
நாய்நயக்குந் தவிசென்னத் தமிழறியார்க்
குயர்தவிசு நயந்தீங் கீரே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராமநாதன் கல்லூரித்
தமிழ்ப்பண்டிதர்
சாவகச்சேரி

## ஸ்ரீமத். ச. பொன்னம்பலபிள்ளையவர்கள்

இயற்றியன.

—o—

### வெண்பா.

சொன்மதிக்கும் பாமதிக்குஞ் சூழ்மதிக்கும் பாவலர்தம்
பன்மதிக்கும் பாரிற் பலர்மதிக்கும்—மூன்மதிகாண்
நாமிப் புலவமதி நாடிற் குமாரசு
வாமிப் புலவர் மதி.

சுன்னைக் குமார சுவாமிப் புலவரைப்போற்
பின்னைப் புலவர் பெரிதிருந்தும்—என்னைமுன்னைப்
பன்னூலுட் பல்லுரையுட் பன்னுபஞ்ச லக்கணத்துள்
எந்நூலைச் செய்தா ரிவர்.

### கட்டளைக்கலித்துறை.

பாடுந் திறத்தினிற் றொன்னூலிற் பண்டிதர் பாற்பிழைகள்
தேடுந் திறந்தனிற் கண்டனந் திட்டலிற் சீர்மதுரை
கூடுந் தமிழ்ச்சங்க நன்னூல்க ளாய்தலிற் கூறுமிந்த
நீடுங் குமார சுவாமிப் புலவர்க்கு நேரில்லையே.

காவலன் பின்னரும் வித்வ சிரோமணி நல்லுரைசொல்
ஆவலன் பொன்னம் பலமெனு மாதவ ரத்தமித்தும்
பாவலன் ஞனிக் குமார சுவாமிப் பரிதியிந்நாள்
ஓவலன் மாண்டது யாழ்ப்பாண மாதுக் கொருகுறையே.

திரித்திப மென்ன வணையாமற் செந்தமிழ்த் தேயமெங்குங்
கிரித்திப மாகப் புகடந்து மேருக் கிளைக்குவட்டின்
கிரித்திபச் சுன்னைக் குமார சுவாமிக் கிளர்புலவன்
திரித்திப மென்ன வணைந்தா னிதற்கினிச் செய்வதென்னே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுன்னாக முன்னை முருகேசன் சங்கரன் சொல்வரதன்
பன்னாக முத்துக் குமாரன் முதலுள்ள பண்டிதர்தன்
பின்னாகத் தாமொர் வடிவாக வந்து பிறந்தவன்காண்
துன்னாகச சீர்க்கலை விஞ்சுங் குமார சுவாமியுமே.

---

௨

புலவர்மாணவருமொருவரும்

நியாயதுரந்தரருமாகிய

## பண்டிதர் ஸ்ரீ. க. சிதம்பரநாதனவர்கள்

இயற்றியன.

—:0:—

### கட்டளைக்கலித்துறை.

திருவாழ்ந்த வீழத் தியாழ்ப்பாண நாட்டுத் திலதமென
வருவாழ்ந்த மேவரியி னண்ணிறை தண்ணளி யொன்னலர்க்கு
வெருவாழ்ந்த வாய்மை விளக்கினன் செந்தமிழ் வேட்டுவக்
குருவாழ்ந்த சுன்னைக் குமாரசு வாமிக் குலமணியே. (௧)

பூவார் மதுதெளித் தாங்குரங் கத்தமிழ்ப் போதலர்த்தி
நாவார மாணவர் மாந்திட வார்த்து நயப்பகுதிக்
கோவார் பைந்தூது குழைத்து வடகிற மேகுயிற்றிக்
தேவார மாவக ராதிசெய் தான்சுன்னைத் தேமணியே. (௨)

அள்ளிக் கொடுக்கு மழுவென யாப்பணி யாய்பொருளால்
தெள்ளித் தமிழ்மொழித் தீஞ்சுவை தித்திக்கச் செய்துமனத்
துள்ளிற் குடிகின் வெழுக்காற்றி னூங்கு முயர்சரபப்
புள்ளிற் கவிகள் புலங்காத் தனன்சுன்னைப் பொன்மணியே. (௩)

முன்னாள் முச்சங்க நிலைத்தெனப் பாண்டித் துரைமுயற்சி
தன்னால் மதுரைத் தமிழ்ச்சங்க நான்கெனத் தானிலவ
இன்னாள் வையு மிலக்கண வேந்த லெனநிறைந்தான்
சுன்னாக வாசன் குமார சுவாமிச் சுடர்மணியே. (௪)

---

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வண்ணை நகர்

வித்துவான்

## ஸ்ரீமத். க. வைத்தியலிங்கபிள்ளையவர்கள்

இயற்றியன.

—o—

கட்டளைக்கலித்துறை.

பாடற் றுறையி லுலகோர் டறிந்து புலவனென்று
ஓடற் குரிய குமார சுவாமிக் குரவனுயர்
ஆடற் பரிதப் பாண்டித் துரையன் றமைத்தவெழிற்
கூடற் றமிழ்ச்சங்க வித்வா னரனடி கூடினனே.

சுன்னாக வாசன் குமார சுவாமி துலங்குகவி
மன்னாக வைகிப் புவியோர் பயில வயங்குசங்க
முன்னாக வேறும் பலநூல்க ளச்சிட்டு முற்றியபின்
நன்னாக பூஷணன் பாதார விந்தத்தை நண்ணினனே.

---

அல்வாய்ச் சைவப்பிரகாசவித்தியாசாலை

உபாத்தியாயர்

## ஸ்ரீமத். க. சின்னத்தம்பிப்பிள்ளையவர்கள்

இயற்றியன.

—::—

கட்டளைக்கலித்துறை.

தன்னிக ரில்லாத் தமிழ்க்குரி யார்செய் தவக்குறைவோ
தென்னிலங் காநங்கை செய்தவ மாற்றச் சிறியதுவோ
சுன்னை நகர்செய் தவக்குறை வோசிவ தொண்டதிலே
மன்னுங்கு மாரசு வாமிப் புலவன் மடிந்ததுவே.

நல்லூரி ராறு முகநா வலன்சைவ நற்பயிரைப்
பல்லாண்டி னிற்பிர சங்க மழைபெய்து பாலித்தனன்
தொல்லோ னவனினைப் பைங்கூழ் புரக்குந் தொழிலதனில்
வல்லோ னெனவெண்ணி யேயபண்டி தாவேன் மறைந்தனையே.

---

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிதம்பரம்

நாவலர் கலாசாலை

முதலுதவியாசிரியர்

## ஸ்ரீமத். ச. ஜகநாதையரவர்கள்

இயற்றியன.

—::—

### கட்டளைக்கலித்துறை.

தென்மொழி யாரும் வடமொழி யாருந் தெளிந்திடவே
பன்மொழி தாமும் பகர்ந்து பலபல பாவினங்கள்
தன்மொழி யாகச் சகத்தி னிறுவித் தனிமுதலின்
நன்மொழி பெற்றவ ணைப்பு பதாம்புய நண்ணினனே.

பாரி னுளாரும் பகர்சுற்ற மாதிய யாவருடன்
ஊரி னுளாரு மொருங்கு துயர்க்கட லுற்றிடவே
மாரியி னற்பிர சங்க மொடுகவி மாண்புபெற
வேரியி னாற்றிய பாவலன் விண்ணுல கெய்தினனே.

---

புலவரவர்கள் மாணவர்

மட்டுவில்

## ஸ்ரீமத். சி. கணபதிப்பிள்ளை

இயற்றிய கவிகள்.

—:0:—

### கட்டளைக்கலிப்பா.

கற்றி லாதவர் சொல்லெழு நூலினைக்
கண்டு புன்னகை கொண்டிடு காட்சியும்
சொற்க ணேரிய சீரிய கூரிய
சூழ்ந்து நாற்கவி செய்திடு சூழ்ச்சியும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பற்ப லாயிர மாயிர மாகிய
பன்னு செந்தமிழ்ச் சொற்பசர் மாட்சியும்
முற்ற நிந்தமு தக்குறை வாளனே
முன்ன லூழில னென்றினிக் காண்பதே.

## ஆசிரியவிருத்தம்.

செந்தமிழு மாரியமுந் தேர்ந்து வீறித்
தேசமெலாஞ் சென்றிலகுஞ் சீர்த்தி யொன்றே
இந்தநில மிசையிருப்ப விணையி லாத
எண்ணில்பல கவிதழைத்த வினிய வாயும்
அந்தமிலாக் கலைகள்பல வெழுதி வைத்த
அப்புயமோ திருக்கரமு மந்தோ! வந்தோ!!
இந்தனத்திற் செந்தழலி னுருகி வீய
யாமிதனைப் பார்த்திருந்த தெலன்னே! யென்னே!!

---

புலவரவர்கள மாணவர்
மட்டக்களப்பு மண்டூர்

## ஸ்ரீமத். ஏ. பெரியதம்பிப்பிள்ளையவர்கள்

இயற்றியன.

—o—

## வெண்பா.

சுன்னைக் குமார சுவாமிப் புலவர்பிரா
னிந்நிலம்விட் டேகினு னென்றுரைத்தா—ரென்னே
இனியா ரிவனைப்போ லெவ்விதத்தி லேனு
மினிவரமாட் டாரென்செய் வேம்.

## கோச்சகக்கலிப்பா.

கலைநிறைவு படைத்துடைய கடலனைய புலமையரும்
நிலைபடைத்த நினையடுத்து நிகழ்த்துவதல் லாலெதுவு
மலையளக்க ரவனிமிசை யறைவதுவு மறிவாரோ
குலமணியே குலமணியே குலவுதமிழ்ச் சபைமணியே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அநுபந்தம்.

எனையடைந்த மடமையெலா மிரவிமுனர்ப் பனிபோல
வுனையடைந்த வுடனொருங்கே யழிந்தொழிந்து போயினவே
உனையிழந்திவ் வுலகிருந்தே யுறுபயனென் றினியறியேன்
றனையடைந்தோர்க் குறுதுணையே தமிழ்மகண்மங் கலவணியே.

வேரீநற வெழுகிதழி விரிசடையோ னடனபத
மாரியநீ யடைந்தபின மணிமிசை யழகமைந்த
ஆரியத்தா னெங்குபுகு மருந்தமிழ்தா னெங்குபுகுஞ்
சூரியனை நிகர்குருசற் குணமணிபூ ஷணமணியே.

மண்மடந்தை யணியிழப்ப மாணவர்த மதியிழப்ப
வண்டடந்த தமிழறிஞ ரிழைத்திடுதஞ் செயலிழப்பக்
கண்ணனைகன் ற புலவர்யுளோர் கலங்கியனை வியிழப்ப
விண்ணகநீ யடைந்தசெயன் மிகக்கொடிது மிகக்கொடிதே.

என்னுயிருக் கொருதுணைவா வினியதமிழ்க் கொருதலைவா
பொன்மடந்தை கலைமடந்தை புரிநடங்கண் டிடுபுலவா
சென்னைநகர் வளர்குமர சுவாமியெனும் பெருந்தகவோய்
உன்னையகன் றுலகுதுய ரொடுபுலம்ப வொருநாளோ.

---

உ

சைவப்பிரசாரகர்

உடுவில்

## ஸ்ரீமத். வ. மு. இரத்தினேசுரஐயரவர்கள்

இயற்றியன.

—::—

பலத்திற னீங்கிய பேரறி வோய்மிகு மாணவர்கள்
புலத்தி விலக்கிய லக்கணம் வைத்த புலமையினுய்
நிலத்தின் மிகநின் றிலகிடச் செய்தனை நீடுவிண்ணின்
றலத்தும் வளர்க்க விரும்பிச்சொல் சென்றனை தண்டமிழே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரித்
தமிழ்ப்பண்டிதர்
ஸ்ரீமத். ஆ. மு. சோமாஸ்கந்தபிள்ளையவர்கள்
இயற்றியது.

—::—

கட்டளைக்கலித்துறை

முன்னர்த் தமிழ்தெரி முச்சங்க நூல்கள் முழுதுணர்ந்தே
பின்னர்த் தமிழ்தெரி சங்கப் புலவர்கள் பேணநின்ற
சுன்னைக் குமார சுவாமிப் புலவனின் நூலகடன்
மின்னுந் தமிழினுஞ் சேர்புக ழென்றும் விளிகிலதே.

---

புன்னாலைக்கட்டுவன்
சி. கணேசையரவர்கள்
இயற்றியன.

—.0:—

ஏகவிருத்தம் குமாரசுவாமிப் புலவர் சரிதம்.

திருமருவுயாழ்ப்பாணமேவுசுன்னைப்பதிச்
செம்மலம்பலவாணனுந்
திகழ்மேழியின்பெருஞ்செல்வற்கொர்செல்வனாய்த்
தேர்ந்துவடமொழிதென்மொழி
தருமருவுபொருள்புறஞ்சூழுமேழையிந்
றாமோதரன்றந்திடுந்
தமிழ்ப்பெருங்கழகநூடனுறுமூசகாவலத்
தனிமணிமுன்னவனைவைத்த
உரைமருவுகல்லூரிதனிலவாசிரியனா
யுற்றினிதுகற்பித்திடா
வோதுபலநூலுரைகள்செய்துதமிழ்நாட்டினுக்
கோர்தீபமெனவிளங்கி
வரமருவுபுகல்வனம்பலவாணர்பின்னையொடு
மற்றைமுத்துக்குமார
மைந்தனுந்துயர்கொளக்குமாரசாமிப்புலவ
மன்பன்விண்ணுற்றனனரோ.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### வெண்பா.

சங்கப் புலவர் தனிமதிப்புப் பெற்றிருந்தா
னங்கப் புலவ ரதிமதிப்புக்—தகுவான்
கூடினன்சொல் வின்னைக் குமாரசுவா மிப்பெயரோன்
பாடுக கவிஞர் பதி. (௧)

சென்னைக் குமார சுவாமிப் புலவமணி
மன்னுந் தலர்க்க மருவியபோ—தின்னன் மகிழ்
வெய்தினார் நூல்வழுக்க ளெய்தாமற் செய்திலார்
செய்குவார் தாமுந் தெசகம். (௨)

கம்பன் முதலோர் கவிநுண்மை நோக்கியுணர்ந்
தம்புலவர் தம்புலங்க ளார்வுபெறச்—செம்பொருள்க
டந்துநாட் டுக்குமார சாமிப் புலவனைப்போற்
புந்தியுடை யாரெவரிப் பூ. (௩)

### கட்டளைக்கலித்துறை.

வழுவின்றி நூல்பல கற்போர்க் குரைக்க மதியினொடும்
பிழையின்றி நூல்செயச் செய்யாரைக் காட்டப் பெரிதுரைகள்
பழுதின்றி நாட்டக் குமார சுவாமிப் பருமணிபோ
லிழிவின்றி யோங்குந் தமிழ்நா டெவரை யினியெய்துமே. (௧)

சுத்திகொ ளாய்தமிழ்ச் சென்னைக் குமார சுவாமியையாம்
வித்துவ சூடா மணியெனக் கூறிடல் வேண்டுங்கொலோ
சித்திர மாக வவன்மதி தீட்டித் திகழவைத்த
உத்தம மானபன் னூல்க ளொடுத்தினி தோதுமன்றே. (௨)

பெருந்தனு விட்டுக் குமார சுவாமிப் பெருமன்சென்ற
தருந்தமிழ் கற்பவ ராற்றுந் தவக்குறை வோவலதெம்
பருந்தமிழ் நாட்டின் றவக்குறை யோதமிழ்ப் [illegible]செயத்
விருந்தவப் பேற்றின் குறை[illegible] வெதுவென் [illegible]மே. (௩)

முற்றும்.

UNIVERSITY OF CEYLON
-7 FEB 1944
MICROFILMED
Positive 1
Negative 1/070
Reel No.
Date 6/12/91
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

MICROFILMED
Positive
Negative 1
Reel No. 1/070
Date; 6/12/91

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

UNIVERSITY OF CEYLON
LIBRARY

Class No. 894.811

Acc. No. 33613

This book is returnable on or before the last date stamped below.

11. MAR 1968

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

UNIVERSITY OF CEYLON
31 JUL 1952
LIBRARY

PRESS

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

033613

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org